அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் யூலை 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HomeLife Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# கனேடிய சிறுவர்கள் பருமனாகிறார்கள்

## எச்சரிக்கை மணி அடிக்கிறது ஆய்வறிக்கை

Active Healthy Kids Canada என்ற நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை ஒன்றின் படி கனடாவிலுள்ள சிறுவர்கள் தொடர்ந்து பருமனாகி வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடாவிலுள்ள சிறுவர்களின் உடல்பயிற்சி D தரத்தை அடைந்துள்ளதாயும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இந்த நிலை தொடருமானால் எதிர்கால சந்ததி பாரிய ஆபத்தை நோக்கும் எனவும் இதைத் தவிர்க்க உடனடி நடவடிக்கை தேவை எனவும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

கனடா சிறுவர்கள் வளர வளர அவர்களது உடல் சார்ந்த பணிகளின் (Physical activity) அளவு குறைவடைந்து வருகிறது. 90 வீதமான சிறுவர்கள் 90நிமிட அளவிலான சிறிய அளவு உடல் சார்ந்த பணிகளையோ உடற்பயிற்சியையோ செய்வதில்லை. 90 நிமிட உடற்பயிற்சியோ அல்லது உடல் பணியோ சிறுவர்களுக்கு அவசியம் தேவையானது.

ஆனால் மறுபுறத்தில் அதிகளவு ‘திரை’ நேரத்தை இவர்கள் பெறுகிறார்கள். 10 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் தினசரி 6 மணிநேரத்தை தொலைக்காட்சிக்கு முன்போ, கணினியுடனோ அல்லது வீடியோ கேம்களுடனோ கழிக்கிறார்கள். பெற்றார்களும், ஆசிரியர்களும் ஏனைய பெரியவர்களும் இந்த நிலை மாற்றமடைய சிறுவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என இந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அதிகளவு நேரத்தை கணினி மற்றும் தொலைக்காட்சிக்கு முன்பு செலவிடும் சிறுவர்களுக்கு படபடப்பு, மனப்பிறள்வு, நம்பிக்கையீனம் போன்றவை அதிகரித்து வருகின்றன. அத்துடன் உடற்பயிற்சி அதிகளவு இல்லாததால் விரைவாக பருமனாகி விடுகிறார்கள். அதனால் சிறுவயதிலேயே நீரிழிவு நோய்க்கு ஆளாகிறார்கள் எனவும், அது இதயநோய்கள் உருவாவதற்கு ஏதுவாக அமைந்துவிடுகிறது எனவும் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

பாடசாலை முடிந்ததற்குப் பிறகுள்ள நேரமே மிகவும் ஆபத்தானதாம். இந்த நேரத்திலேயே சிறுவர்கள் அதிகளவு ‘திரை’ நேரத்தைப் பெறுகிறார்கள். இதை மாற்ற பாடசாலைகளும், ஆசிரியர்களும், பெற்றாரும் பாடசாலைக்கு பின்பான உடல்சார் பணிகளை அதிகம் ஊக்குவிக்க வேண்டும் எனவும் இந்த அமைப்பினர் கூறுகிறார்கள்.




Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Property Mortgage Canada Inc.

Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E., Unit 202, Scar, ON

PMCI Property Mortgage Canada Inc.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க,
வீட்டிற்கான பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட (Appraisal)
தயங்காமல் உடனே அழையுங்கள்
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21 Affiliate Realty Inc.

வீடும் வீடுசார் விடையங்களுக்குமான பத்திரிகை

# Whatever your dream is ...

Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.



- *Up to 100% financing on purchase*
- *Discounted interest rates O.A.C*
- *Mtg. computer analysis - amortization schedules*
- *Second mortgages guaranteed for very low interest rates*
- *Debt Consolidation to 100% of value*
- *Mortgage investment opportunities*
- *Bank refusals restructured*
- *Real estate project (acquisition + development + construction)*
- *Residential, Commercial & Industrial*

LOOKING AFTER YOUR BEST INTEREST!





**SHANJITH (SHAWN) SATKUNANANTHAN**
**Senior Mortgage Consultant (AMP)**

**RAJANI SHANJITH**
**Mortgage Consultant**

**CENTUM** Advance Realty Inc
**(647)998.5450** / (416).290.1200

80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca

# வன்னியின் செல்வன்

## இரண்டாவது அத்தியாயம்



த.சிவதாசன்

### மங்களரின் கனவு

ஏற்கனவே அமளி துமளிப்பட்டுக் கொண்டிருந்த ரோஹண நாடடின் ஆட்சிக்கு சோதிடர்களின் கூற்றுப்படி பல துர்நிமித்தங்கள் தோன்றின. எங்கே தூமகேது தோன்றப் போகிறதோ என்று மக்கள் துயரப்பட்டுக் கொண்டார்கள். நாளுக்கு நாள் பண்டங்களின் விலை அதிகரித்தது. அரச தானியச் சாலை விரைவில் காலியாகிவிடும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றதுஎன்று களஞ்சிய அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டின் நிலைமை மன்னர் மகிந்தருக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. சோதிடர்களின் வாக்கு பலித்துவிடுமோ தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று மகிந்தர் நாளொரு குப்பியும் பொழுதொரு தொப்பியுமாக அரண்மனையிலேயே மறைந்து வாழ நேரிட்டது.

இந்த வேளையில் அரசரின் சகோதரரும் அந்தரங்க ஆலோசகருமான பசிலர் செய்தியொன்றைக் கொண்டோடி வந்தார். முன்னாள் அமைச்சரும் மகிந்தரின் பல அரசியற்களப் போர்களை முன்னின்று நடத்தி வெற்றிவாகைகளைச் சூடக் காரணமான வருமான மங்கள சமரவீரர் அரசருக்கு எதிராகச் சதியொன்றை மேற்கொள்ளுகிறார் என்பதே அச் செய்தி.

தன்னை எந்த உலக மகா சக்திகளாலும் அசைக்க முடியாதென்று இறுமாப்பிலிருந்து வந்த மகிந்தர் ஒரு கணம் ஆடிப்போய் விட்டார். என்ன இருந்தாலும் நாயக்கர் வம்சத்தின் அழுங்குப்பிடியிலிருந்து நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி மகாராணியை நாட்டைவிட்டே துரத்துவதற்கு உதவிசெய்த மங்களரர் இப்படியாகுவார் என்று எதிர்பார்க்கவில்லைத்தான்.

‘எத்தனை பேருக்கு வெகுமதிகளை அள்ளி இறைத்தேனே! உலகத்திலேயே தேவைக்கு மதிகமான அமைச்சர்களை நியமித்து அத்தனை பேருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பல்லக்கு தேர், குதிரை, யானை என்று அள்ளி அள்ளிக் கொடுத்தேனே! கஜானா காலியாகிய போதெல்லாம் புத்தம் புதிதாக பணத்தை அச்சடித்து அபிஷேகம் செய்தேனே! தூரதேசயாத்திரைகள் போகும் போதெல்லாம் நூற்றுக்கணக்கில் அமைச்சர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் கொண்டு திரிந்து இறக்கைக்குள் வைத்துப் பராமரித்தேனே! இப்படியாகி வீட்டதே’

இப்படி மகிந்தர் தலையிலடித்துப் புலம்பினார்.

இந்த நேரம் பார்த்து அமைச்சர் பர்னாந்துப்பிள்ளை உள்ளே வந்தார். மன்னர் மகிந்தருக்கு மிக நெருக்கமானவர். தமிழ் சிங்களவர் ஒருடலும் ஈருயிருமாக வாழ வேண்டுமென்பதற்கு உதாரணமாக வாழ்பவர் அமைச்சர் பர்ணாந்துப்பிள்ளை அவர்கள். மன்னரின் சிவப்பு உத்தரீயத்தின் தலைப்பால் ஏற்கனவே சிவந்து போயிருந்த கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டே சொன்னார்

“மன்னாதி மன்னா. இந்த மங்களரின் சதி பற்றி நீங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் ஆடசியில் தமிழ் மக்களைத் தவிர எந்த ஒரு உயிரையும் நீங்கள் புண்படுத்தியதில்லை. மக்கள் உங்கள் பக்கமிருக்கிறார்கள். புத்த சங்கங்கள் இரண்டும் உங்கள் பக்கம். போதாதற்கு தமிழர் பக்கத்திலிருந்து பல சிற்றரசர்கள் உங்கள் கால்களையே தினம் கழுவிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள இனத்துக்கே பெயரையும் புகழையும் பெற்றுத் தந்த கெமுனுமன்னரின் மறுபிறப்பே நீங்கள் தான் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்”

“உண்மையாகவா அமைச்சரே..?”

ஆமாம் மன்னா! இரண்டாம் கெமுனு என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்வதற்கு நீங்கள் தகுதியுடையவர்தான். எல்லாள அரசனின் மறுபிறப்பென்று மக்கள் அழைக்கும் கரிகாலனின் ஆட்சியிலிருந்து கிழக்கு மண்டலத்தை விடுவித்த பெருமை உங்களைத் தானே சேரும்”

“ஆமாம் அமைச்சரே… யாரங்கே அந்தக் குப்பிக்காரனை அழைத்துவரச் சொல்….

கலப்பதற்கு என்ன வேண்டும் அமைச்சரே.

ஜலமே போதும் மஹாவலியிலிருந்தல்லவா வருகிறது..”

மன்னர் மகிந்தருடைய கோபத்தை எப்படி அடக்கலாமென்ற ரகசியம் அமைச்சர் பர்ணாந்துவிற்கு நன்றாகவே தெரிந்திருந்தது. இருவரும் களிப்போடு ஏனைய அரச கருமங்களைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

“அமைச்சரே இந்த மங்களருக்கு நாம் என்ன குறை வைத்தோம். ஏன் இப்படி. உண்மையில் அவர் இல்லாவிட்டால் நாம் ஆட்சி அமைத்திருப்பதே சிரமம். சிற்றரசர் சோமவன்சர் போன்றவர்கள் கிளர்ச்சி செய்தபோது அவரோடு சமரசம் செய்து கிளர்ச்சியைக் கட்டுபடுத்தியவர் இந்த மங்களர். இப்போது அந்த கபடர் சூரியாராய்ச்சியோடு சேர்ந்து எனக்கெதிராகச் சதி செய்கிறார். என் சகோதரர் கோதபாயரிடம் சொன்னால் ஒரே நாளில் இருவரையும் வெண் புரவிகளிற் கொண்டுபோய்த் துவம்சம் செய்துவிட முடியும். ஆனால்….”

மஹிந்தர் மீசையை முறுக்கினார்.

“அரசே எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. மங்களரின் சதியின் பின்னால் வலுவான அந்நிய தேசங்களின் உதவிகள் இருக்கலாம். அவர்கள் எல்லோருடைய நோக்கமும் கரிகாலனை ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதே. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆண்ட சோழ சாம்ராஜ்யத்தை மீண்டும் நிறுவும் வல்லமை இந்த கரிகாலனுக்கேயுண்டு என்று ஈரேழுலகமும் நம்புகிறது. கரிகாலனால் எங்கே தமது நாடுகளுக்கே ஆபத்து வந்துவிடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். எந்தவித வெளிநாடுகளின் உதவிகளுமில்லாமலே பாரிய படைக்கலங்களைச் சோழர் படை தாமாகவே உருவாக்குகிறதென்ற விடயம் வெளிநாடுகளுக்குத் தெரிந்ததிலிருந்து அவர்கள் எச்சரிக்கையடைந்திருக்கிறார்கள்.”

“அதற்கும் மங்களரின் சதிக்கும் என்ன சம்பந்தம்.?”

“
**மங்களரின் சதிபற்றி நீங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் ஆடசியில் தமிழ் மக்களைத் தவிர எந்த ஒரு உயிரையும் நீங்கள் புண்படுத்தியதில்லை. மக்கள் உங்கள் பக்கமிருக்கிறார்கள். புத்த சங்கங்கள் இரண்டும் உங்கள் பக்கம்.**
”

“கரிகாலனை ஒழிக்கும் வல்லமை உங்களுக்கு இல்லை என்று அயற்தேசங்கள் கருதுகின்றன. அத்துடன் சமீபத்தில் நீங்கள் பல வெண் புரவிகளை அரேபியாவிலிருந்து இறக்கியது அமைச்சர் கோதபாயரின் வேண்டுகோளுக்கிணங்கவே என்றும் அவை தருவிக்கப்பட்டதன் பின்னர் தலைநகரில் மட்டும் சென்ன மாதத்தில் 125 தமிழர்கள் வெண்புரவியிற் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள் என்றும் வெளிநாட்டு பிரதானிகள் கருதுகிறார்கள். இக்காரணங்களுக்காக உங்களை ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டு மங்களரை ஆட்சியிலமர்த்தும் நோக்கம் அயற் தேசங்களுக்கு உண்டு என்று நமது ஒற்றர்கள் அறிந்து வந்திருக்கிறார்கள். அத்தோடு தலைநகரில் தங்கியிருந்த பல அப்பாவித் தமிழர்களைப் பலவந்தமாக இரவோடு இரவாக வெள்ளைத் தேர்களில் ஏற்றி நகரின் எல்லைகளிற் கொண்டுபோய்விட்ட சம்பவம் அயற் தேசங்களை உலுப்பியிருக்கிறது.”

“அப்படியா..? அதற்கு மாற்று வழியாக என்ன செய்யலாம்?
மஹிந்தர் கேட்டார்.
அப்போது வாயிற்காவலன் வந்து பணிவாகக் கூறினான்:

“அரசே வாயிலில் அமைச்சர் தேவானந்தர் நிற்கிறார். உங்களை அவசரம் பார்க்க வேண்டுமாம்”

“வரச்சொல். அமைச்சரே உங்களுக்கு ஒரு ஆடசேபணையும் இல்லையே. நீங்கள் இருவரும் ஒரு வயில் தமிழர்கள் தானே. எங்கே நாயும் பூனையுமாக…”

இல்லை எனக்கும் தேவானந்தருக்கும் எதுவித பிரச்சினையும் கிடையாது தாராளமாகப் பேசுங்கள்.

அமைச்சர் தேவானந்தர் பளிச்சென்ற வெண்ணாடை தரித்து நிதானமாக வந்தார்.

வணக்கம் மன்னர் பெருமானே!

“என்ன விடயம் அமைச்சரே? சிற்றரசர்கள் கருணாகரர் பிள்ளையார் ஆகியோருடைய பிணக்குகளைத் தீர்த்துவைக்க ஏதாவது முயற்சி எடுத்தீர்களா? இப்போதே தீர்க்காவிட்டால் பிள்ளையாரைத் தம்பக்கம் இழுத்துவிடக் கரிகாலன் முயற்சிக்கலாம். கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்”

“ஆம் மன்னரே. மண்டலக்காரர்களை இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பணித்திருக்கிறேன்”

“அது சரி… வந்த விடயம்?

“தலை நகரிலிருந்து 300 தமிழர்களை உங்கள் சகோதரர் பலவந்தமாக வெண் தேர்களில் ஏற்றி நகரின் எல்லைகளுக்கு அனுப்பி விட்டதாகக் கேள்விப்பட்டேன்”

“அதற்கு என்ன இப்போது. பிற தேசங்கள் எங்களைக் கடிந்து கொண்டனதான். இருந்தாலும் பாரதூரமாகக் கண்டிக்கவில்லை. ‘கவலை தெரிவிக்கிறோமென்று’ சிரித்துக் கொண்டுதான் கூறினார்கள். இருந்தாலும் அதை நிறுத்தி தமிழர்களிடம் மன்னிப்புக் கோரும்படி கோரினார்கள். நானாவது.. மன்னிப்பு.. அதுவும் தமிழரிடம் கேட்பதாவது… எனக்காக முதலமைச்சர் விக்கிரமரத்தினருக்கு தமிழரிடம் மன்னிப்புக் கோரும்படி உத்தரவிட்டிருக்கிறேன்.

“தமிழரைப் பலவந்தமாக அனுப்பியது பிழையானது. அப்படித் தொடர்ந்தும் செய்திருந்தால் நாமே நமது அன்பிற்குரிய தாய் நாட்டைப் பிரித்துக் கொடுத்தவர்களாக வரலாற்றில் பார்க்கப்படுவோம்.” அமைச்சர் தேவானந்தர் பணிவோடு கூறினார்.

“உண்மைதான் அமைச்சரே..எனது தம்பி கோதபாயரை உங்களுக்குத் தெரியும் தானே. கொஞசம் முற்கோபக்காரன். அவன் அவ்வளவாகக் கல்வி கற்றதில்லை என்பது உங்களுக்குத் தெரியும் தானே. தமிழரின் கொலை முயற்சியிலிருந்து தப்பி

7ம் பக்கம் பார்க்க...




#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.

PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# கடவுளின் வங்கியாளர் இறந்தது எப்படி?




மாமூலன்

1982 யூன் மாதம் 18 ஆவது திகதி காலை பிரித்தானியாவின் லண்டனில் உள்ள ஓர் போக்குவரத்துப்பாலத்தில் பெரும் வங்கியாளர் ஒருவர் துக்கில் தொங்கியது கண்டு பிடிக்கப்பட்டது.

ரொபேட்டோ கல்வி எனப்படும் இத்தாலியின் பெரும் வங்கி ஒன்றின் நடுநாயகமான அவர் ஏன் துக்கிலிட்டு மாய்ந்தார் என்பது பரபரப்பாகவிருந்தது.

ரொபேட்டோ கல்விக்கு வத்திக்கானுடன் இருந்த தொடர்பினைக் கொண்டு அவரை கடவுளின் வங்கியாளர் என்று அழைக்கும் பழக்கம் இருந்து வந்தது.

இத்தாலியின் தற்போதைய மிகப்பெரும் வங்கியான 'பாங்கோ அம்புரோசியானோ" வின் மூலமான அவர் மறைவு பெரும் அதிர்ச்சியை உருவாக்கியிருந்து.



1978 இல் இந்த இத்தாலிய வங்கி பாங்கோ அம்புரோசியானோ மூலம் பெருந் தொகை பணம் வெளிநாடுகளுக்கு சென்றது என்று குற்றம் சுமத்தப்பட்டது. அதில் குற்றவாளியாக காணப்பட்ட கல்வி 1981 இல் தடுப்புக்காவல் சிறையிலிடப்பட்டார். பின்னர் விசாரணையில் வெளியே வந்த நிலையில் இறந்திருந்தார். குறுகிய சிறைக்காலத்திலும் அவர் தற்கொலைக்கு முயன்றதாக கூறப்படடது.

இவருக்கு போல்மார்சிங்கஸ் என்னும் கர்தினாலுடன் நெருங்கிய தொடர்பிருந்தது குறிப்பிடத்தக்கது. அதனாலேயே ரொபேட்டோ கல்வி கடவுளின் வங்கியாளர் என்ற பொருளில் பார்க்கப்பட்டார்.

போல் மார்சிங்கஸ் மூன்று போப்களுக்கு மெய்க்காவலராக இருந்தார்.

வத்திக்கான் வங்கியில் இருந்து பெருந்தொகையான அதன் பங்குகளை ரொபேட்டோ கல்விக்கும் அவரது வங்கிக்கும் இந்த போல் மார்சிங்கஸ் கைமாற்றி விற்றதாக செய்தி உண்டு.

அப்போது வத்திக்கானின் வங்கியின் (The Banca del Cattolica del Veneto)பொறுப்பாளராக இருந்தவர் கர்தினால் அல்பினோ லூசியானி (Cardinal Albino Luciani.) இவர்தான் 6 ஆவது போப் சின்னப்பருக்கு பின்னர் போப்பாக வந்து மிகக்குறுகிய காலத்தில், ஒரு மாதத்தில் இறந்துபோன முதலாவது யோன் போல் என்ற போப்.

இந்த முதலாவது யோன் போல் இறந்த அன்று அதிகாலை போப்பினுடைய வதிவிடத்தின் அருகில் கர்தினால் போல் மார்சிங்கஸ் நடந்து சென்றதைப் பாரத்ததாக செய்தி உண்டு. போல் மார்சிங்கஸ் அதிகாலையில் எழும் வழக்கம் இல்லாதவர்.

கல்வியின் வழக்கில் மார்சிங்கஸ் விசாரணைக்கு தேவை என மதலில் கூறப்பட்டது. பின்னர் வத்திக்கானின் பொறுப்பில் உள்ளவர் என்பதால் தூய்மையானவர் என்ற கருத்தின் அடிப்படையில் அவர் விசாரணையில் தவிர்க்கப்பட்டார். 1990 இல் ஓய்வு பெற்ற 2006 இல் இறந்துவிட்ட அவர் ஓர் அமெரிக்கர் !

ரொபேட்டோ கல்வி இறப்பதற்கு முந்தின நாள் இத்தாலியில் வைத்து அவரது செயலாளர் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு வயது 55. ஓர் பெண்.

இத்தாலியில் இருந்து 1982 யூன் 11 அன்று அதிவேகப் படகில் யூகோசுலாவியா சென்று அங்கிருந்து தனி விமானத்தில் லண்டன் வந்திருப்பதாக கருதப்படும் ரொபேட்டோ கல்வி தற்கொலை செய்து கொள்ளவில்லை. கொலை செய்யப்பட்டார் என்பது பின்னர் ஊகிக்கப்பட்டது. அதாவது 1997 இல். அந்த ஆண்டே இத்தாலிய காவல் துறை இரண்டுபேரைக் கல்வியின் கொலையில் குற்றவாளிகள் என அடையாளப்படுத்தியது.

1982 யூன் 11 ஆவது திகதி ஒரு கைப்பெட்டி நிறைய ஆவணங்களுடன் லண்டன் தப்பி வந்த ரொபேட்டோ கல்வி 8 நாளில் தூக்கில் இறந்திருந்தார்.

ஆனால் 2002 இல் தடயங்கள் ஆய்வின் முடிவுகள் கல்வி கொலை செய்யப்பட்டது என்பதை உறுதி செய்தது.

ரொபேட்டோ கல்வி இறந்தபோது அவரது பையில் சில கற்களும் பணக் கத்தைகளும் திணிக்கப்பட்டிருந்தன. அது ம∴பியாக்களின் பழிவாங்கல் கொலைகளின் பேது நடத்தப்படும் சம்பிரதாயம் எனப்படுகிறது.

கல்வி தனது வங்கியில் இருந்து 400 மில்லியனுக்கு கிட்டவான பணத்தை வெளிநாடுகளுக்கு முறையற்ற வகையில் கடத்தியிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

அதைக்காரணம்காட்டியே அவர் இத்தாலிய பொருாதாரத்துறைக் காவலரினால் கைது செய்யப்பட்டார். இந்தக் காவல்துறைக் கைதுக்கு ஓர் பின்புலமும் உண்டு.

அதுவரைநாளும் சும்மாயிருந்த கல்வியின் மிது இத்தாலியப் காவல்துறைக்கு கண் விழக் காரணம் ஓர் அமெரிக்க வங்கியாளர். ரொபேட்டோ கல்விக்கு வங்கிமூலமான பல கைமாறல்களுக்கு உதவியாக இருந்தவர். பெயர் மிசேல் சின்டோனா. அவர் ஓர் தனியார் வங்கியாளர். அமெரிக்காவில் உள்ள பிராங்கிளின் நியூயோர்க் வங்கி திடீரென்று 1974 இல் வீழ்ந்தது. அதன் பின்னால் சின்டோனா பாதிக்கப்பட்டார். அவரது தில்லுமுல்லுகள் வெளிவந்தன.

அவர் தன்னை நெருக்கடியில்இருந்து மீட்க ரொபேட்டோ கல்வியை கேட்டார். கல்வியோ செய்த உதவியே போதும் என்று கை விட்டுவிட்டார். அதனால் கோபமடைந்த சின்டோனா அறிக்கை மேல் அறிக்கை விட்டு ஊடகங்கள் மூலமாக கல்வியின் நடவடிக்கைகளை சந்திக்கு இழுந்தார். அதன்காரணமாகவே கல்வியை நோக்கி இத்தாலிய காவல்துறை திரும்பியது.

உண்மையான பின்புலம் தெரிந்தால் இத்தாலிய காவல்துறை ரெபேட்டோ கல்வியில்



கை வைத்திருக்குமா என்பது சந்தேகமே.

போலந்தில் தொழில் சங்கங்களை மழுங்கடிக்கவும் நிக்கராகுவாவில் எதிர்ப்புரட்சியாளருக்கு உதவி செய்யவும் சென்ற பணம் அனைத்தும் பாங்கோ அம்புரோசியாவின் ஊடாகவே வத்திக்கான் அனுப்பியது என்று லண்டன் நாளேடு ஒன்று குறிப்பிடுகின்றது.

அதனால் தானோ என்னவோ முதலாவது போப் யோன் போல் இறந்தவுடன் வந்த இரண்டாவது யோன் போல் போலந்திலிருந்து தேர்வானார். அவரே ஐரோப்பாவிற்கு வெளியே இருந்து தெரிவான முதல் போப் !

ரோபேட்டோ கல்வியின் மகன் தற்போது கனடாவில் மொன்றியலில் வாழ்ந்து வருகிறார். தற்கொலை என்று மூடப்பட்டவழக்கை விடாது நடத்தி தற்போது 25 ஆண்டுகளுக்கு பின்னர் அது கொலைதான் என்ற நிலைக்கு நீதி மன்றத்தை ஒனத்துக் கொள்ள வைத்தவர்.

இத்தாலியின் 5 ம∴பியாக்கள் ஒன்ற சேர்ந்து இந்தக் கொலையைத்திட்டமிட்டதாக நீதமன்றம் முடிவு செய்திருக்கிறது. தங்கள் பணத்தை வீணடித்தாக அவர்கள் கொலை செய்தார்கள் எனப்படுகிறது.

இத்தாலியன் உயர்மட்ட இரகசியக் குழுவான பி.2 இன் உறுப்பினர்களின் நம்பிக்கையை பாழடித்ததற்காக கொலை செய்யப்பட்டார் எனப்படுகிறது அல்லது வத்திக்கானின் பலஇரகசியங்களை மேலும் வெளியாக்கிவிடுவார் என்றும் அதனால் கொல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

எது எப்படியிருந்தாலும் 25 ஆண்டுகள் கழித்தாவது கொலை என்பது நிருபணமாகி 5 பேரைப் பிடித்திருக்கிறார்கள்.

ஆனாலும் அவர்கள் வெளியில் வரக்கூடும். குற்றம் நிருபிக்கப்படாமல் விடுதலையாகலாம்.

எது நடந்தாலும் ரொபேட்டோ கல்வியின் பொருளாதாரச் சிக்கல் எழுப்பும்கேள்விகள் பதில் கிடைக்காதவையே. ரொபேட்டோ கல்வியின் மகனான கார்லோ கல்வியும் அவரது வழக்குரைஞரும் வழக்கு விசாரணை தொடங்கிய நாளில் பின்வருமாறு சென்னார்கள்:

கல்வியைக் கொலை செய்த கருவிகளே ம∴பியாக்கள். அதற்கும் பின்னால் காரணமாக யார் இருந்தார்கள் என்று அறியும் பெரும்பேர் இனித்தான் இருக்கிறது.

ஆனால் அது நடக்கவில்லை.

■ ■ ■


தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர். வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!

416-400-6406

RAVI INCOME TAX SERVICE

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
416-262-4176

- Residential
- Commercial
- Invetment Properties

Ravi Paramu
Sales Representative
416•262•4176
rparamu@hotmail.com
www.raviparamu.com

HomeLife GTA Realty Inc.
Realtor Member
1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963

HomeLife HIGHER STANDARDS




# கடன் அட்டை ஏமாற்று

## (Credit card fraud)

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



கடன்அட்டை ஏமாற்றுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதுடன், இணையத் தளத்திலும் கடன் அட்டை திருட்டுக்கள் இன்னும் அதிக வேகமாக அதிகரித்து வருகின்றது. ஓர் கடன் அட்டையைப் பயன்படுத்தும் போது ஏமாற்று ஏற்படும் அளவைக் கட்டுப்படுத்துதல் எவ்வாறு என்பதை நோக்குவோம்

### உங்கள் கடன் அட்டைகள் தொலைந்து போனால் அல்லது களவாடப்பட்டால்,

உங்கள் கடன் அட்டைகளின் பெயர்கள், கணக்கு இலக்கங்கள், காலாவதியாகும் திகதிகள், என்பவற்றை ஓர் பாதுகாப்பான இடத்தில் எழுதி வையுங்கள். இது உங்கள் கடன் அட்டை தொலைந்து போகும் போது அல்லது திருடப்படும் போது உங்கள் கடன் வழங்குனரை எச்சரிக்க உங்களுக்கு உதவுகின்றது. உங்கள் கடன் அட்டை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டால், உங்கள் கடன் வழங்குனரை (Credit grantors) தொலைபேசி மூலம் அழைத்து சரியான முகவரியை உறுதிப்படுத்துங்கள்.

### உங்கள் கடன்அட்டைகளைப் பயன்படுத்தும் போது

- உள்ளூரில் அல்லது நகருக்கு வெளியே பயணம் செய்யும் போது, உங்கள் அடையாள அட்டைகளையும் கடன் அட்டைகளையும் மட்டுமே எடுத்துச் செல்லுங்கள்.
- உங்கள் மேலதிக கடன் அட்டைகள், சமூக பாதுகாப்பு அட்டை (Social security card/ Social Insurance Number (SIN)), பிறப்புச் சான்றிதழ் அல்லது கடவுச்சீட்டினை உங்கள் கைப்பையினுள் அவசியமில்லாவிடின் எடுத்துச் செல்ல வேண்டாம்.
- தபால் திருட்டை குறைப்பதற்கு உங்கள் வீட்டில் ஓர் பூட்டக்கூடிய தபால் பெட்டியை நிறுவுங்கள்.
- உங்கள் காசோலைப்புத்தகத்துடன் கடன் அட்டையை எடுத்துச் செல்ல வேண்டாம்.
- உங்கள் காசோலைப்புத்தகம் தொலைந்தால் அல்லது களவாடப்பட்டால், உங்கள் வங்கியை அழைத்து தவறிப்போன காசோலை இலக்கங்கள் பற்றி அறிவியுங்கள். கடன் அட்டைகளை நீங்கள் பெற்றுக் கொண்டதும் அவற்றை நீடித்து நிலைக்கக் கூடிய மையினைப் (Permanentink) பயன் படுத்தி கையொப்பமிடுங்கள்.



- கொள்வனவு செய்யும் போது எல்லா நேரமும் உங்கள் அட்டையில் கவனமாக இருங்கள். கொடுக்கல்வாங்கல் முடிவடைந்ததும் கூடிய விரைவில் அதனைப் பெற்றுக் கொள்வதுடன் இது உங்கள் அட்டையா என்பதையும் உறுதிப்படுத்துங்கள்.
- பாதுகாப்பற்ற இணையத் தளத்திற்கு (Insecure website) உங்கள் கடன் அட்டையின் தகவல்களை வழங்க வேண்டாம் வெற்று கொடுப்பனவுப் பத்திரத்தில் (Blank charge slip) கையொப்பமிட வேண்டாம்.
- எப்போதும் உங்கள் ரசீதுகளை(Receipts) சேமியுங்கள். ஒருபோதும் அதனைப் பின்னே விட வேண்டாம்.
- ஏனையோர் கேட்கும் படி உங்கள் கணக்கு இலக்கத்தை உரத்துச் சொல்வதைத் தவிருங்கள்.
- வேலைத் தளம், ஆலயம், உணவு விடுதிகள், உடல் ஆரோக்கிய கிளப்புகள் (Health fitness clubs),விருந்துகள் (Parties) அல்லது இணையத்தளத்தினூடாக பொருட்களை வாங்கும் போது (shopping carts) கடன் அட்டையகளைக் குறித்துக் கவனமாக இருங்கள்.
- வங்கியில் ஓர் சரிபார்க்கும் கணக்கை (checking account) மூடிய (Close) பின் எல்லா சரிபார்த்தல்களையும் (checks) அழியுங்கள். அல்லது ஓர் பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்.
- உங்களிடமிருக்கும் கடன் அட்டைகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தி, எந்த ஒரு செயற்படாத கணக்குகளையும் (inactive accounts) இரத்துச் செய்யுங்கள்.
- கடன் அட்டை, வங்கி அல்லது சமூக பாதுகாப்பு(Social Security) தகவல் எதனையும் எவருக்கும் தொலைபேசி மூலம் வழங்க வேண்டாம்.
- உங்கள் தனிப்பட்ட சரிபார்த்தல் கூற்றுக்களில் (checks) உங்கள் சமூக காப்புறுதி இலக்கத்தை (SIN) எழுதுவதற்கு உங்கள் நிதி நிறுவனத்தை அனுமதிக்க வேண்டாம்.
- உங்கள் கடன் அட்டை, தன்னியக்க பணம் பெறும் இயந்திரத்திற்குரிய (Automa ted Teller Machine) ATM அட்டைக-ளின் ரசீதுகளை பாதுகாப்பாக வையுங்கள். இவற்றை அகற்ற வேண்டுமெனின் கிழித்து எறியுங்கள்.
- அத்தியாவசிய சேவைகளுக்கான கட்டணங்கள் (Utilities bills), சந்தா போன்ற

57ம் பக்கம் பார்க்க...

Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing
PROPERTY MAX®
Realty Inc. Brokerage
Residential, Commercial, Investment
Industrial And Rental



Mohan Subramaniyam
Broker Of Record
416-857-1780

Search Your Dream Home
@
www.themohan.com
OR Call
416-321-2300


One Source For Many Type Of Properties And Mortgages!



1+1 Bdrms Condo Apt with 1 Washroom, Demanding Area, Step To Ttc.



4+1 Bdrms, 4 Washrooms, Executive Luxury Home Located In University Heights Area.




3+2 Bdrms, 4 Washrooms, Excellent Location, Aprox 8 Years Old Home.

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!

* Some Condition May Apply

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க



Sales Representative

ஞானேந்திரன் நரசிங்கம்

CELL: 416.937.8090



Sales Representative

ஜூடி ஞானேந்திரன்

CELL: 416.629.9797

HOMELIFE HIGHER STANDARDS

OFFICE: 416.321.6969

## RESIDENCIAL PROPERTIES



NEW LISTING

$349,800

**MARKHAM & DENISON**

* Brick 2 storey
* 3 bedroom 2 full washrooms
* 2 bedroom basement apartment



NEW LISTING

$394,000

**MARKHAM & PASSMORE**

* Brick Detached 2 storey
* 3 bedrooms w 2 full washrooms
* Hardwood floor in main floor
* Finished Basement with washrooms



NEW LISTING

$758,000

**KENNEDY & FINCH**

* Brick detached Newer 2 storey
* 4 bedrooms with 3 full washrooms
* Hardwood floor through out
* Agincourt and Huntingwood Area
* Clean & Bright House
* Interlocking Driveway



NEW LISTING

$539,000

**MARKHAM RD & 14TH AVE**

* Brick Detached 2 storey
* Newer house with 3200sqft
* Separate Side Entrance To Basement
* A Great Home On 55'Lot Fronting Ravine
* 4 bedrooms with 3 full washrooms



NEW LISTING

$303,000

**MORNINGSIDE & SHEPPARD**

* Newer Freehold town house
* 3 bedrooms with 2 full washrooms
* Hardwood Floors On The Main Floor
* Stainless Steel Appliances
* 1675 sq ft

## COMMERCIAL PROPERTIES

GREAT INVESTMENT

**MULTIPLEX IN SUTTON, ONTARIO**

$ 649,900

* Great Investment.
* 6- 2 bedrooms apartments
* And A Retail Variety Store
* Tenants Pay Utilities
* Seller Pays Hydro + Gas For Only one Aprt
* Larger Lot Size, Possible Future Expansions
* Approx 7.5% of Rate of Return
* Approx 45 min drive from Toronto

Call JUDY For further detail

NEW LISTING

**COMMERCIAL SPACE FOR LEASE IN PRIME SCARBOROUGH AREA**

Call GNANI

* 4 units each of 1650 sq ft
* Zoning for many commercial uses
* Ideal for warehousing retail mfg.

Call GNANI for further detail

NEW LISTING

**FULL EQUIPT AUTO BODY SHOP AVAILABLE IN SCARBOROUGH AREA**

Call GNANI

* Front and rear truck level door entry

Call GNANI for further detail

**1 Year* HOME WARRANTY**

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

* No Money Down Programs
* Credit பிரச்சினை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள் Late Payment, Bankruptcy and R9's - No Problem
* புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
* New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
* தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
* Fast Approvals & Closings
* 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
* உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
* உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

**MORTGAGE MORTGAGE MORTGAGE**

ராம் கிருஷ்

**RAM KRISH**

Senior Mortgage Consultant

The Mortgage Alliance company of Canada

Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200, Toronto, ON M2J 5B4

Phone: 416.499.5454, Fax: 416.499.8366

**TEL: 416.526.4996**



NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL FINANCIAL CORPORATION · TD · cervus FINANCIAL CORP. · BMO

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

# தமிழரின் அடையாளம்

இங்கு அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு விடயம் 'தமிழரின் அடையாளம்' என்ற சொற்றொடர். நல்ல விடயம். அடிக்கடி பேசினால்த்தான் அது பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும். இவ்வாறு பேசப்படுகின்ற அடையாளங்களுக்குள் மிக முக்கியமானது, தமிழர்கள் கொண்டிருக்கும் பெயர்கள். ஒருவருடைய பெயரைக் கொண்டு அவர் எந்த இனத்தவர் என்பதைக் கண்டுபிடித்துவிட முடியும். மத நெறிக ளினால் வேறுபட்டவர்கள் கூட தம் பெயரில் ஒருபாதியை இனவழிப்பட்டதாக வைத்துக் கொள்கின்றார்கள். அத்தகைய இனவழிப்பட்ட பெயர்களைக் காப்பதில், தொடர்ச்சியாகப் பேணுவதில் பல இனத்தவர்களும் மிகக் கவனமாக இருப்பதை நாம் கண்டு கொள்ள முடியும்.

பேணப்பட வேண்டிய நமது பெயர்கள் இங்கு பிற இனத்தவர் நாவில் படாதபாடுபடுவதை எல்லோரும் அறிவோம். அவர்கள் 'நா' பட்டு அது சிதைவதை எம்மால் தடுக்க முடியாது என்பது உண்மை. ஆனால் நம்மவர் 'நா' பட்டு அப் பெயர்கள் துன்பப்படுவதை, சிதைவதை தடுக்க முடியாதிருப்பதே மிகக் கொடுமை. தமிழர் விழா நடத்தும் பல மேடைகளில் தமிழர்களே நிகழ்ச்சி அறிவிப்பாளர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் பலரும் தமிழ் தெரிந்தவர்களே. அல்லது தமிழர்களின் பிள்ளைகளே. ஆனால் தமிழ்ப் பெயர்களை உச்சரிக்கும் போது வேறு இனத்தவர் போல் உச்சரிக்கும் கொடுமை இருக்கிறதே அது சிலவேளை பொறுக்க முடிவதில்லை. கந்தையா என்ற பெயரை 'ஹன்டையா' எனச் சொல்வதில் சொல்பவர் மட்டுமல்ல.. அந்தக் கந்தையாவுக்கும் கொஞ்சம் மகிழ்ச்சி இருக்கும் பாருங்கள். இது பெருங் கொடுமை.

அறிவிப்பாளர்கள் திருந்த வாய்ப்பில்லை என்றால், நாம்தான் திருத்த வேண்டும். பெயர்களுக்கு உரியவர்களே இனத்தின் பெயரைக் காப்பது இருக்கட்டும். முதலில் உங்கள் பெயர்களைக் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்.

தேர்தல் காலம் நெருங்குகின்றது. தேர்தல் ஆரவாரங்கள் மெல்ல சூடு பிடிக்கத் தொடங்குகின்றன. இந்தத் தடவை தமிழர்களும் பெரிய கட்சிகளின் வேட்பாளராகும் வாய்ப்புகளைப் பெறத் தொடங்கியிருக்கின்றனர். மகிழ்ச்சி.

தமிழர் ஒருவர் தேர்தலில் நிற்கின்றார் என்றால் எல்லாத் தமிழர்களும் அவருக்கே வாக்களிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது ஒருவகையில் நியாயமானதென்றே. முதலில் தமிழர்களுக்குள் அவர் ஆற்றிய சமூகப் பணிகளை சீர்தூக்கிப் பார்த்தே தமிழர் வாக்களிக்க முனைவர். ஒரு தொகுதியைப் பிரதிநிதிப்படுத்தும் ஒருவர் முதலில் தன் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். 'வேட்பாளத் தகுதி' கிடைத்துவிட்டது என்பதற்காக 'தன் இன மக்கள் தன் பின்னால்' என அவர் கருதுவது தவறானதாகும்.

தன் இன மக்களின் மனதை வெல்லும் வகையில் அவர் ஆற்றியிருக்கும் சேவையே அந்த இனத்தின் ஒருங்கிணைந்த ஆதரவை அவருக்குப் பெற்றுக் கொடுக்கும். அதை விடுத்து, பிறரை நம்பி தேர்தலில் நின்று தோற்ற பின் என் இன மக்கள் என்னைக் கைவிட்டுவிட்டார்கள் எனக் கூறுவது சரியல்ல..

தேர்தலுக்கு முன்னால், சேவைக்கான களமும் காலமும் காத்துக் கிடக்கிறது. வேட்பாளர்களாகும் நம்மவர்கள் உணர்வார்களா?

■ ■ ■

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா,

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள்:
For More Info: Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Tel: 416-646-3422, 416.400.6406
Fax: 416.849.0594
Web: www.veedunews.com
e-mail: thaiveedu@gmail.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# வன்னியின் செல்வன்..

3ம் பக்கத் தொடர்ச்சி...

யவனுக்கு கொஞ்சம் கோபம் அதிகம் தான்....அது சரி அமைச்சர் மங்களர் எமது ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்கிறாராமே. அமைச்சர் பர்ணாந்து சொல்கிறார்...''

''கேள்விப்பட்டேன் மன்னா. அது நடக்க வல்ல காரியமல்ல. மங்களர் தனது நண்பரும் சிற்றரசருமான சோமவன்சரினதும் முன்னாள் பகைவரான விக்கிரமசிங்கருடனும் கூட்டுச்சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றலாமென்று கனவு காண்கின்றார். சோமவன்சருடைய படைபலமும் விக்கிரமசிங்கருடைய படைபலமும் ஒன்று சேர்ந்தாலும் எங்களது பலத்தை மீற முடியாது. அப்படியானாலும் அதற்கு முன்னராக நாம் இன்னுமொரு சதியொன்றை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களுடைய சதியை இலகுவாக முறியடிக்கலாம்.''

''எப்படி எப்படி சொல்லுங்கள் அமைச்சரே. இதற்காகத்தானே சிங்கள அரசுகள் எப்போதும் தமிழமைச்சர்களை ஆலோசகர்களாக வைத்திருப்பது....''

''மன்னா! ஒரு நாட்டில் ஆட்சி ஈடாட்டம் காணும்போது அது அயல் நாடுகளின் மீது படையெடுப்பைச் செய்யவேண்டும். தேசியத்துக்கு அச்சுறுத்தல் வரும்போது மக்கள் ஒரு கொடியின் கீழ் அணிதிரள்வார்கள். உங்களுக்கு மக்கள் ஆதரவு அலையலையாக வந்துகொண்டே இருக்கும். எனவே இப்போ உடனடியாக நீங்கள் செய்ய வேண்டியது மக்களுக்கு கிராமங்கள் பட்டி தொட்டிகள் எங்கும் பறையடித்துச் சேதியனுப்ப வேண்டியது. தேசியத்துக்கு அச்சுறுத்தல் என்றால் மக்கள் பொங்கியெழுவார்கள்'' அத்தோடு கிழக்கு மண்டலத்தை விடுவித்ததும் நாடு தழுவிய ரீதியில் வெற்றிக் களியாட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

''நல்லது அமைச்சரே. சரியான தருணத்தில் வந்து உங்கள் மதியூகத்தால் எங்கள் நாட்டைக் காப்பாற்றியமைக்கு நான் என்றென்றும் நன்றியுடையவனாயிருப்பேன். இன்னும் சில நாட்களில் கரிகாலனைத் தோற்கடித்து ஈழம் முழுவதையும் வெற்றிகொண்டவுடன் கிழக்கு மண்டலத்தைக் கருணருக்கும் வடக்கு மண்டலத்தை உங்களுக்கும் பாத்தியதையாக எழுதிக்கொடுப்பேன் என்று இப்போதே உறுதி மொழி தருகிறேன்''

என்றபடி மன்னர் மகிந்தர் பறையடித்துப் பிரசித்தம் செய்வோருக்குப் பின்வருமாறு ஓலையை எழுதி அனுப்பினார்.

'மக்களே எங்கள் சிங்கள தேசத்துக்கும், புத்த சமயத்துக்கும் எங்கள் மத்தியிலருக்கும் புல்லுருவிகளின் ஆதரவுடன் பிற தேசத்தாரினால் ஆபத்து விளையக் காத்திருக்கின்றது என்று நமது ஒற்றர் படை தகவல் கொண்டு வந்திருக்கிறது. எனவே மக்கள் விழிப்போடு இருந்து எமது தேசத்துக்கு அச்சுறுத்தல் தருபவர்களைக் காட்டிக் கொடுத்து நாட்டை வரப்போகும் ஆபத்திலிருந்தும் காப்பாற்றும்படி இத்தால் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு இரண்டாம் கெமுனு உங்கள் மகிந்த மகாராஜா'

அப்போது அவசரமாக கோதபாயர் அரண்மனைக்குள் நுழைந்தார். சாதாரணமாகவே கடு கடுவென்றிருக்கும் அவர் முகத்தில் இன்னும் ஆயிரம் முகங்கள் முளைத்திருந்தன.

''அண்ணா.. எமது நாட்டுக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. ஒரு பக்கம் தமிழர். மற்றப் பக்கம்... '' மேலும் சொல்வதை நிறுத்திக் கொண்டு கோதபாயர் இரு அமைச்சர்களையும் மகிந்தரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''எனதருமைத் தம்பியே சொல். உனைக் கொலை செய்ய முயற்சித்தபோது ஓடோடி வந்து கட்டிப் பிடித்து முத்தமிட்டேனே.. ஞாபகமிருக்கிதாடா என் தம்பியே. நீ சின்னவனாயிருந்தபோது....''

''போதும் நிறுத்து. அண்ணா...தெற்குக் கடலில் பிரமாண்டமான கப்பல் ஒன்று நங்கூரமிட்டிருக்கிறதாமே. அது பற்றி உங்களுக்குத் தெரியுமா?

''தெரியாதடா தம்பி. எனக்கு எதுவுமே தெரியாது.''

''தெரியாதே.. தெரிந்தே இருக்காதே.. உங்கள் நட்பான அயற் தேசம் இந்துஸ்தானம் இது பற்றிச் சொல்லியிருக்காதே...இந்த நண்பர்களும்கூடச் சொல்லியிருக்க மாட்டார்களே..?''

''உனக்கெப்படியாடா தம்பி இதுபற்றித் தெரிந்தது''

''சீனத்து பிரதானி தகவல் அனுப்பியிருந்தார். தமிழருக்கு உதவி புரிவதற்காக வந்திருக்கலாமாம். எதற்கும் விசாரியுங்கள்...''

அப்போது அரன்மனையின் மந்திராலோசனைக் கூடத்திலிருந்து யாரோ வலியினால் முனகும் சத்தம்கேட்டது. ஒருவர் தள்ளாடிக் கொண்டு வந்துகொண்டிருந்தார்.

அண்ணா சலமரே. என்ன கோலமிது உங்களுக்கு என்ன நடந்தது?

தொடரும்.

■ ■ ■

வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.

வணிகத்தின் எல்லைகளை

விரிவாக்குவீர்!

416-400-6406, 416-646-3422

inayam
www.inayam.net

ரொரன்ரோவில் நடைபெறும் சகல நிகழ்வுகளையும்

பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும்.

இது முற்றிலும் இலவசமான சேவை!!


# Commercial For Sale

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**Chandran Sornalingam**
Broker
**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**



**Up to $ 250,000 Small business loan can be arranged**

**Scarborough**

**$ 320,000**
Bottle Water Production / Distribution
Profitable Business
Established Almost 10 Years

**Brampton**

**$ 250,000**
Dry Clean/Laundry
Established Business
Good for owner/Operator

**Hamilton**


**$ 1.7 Million**
Gas Station
Business with Property
Call for More Info !

**Toronto**


**$ 300,000**
Property for Sale
Automotive Business
Used Cars Sales Place
Good Location

**Mississauga**

**$ 270,000**
Many Making Bar
Established Business

**Pickering**

**$ 700,000**
Excellent Bar & Grill
Location ! Location !
Established Business

**Beaverton**

**$ 600,000**
Business with Property
Licensed Bar / Restaurant
with Sep.2 Storey House on about 10 Acres Land

**Burlington**

**$ 300,000**
Outstanding Bar & Grill
Excellent Location
Makes Money


**Oakville**

**$ 300,000**
English Pub
Location ! Location !
Established Business

**Toronto**


**$ 390,000**
Established Chicken Business
Regular Clientele.







வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்

**CEYLINGO FINANCIAL GROUP.**
**416.430.0111**
2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8


**Siva Ratnasingam**
Mortgage Consultant
**416.430.0111**


**Karuna Gobalapillai**
Mortgage Consultant
**416.430.0111**

invis

digi Media Creations - 416.467.4952

# GREEN CITY



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

பாடசாலை விடுமுறை நாட்களையும் கோடைகால குதூகலிப்பினையும் குஷியாக அனுபவித்துக் கொண்டிருக்கும் இனிய ‘வீடு” வாசகர்களுக்கு மீண்டும் அன்பு கலந்த வணக்கங்கள்.

வீடும் வீடு சார்ந்த அனுபவம் கலந்த சுவையான தகவல்களைத் தாங்கி மாதாந் தம் மலரும் இச்சஞ்சிகை எமக்கு ஒரு வரப்பிரசாதமே. ஊடகங்கள், வெளிநாடு களில் நாம் சாதித்திருக்கும் வெற்றிகளுக்கு முதுகெலும்பு போன்றவை. தகவல்கள் பரி- மாறப்படுவதால் வாசிப்பவர்கள் பூரணமடை- கிறார்கள். அந்த வகையில் இன்று வீட்டுத் துறையின் வளர்ச்சிப் பாதையில் வீடு பத்திரிகையின் பங்கும் அவசியமாகின்றது. உங்கள் ஆதரவின் அடையாளமே வீட்டின் வளர்ச்சி.

அதிகரித்துவரும் வீட்டுவிலைகளும், ஏறி இறங்கும் வட்டி விகிதங்களும் தொடர்ச்சி யான சஞ்சலங்களை உண்டு பண்ணினா லும் பொருளாதார வளர்ச்சி என்பது நாம் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. நாம் அன்றாடம் தெருக் களில் காணும் வாகனங்கள் தொடக்கம், பெற்றோல் விலையதிகரிப்புக்கள், மற்றும் சம்பள உயர்வுகள், வாழ்க்கைத் தரம் போன்றவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் எமது பொருளாதாரம் எங்கு நோக்கிப் பயணிக் கின்றது என்பது புலனாகும். இவற்றிற்கெல் லாம் ஈடுகொடுக்கும் பொருட்டு வீட்டு விலைகளும் வட்டி விகிதங்களும் மாற்றம் அடைகின்றன.

பொருளாதார ஏற்றத்தாழ்வினை சமநிலைப் படுத்தும் பல வழிகளில் எமது அரசாங்கம் இறங்கியுள்ளது. இவற்றில் பொதுமக்களா கிய நாம் எவ்வளவு முக்கியம் வாய்ந்த இடத்தைப் பிடித்திருக்கின்றோம், எமது பங்கு அல்லது நிலைப்பாடு என்ன என்பத னைப் பார்ப்போம். பொருளாதார சமநி லைப்படுத்தலை இரண்டு பிரிவுகளாக மேற் கொள்ளலாம். ஒன்று அதிகளவு வருமா னத்தை ஏற்படுத்துதல் அதாவது வளர்ந்து வரும் செலவீனங்களுக்கு ஏற்றாற்போல் வருமானத்தைப் பெருக்குதல். மற்றையது செலவீனங்களை சிக்கனப்படுத்துதல். சிக்கனப்படுத்துதல் ஒன்றும் எளிதல்ல. ஆனால், புதிய தொழில்நுட்பங்களால், உத்திகளால் நாட்டுக்கும் வீட்டிற்கும் நன்மை தேடுவதே இந்த இரண்டாவது முறை.

அந்தவகையில் குப்பைகள் மற்றும் வீட்டுக் கழிவுப்பொருட்களைத் தரம் பிரித்து சேகரித் தல், மீள உபயோகித்தல், எரிபொருள் தயாரித்தல் போன்ற இன்னும் பல பயனு ள்ள தகவல்களையும் ‘பச்சை கொள்கலன்’ உபயோகம் “நீல கொள்கலன்” போன்றவற் றையும் சென்ற இதழில் பார்த்தோம். அவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் தமது பங்கிற்கு ஒத்துழைப்பதால் நாட்டிற்காக கணிசமான செலவீனத்தைக் கட்டுப்படுத்தும் முயற்களில் பங்கேற்கின்றோம்.

City Green eco Energy முறை இன்று ரொறன்ரோ மாநகரில் பரவிவரும் சுகாதாரமான, சிக்கனமான அதேவேளை பின்விளைவுகள் குறைந்த எரிபொருள் சிக்கன முறையாகும். இதில் பங்கேற்கும் வீடுகள் மற்றும் தொடர்மாடிக் குடியிருப்புக் கள் தினமும் அதிகரித்தவண்ணம் உள் ளன. அடிப்படையாக சூரிய வெப்பசக்தி மற்றும் காற்றாலைகளின் சக்திமுறை கொண்டு, விரயமாகும் மின்சாரம் மற்றும் இயற்கை வாயுவின் அளவினைக் குறைப் பதே இதன் நோக்கம். புதிதாக நிர்மாணிக் கப்படும் கட்டிடங்கள் மற்றும் தொடர்மாடிக் கட்டிடங்கள் இவற்றை தம்மகத்தே கொண் டிருந்தால் நாளடைவில் தகுந்த பலனைப் பெற வாய்ப்புக்கள் உண்டு.

மேற்கூறிய நடைமுறை வருங்காலங்களில் கைகொடுக்கும் என்றாலும், தற்போது விரயமாகும் மின்சாரம், தண்ணீர் போன்ற வற்றை சிக்கனமான முறையில் கையாள் வதும் அதற்கான வழிமுறைகளையும் சற்றுப் பார்ப்போம்.



### சக்திச் சிக்கனம்:

வீடுகளில் நாம் அன்றாடம் உபயோகிக்கும் பாவனை உபகரணங்கள் தொடக்கம் வீடு கட்டுவதற்கு உபயோகப்படும் யன்னங்கள், கதவுகள்வரை இன்று ‘சக்திச் சிக்கனம்” முறையினை கருத்திற் கொண்டே உருவாக் கப்படுகின்றது அந்தவகையில் கீழேயுள்ள ஒவ்வொரு பொருட்களும் எவ்வாறு பங்களிக்கின்றன?

### யன்னல்கள்:

யன்னலில் இரண்டு அடுக்கு கண்ணாடிகள் பொருத்தப்பட்டு இடையே காற்று நிரப்பப் படுகின்றது. இவ்வகையான கண்ணாடியினூ டாக வெளியிலுள்ள குளிர் உட்புகாமலும் உள்ளேயுள்ள சூடு வெளியேறா வண்ண மும் இருக்கின்றது. இக் கண்ணாடிகளில் முறைமூலம் இடப்படும் மேற்போர்வை யானது கோடை காலங்களில் சூரியக் கதிர்கள் உட்புகாவண்ணம் பாதுகாக்கின் றது.

### கதவுகள்:

உலோக மேற்பரப்புக் கொண்ட கதவுகள் மற்றும் தனிமரத்தினாலான கதவுகள், சக்தி விரயத்தைக் கணிசமாக கட்டுப்படுத்து கின்றன. அது மட்டுமல்லாது, நிலையுடன் ரப்பர் விளிம்பு கொண்டு பொருத்தப்படும் கதவு இடுக்கினூடாக காற்றோட்டம் தடைப் படுகின்றது.

### வெப்பம்-குளிர்:

அதிகளவு சிக்கனமுடைய சூடேற்றி- அதிகளவு சிக்கனமுடைய குளிரூட்டி.

இன்று உருவாக்கப்படும் சூடேற்றிகளோ அல்லது குளிரூட்டிகளோ குறைந்த சக்தி விரயத்தை மையமாக வைத்தே வடிவ மைக்கப்படுகின்றன. அவைகளை உபயோ கிக்கும் முறைகளைப் பொறுத்து சிறந்த பயனை அடைய முடியும். பொதுவாக அவைகளின் அமைவிடம் சுத்தமாகவும் காற்றோட்டமாகவும் இருத்தல் அவசியம். காற்று உட்செல்லும் மற்றும் வெளியேற்றும் பாதை தடங்கலின்றி இருப்பது மட்டுமன்றி நிலையான காற்றோட்டம் வீடு முழுவதும் பரவுவதற்கு வழிவகுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் வீட்டின் ஒரு பகுதி அதிக சூடாகவோ அல்லது குளிராகவோ காணப் படும். அவ்வாறான பகுதிகளைச் சீர் செய்வதற்காக அதிக சக்தி விரயமாக வாய்ப்புண்டு. கருவிகளைப் பொருத்து வதன் மூலம் இரவில் குறைந்த வெப்பத்தையும் அதிகாலையில் சற்று அதிகரித்தும் மற்றும் பகல்வேளைகளில் தேவையற்றபோது குறைத்தும் தன்னிச் சையாக இயக்கலாம்.

### Fire Place

பாவனையில் இல்லாத Fire Place களினூ டாக கணிசமான அளவு குளிரோ-சூடோ வெளியேற வாய்ப்புண்டு. இவ்வாறு காட்சிப் பொருளாக காணப்படும் Fire Place களின் காற்றுப் பாதைகளை மூடிவைப்பதன் மூலம் சக்தி விரயமாகாமல்ப் பார்க்கலாம். Fire Place மீண்டும் இயக்கும் வேளைகளில் கண்டிப்பாக தடைகளை அகற்ற மறக்க வேண்டாம்.

### சமையலறை-குளியலறை காற்றகற்றிகள்:

வீட்டின் சுகாதார நலன்பேணும் முக்கிய பொறுப்பு இக்காற்றகற்றிகளுக்கு உண்டு. குளியலறை காற்றகற்றிகள் ஓர் Tissue வை தக்க வைக்கமுடியாதவையாக இருப் பின் அவற்றை மாற்றுதல் அவசியமாகும். அல்லது துப்பரவு செய்தல் வேண்டும். சமையல் முடிந்தபின்னர் அல்லது குளிய லின் பின்னர் இக் காற்றகற்றிகள் குறைந தது 20-30 நிமிடங்கள் இயங்குதல் வேண்டும். வீட்டிற்குள் ஏற்படும் ஈரப்பதன் சமநிலையில் இவற்றின் பங்கு அதீதம். சமையலறை காற்றகற்றிகள் சில மீளவும் காற்றினை வீட்டிற்குள் எடுத்துவரும். அவற் றினைச் சரிசெய்து, தகுந்த முறையில் வெளியேற்றுதல் வேண்டும். இவ்வாறு வெளியேற்றப்படும் பாதைகளில் தடங்கல் கள் இன்றி இருப்பது அத்தியாவசியம்

### ஆடை உலர்த்திகள்:

இவைகளில் இருந்து வெளியேறும் காற்று எக்காரணம் கொண்டும் வீட்டுக்குள் புகா வண்ணம் பாதுகாத்தல் நன்று. குழாய்களில் கழிவு ஏற்படாமல் நேர்த்தியாக அமைத்தல் வேண்டும்.

வீட்டுக்குள் காற்றோட்டம் இருப்பது மிகமிக அவசியமானதொன்று. குளிர்காலங்களிலோ அல்லது கோடை காலமானாலும் தினசரி யன்னல்கள், கதவுகளைத் திறந்து வைத்து காற்றகற்றிகளையும் இயங்க விடுவதன் மூலம் வீட்டுக்குள் காற்றோட்டம் ஏற்பட்டு, ஈரப்பதன் கட்டுக்குள் இருக்கும். சுவர் ஓரங் களில் தளபாடங்களை வைக்காமல் 2-3 அங்குலம் தள்ளி வைப்பதாலும் காற்றோட் டத்தை அதிகரிக்கலாம். ஆடைகளை வீட்டுக்குள் உலர்த்துவது சிறந்த முறை யல்ல (ஆடையுலர்த்தி தவிர்ந்து). அவ்வா றான நிர்ப்பந்தத்தில் குளியலறைகளில் காற்றகற்றிகளை ஓடவிட்டு உலர்த்தலாம். எப்போதும் வீட்டுக்குள் வெப்பநிலை 15பாகைக்கு குறையாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலே கூறியது போன்று இன்னும் பல சக்தி சேமிப்பு முறைகளின் மூலம் விரய மாகும் பணத்தின் அளவு கணிசமாகக் குறைய வாய்ப்புக்கள் மட்டுமன்றி, சுகாதா ரமான வாழ்க்கை முறையும் கைகூடும். சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகள் நல்ல ஆரம்பம். ‘பச்சை நகர” த்துக்கு நாங்களும் ஒத்துழைப்போம். நமக்கு மட்டு மல்ல நாட்டுக்கும் நன்மை செய்வோம். நன்றி வணக்கம்.

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches, (We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed



# For All Your Real Estate Needs..




## Lucky Draw for New Car Will be on September 8th ,2007

**Buy or Sell through us before August31, 2007 and win a New Car****



**Ravi Raveendran**
Broker
**416.817.8479**




- Beautiful Freehold Town House
- Well Maintained House
- HugeBack Yard
- Close To All Amenities
- Call **Ravi** For Details....




- Luxury Mapledale Condominium
- 2 Spacious Bedrooms
- Very Bright Corner Unit
- 24 Hrs Security Building.
- Call **Justin** For Details...



**Justin William**
Broker
**416.803.7344**




- 5Year New 3Bedroom Home
- High Demand Location
- Great Floor Plan W/Open Concept
- Steps To Steeles, Ttc, Schools
- Call **Ravi** For Details....




- Brand New Home
- Excellent Layout
- More Than 2000 Sq.Ft
- Oak Strip Hardwood Floor
- Call **Ravi** For Details....




- Profitable Business To Own
- Good Lotto 6/49 Commission
- Sears Catalog Store Commission
- Surrounded By Lots Of Apartments
- Call **Justin** For Details....




- Well Known Bakery
- 10 Years Established Business
- Price Includes The Daisy Mart
- All Bakery Machineries Included
- Call **Justin** For Details...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# மத்திய அரசின் புதிய வரிச் சலுகை



**செல்வா வெற்றிவேல்**
- வீடு விற்பனை முகவர் -

### ($2,000.00 Federal child tax credit – for kids under 18)

கடந்த பல வருடங்களாக, மத்திய அரசும் சரி மாநில அரசம் சரி - மாறி மாறி பல வரிச் சலுகைகளை மக்கள் நன்மையடையக்கூடிய வகையில் வழங்கியவண்ணம் உள்ளன. கடந்த 2006ம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய வரிச் சலுகைகளைப் பார்ப்போமாயின்,

1. Federal employment tax credit $ 250.00
2. Personal tax credit increased to $ 8839.00
3. Text book credit (For University student)
4. Adoption expenses
5. 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு Age amount increase to $ 5066.00
6. பென்சன் எடுப்பவர்களுக்கு pension amount credit increased to $ 2000.00

இத்துடன் முக்கியமாக 7 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு பெற்றோரின் வருமானத்தைக் கருத்தில்எடுக்காது மாதா மாதம் $ 100.00களை வாரி வழங்கியது எல்லோரும் அறிந்ததே. இருந்தும் கூட, இந்த Universal child care programme benefit என்றவகுப்புக்குள் அடங்காது incomeஎன்ற வகுப்பிற்குள் வருவதனால் பலரிடம் இருந்தும் பலவிதமான விமர்சனங்கள் அரசுக்குக் கிடைக்க நேர்ந்ததை பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

மத்திய Conservative அரசு இத்தகைய விமர்சனங்களை நிவர்த்திசெய்வதுடன், ஒருபடி மேலே சென்று புதியதாக Federal child tax credit இனை 2007 மார்ச்சில் அறிவித்து, 2007 ஜுலையில் இருந்து நடைமுறைப்படுத்தியுள்ளது. இனி இதுபற்றி சிறிது விபரமாகப் பார்ப்போம்.

உழைக்கும் வர்க்கத்தில் உள்ளவர்கள் மத்திய அரசுக்கு 18வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும்$ 2000.00 டாலர் வீதம் வரிக் குறைப்பு செய்வதற்கு வழி வகுத்துள்ளது. இதை இரு வகையாகப் பிரித்து பொது மக்கள் நன்மை பெறலாம். இந்த வரிக் குறைப்பினால் ஒரு குழந்தை இருப்பவர்கள் மத்திய அரசுக்குக் கட்டும் வரியில் சேமிக்கக்கூடிய ஆகக்கூடிய தொகை $ 310.26 ஆகும்.

### நன்மை பெறும் வகைகள்

1. வேலைசெய்யும் ஸ்தாபனங்களில் தமது 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் தொகையைக் குறிப்பிட்டு வரியைக் குறைத்து கழிப்பிப்பது.
2. வருமான வரி பூர்த்திசெய்யும்போது ஒரு குழந்தைக்கு $ 310.26 என்ற வகையில் tax return ல் எடுப்பது.

## வீட்டு வாடகையும் வருமான வரியும்

வீட்டுச் சொந்தக்காரர் தாம் வசிக்கும் வீட்டின் நிலக்கீழ்ப் பகுதியினையோ அல்லது நிலக்கீழ் வீட்டு வசதி இல்லாதவர்கள் வீட்டின் ஒரு பகுதியினையோ வாடகைக்கு விடுவது எமது சமுதாயத்தின் மிகவும் சாதாரண வழமை.

முதன் முதலாக வீடு வாங்குபவர்கள் பலர் நிலக்கீழ் வீட்டு வாடகை வருமானத்தை நம்பி அப்படியான வசதிகளையுள்ள வீடுகளையே தெரிவுசெய்து வாங்குவதுண்டு.

வீட்டின் ஒருபகுதியினைமட்டும் வாடகைக்கு விட்டு வருமானம் பெறுபவர்கள் வருமான வரி விண்ணப்பத்தில் வாடகை வருமானம் பெற்றதாகவோ அல்லது நட்டமடைந்ததாகவோ குறிப்பிடும் எண்ணமுண்டாயின் முற்கூட்டியே அதற்கான தயாரிப்புகளில் ஈடுபடவேண்டும். காரணம், கனடியவருமான வரித் திணைக்களத்துக்கு உங்களது வரி விண்ணப்பங்களை மீளாய்வு செய்யும் அதிகாரம் 7 ஆண்டுகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் விண்ணப்பிக்கும் பத்திரங்களை 7 வருடங்களுக்குப் பத்திரமாக வைத்திருப்பது உங்கள் கடமை.

உங்கள் வருமானவரி விண்ணப்பத்தில் வாடகை வருமானம் அல்லது நட்டம் என்றிருந்தால் பொதுவாக வருமானவரித் திணைக்களம் உங்களிடம் பின்வரும் விடயங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கலாம்:

### 1. வாடகை ஒப்பந்தம் (Rental or Lease Agreement)

இதில் வாடகைக்கு இருப்பவர்களின் பெயர், SIN number மற்றும் கையெழுத்திட்ட விண்ணப்பப் பத்திரம்

### 2. உரிமையாளர் பெயர் (Ownership)

வீட்டு உரிமையாளர் பத்திரத்தில் (உறுதி) ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் இருப்பின் வருமானவரிப் பத்திரத்தில் அவர்களது பெயர்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு எத்தனை வீதம் வீட்டின்மீது உரிமைப் பங்கு இருக்கிறது என்பதும் காட்டப்பட வேண்டும். (உதாரணமாக கணவன், மனைவியினது பெயர்களில் அல்லது சகோதரர்களின் பெயர்களில் வீடு இருப்பின் வருமானவரி விண்ணப்பத்தை தனி ஒருவரின் பெயரில் மட்டும் செய்ய முடியாது)

### 3. வங்கிக் கணக்கு (Bank Account)

வாடகை வருமானம் ஒரு குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் கிரமமான முறையில் வைப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். காசாக(cash) ஆக வாங்கினால் Cash Deposit என்ற வகையில் வங்கியில் வைப்புச் செய்யப்படடிருக்கவேண்டும். அந்த வைப்புக் கணக்கிலிருந்து வீடு சம்பந்தமான ஏனைய செலவுகள் செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்க வேண்டும்.

### 4. வாடகைப் பகுதி (Rental Area)

வீட்டின் எத்தனை வீதமான (பரப்பளவு) வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்பது வருமானவரி விண்ணப்பத்தில் காட்டப்பட வேண்டும்.

### 5. வீடு பராமரிப்பும் திருத்த வேலைகளும் (Repairs and Maintenance)

புதிய வீடுகளை வாங்கிய பலர் 20000 அல்லது 25000 டாலர்கள் என்று செலவு செய்து நிலக்கீழ் வீடுகளைச் செய்துவிட்டு அதை வருமானவரி விண்ணபத்தில் காட்ட முயல்வதுண்டு. நிலக்கீழ் வீடு உருவாக்குவது வீட்டின் தேவைகளை முன்னிட்டதேயன்றி அதற்கும் தனி நபர் வருமான வரிக்கும் சம்பந்தமில்லை. நிலக்கீழ் வீட்டின் உருவாக்கத்துக்குச் செலவுசெய்த பணம் வருமானவரியைப் பொறுத்தவரையில் ஒரு செலவாகக் காட்டப்பட முடியாதது. எம்மில்பலர் கூரை, எரிஉலை (Furnace), யன்னல்கள், வாகனத் தரிப்பு (Driveway) போன்றவற்றைத் திருத்தம் செய்துவிட்டு இதையும் வருமானவரியில் காட்ட முயல்கிறார்கள். இது தவறானது. இச்செலவுகளுக்கும் வருமானவரிக்கும் சம்பந்தமேதுமில்லை. வாடகைக்குக் கொடுக்கப்படும் பரப்பளவு பகுதிகளைத் திருத்துவதற்கான செலவுகளை மட்டுமே வரி விண்ணபப்த்தில் காட்டலாம். உதாரணமாக: கம்பளம் மாற்றுதல் (Carpet Change), குளியறைத் திருத்த வேலைகள் (Washroom Repairs), சமையலறைத் திருத்த வேலைகள் (Kitchaen Repairs) ஆதியன வரி விண்ணப்பத்தில் காட்டக்கூடியன.

### 6. வாடகைக் குடியிருப்பாளர் (Tenant)

வாடகைக்கு இருப்பவர்கள் இரத்த உறவுள்ளவர்களானால் இதை வருமானமாக வாடகைக்குக் கொடுத்தவர்கள் விண்ணப்பத்தில் சேர்த்துக் கொள்ள முடியாது.

### முக்கிய குறிப்பு:

Detached 2 Storey full basement 4 bed and 3 wash. Simply Gorgeous Loaded With Tons Of Upgrades. Better 1Yr Old Brick & Stone Exterior. Welcoming Double Door Entry
BRAMPTON
217,900
Detached 2 storey home with finished basement 3+1 bedrooms and 2 washrooms. Terrific Starter Home Or For Investment! Home Rented, Tenants Are Willing To Stay.
INVESTMENT - Luxury Condominiums, Commercial Properties and Vacant Lands.
Selling and Buying your Properties or Businesses.
Arranging Mortgages for LOWEST INTEREST RATE.
For all your real estate questions and needs Call Param G

# எப்போதையும் விடச் சிறந்த ஏப்பிரல் மாதம்!

## சந்தை நிலவரம் (மே 2007)

**S.K. பாலேஸ்**
- வீடு விற்பனை முகவர் -



### ரொறொன்ரோ வீட்டுச் சந்தை புதிய இலக்கை எட்டியது.

மே மாதத்தில் ஆச்சரியப்படக்கூடிய 11,140 விற்பனையுடன் ரொறொன்ரோ வீடு விற்பனைச் சபை பதிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றது. ரொறொன்ரோ வீடு விற்பனைச் சபை உள்ளூர் வீட்டுச் சந்தையை 40 வருடங்களுக்கு மேலாக கவனித்து வந்தது. ஆனால் இந்தளவு விற்பனையை எந்த ஒரு மாதத்திலும் நெருங்கவில்லை என்று TREB தலைவி டொறொதி மேசன் கூறினார். ஏப்ரல் மாதத்தய 9,452 விற்பனையைவிட மே மாதத்தில் 18வீதம் அதிகம். 2006 மே மாதத்தில் 9434 விற்பனையுடன் இருந்தது. இதுதான் பதிவு செய்யப்பட்ட விபரங்களின்படி மூன்றாவது அதிக விற்பனை.

ஒவ்வொரு வீட்டு விற்பனையும் டொலர் 27,000 அளவான பொருளாதார நடவடிக்கையை உருவாக்குகின்றது. (திருத்த வேலைகள், தளபாடக் கொள்வனவு போன்றவை வீட்டு விற்பனையினால் ஏற்படும் செலவுகளுக்கு மேலதிகமாக இருப்பவை.) அப்படியானால் வீடு விற்பனை முகவர்களும் அவர்களின் வாடிக்கையாளரும் சென்ற மாதம் மட்டும் 300 மில்லியன் உள்நாட்டுப் பொருளாதாரத்துக்கு சில்லறைச் செலவுகளாகக் கொடுத்துள்ளார்கள்.

எனினும் வீட்டு விற்பனை ஆகாயத்தைத் தொடுவதுபோல உயர்ந்தாலும், வீட்டு விலை கட்டுப்படுத்தப்பட்டு சராசரி விலை 2006 மே மாதத்தில் இருந்து 5வீதம் மட்டுமே உயர்ந்து டொலர் 382,787 ஆக இருந்தது.

### வணிகச் சந்தை நிலவரம் மே-2007

மே மாதத் தொகையான 990,715 சதுரஅடி இடம் ரொறொன்ரோ MLS முறை மூலம் குத்தகைக்கு விடப்பட்டது. தொடர்ச்சியான சிறப்பான செயற்பாடு என்று வர்த்தகச் சங்கத் தலைவர் றொன் றிட்ஸ்டில் கூறினார். 2007ல் இதுவரை 600,000 சதுரஅடி இடம் விற்பனையானது இது ஒரு நல்ல வேகம் என்றார் திரு. றிட்ஸ்டில்.

மே மாதம் விலைகள் மேல்நோக்கிச் சென்றன. குத்தகைக்கு விடப்பட்ட இடம் (சகல அளவும் பிரிவுகளும்) சராசரி டொலர் 6.14sfn. இது 2006மே மாதம்பதிவு செய்யப்பட்ட டொலர் 5.58sfn. அலுவலக இடம் 13வீதம் உயர்ந்து டொலர் 12.06sfn ஆக ஒரு வருடத்துக்கு முந்திய சராசரி விலைகளைவிட உயர்ந்தது.



### விற்பனைச் சந்தையின் முக்கிய சிறப்புக்கள்.

மே மாதம் தொழில், அலுவலகச் சொத்துக்கள் 72 விற்பனையாகின. அவற்றுள் 44 தொழில் இடங்கள். (சகல அளவுப்பிரிவுகள்) இவை சராசரி டொலர் 69.99 சதுர அடியாக இருந்தது.

**மொத்த விற்பனை விபரம்**

| பிரதேசம் | விற்பனை | சராசரி விலை(டொலர்) |
|---|---|---|
| 28-மேற்கு வட்டாரங்கள் | 4175 | $956,836 |
| 14-மத்திய வட்டாரங்கள் | 2038 | $506,172 |
| 23-வடக்கு வட்டாரங்கள் | 2323 | $408,391 |
| 21-கிழக்கு வட்டாரங்கள் | 2610 | $305,168 |

**தனிக்குடும்ப வீடுகள் விபரம்**

| வீட்டு மாதிரி | விற்பனை | வீதம் | மீடியன் (டொலர்) |
|---|---|---|---|
| Detached | 5635 | 99 | 398,000 |
| Semi Detached | 1366 | 100 | 321,000 |
| Condo T.H. | 898 | 98 | 244,500 |
| Condo Apt. | 2242 | 98 | 231,000 |
| Link | 232 | 98 | 299,500 |
| Aff Row T.H | 724 | 99 | 296,750 |
| Co-Op. apt. | 44 | 97 | 183,250 |
| Det.Condo. | 05 | 98 | 258,000 |

**வீட்டுச் சந்தைச் சுட்டிகாட்டிகள்**

| | மே-2006 | மே-2007 | வீதமாற்றம் |
|---|---|---|---|
| விற்பனை | 9,434 | 11,146 | (+18%) |
| புதிய பட்டியல் | 17,685 | 17,399 | (.2%) |
| விறுவிறுப்புப் பட்டியல் | 26,220 | 23,739 | (.9%) |


எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி. பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

HOMELIFE FUTURE REALTY

Office: 416-264-0101
Fax: 416-261-1519

262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5

HOMELIFE HIGHER STANDARDS

*Happy 5th Anniversary!*

We are congratulating,

**Mr. Selva Vettivel**

For running HomeLife Future Realty for 5 amazing years.

We wish you the best of luck in the future.




LOKAN SUNDARAM
*Broker*
*416-450-3984*



ELAN KANDASAMY
*Sales Rep.*
*416-562-5736*



KATHIR KANDIAH
*B.A ,Math Spec.Trai.*
*Sales Rep.*
*416-230-6462*




மார்க்கம் மாநகரில்...

UCMAS

For 4 - 12 years old Children

உங்கள் குழந்தைகளிடத்தில் மறைந்துள்ள நினைவாற்றல், மனஒருமைப்பாடு மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது.

UCMAS மனக்கணிதம் கற்பதன் மூலம்
உங்கள் குழந்தை கணிதப்பாடத்தில்
ஒரு வல்லவராக திகழ அழையுங்கள்

Contact: Suren

UCMAS Markham South Centre
8 Shadlock St., Unit 5
Markham, ON L35 3K9
416.821.2011

- Whole brain development program for children
- Confluence of ancient art and modern science of calculation that bring about speedy and accurate calculation
- Help to remove the 'fear' of Mathematics in school
- Attainment of life long skills that is concentration, creativity attentiveness and self confidence



digi Media Creations

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

# மங்காத கடன் என்று சங்கே முழங்கு


பெரி
முத்துராமன்
- Senior Prsonal Banking Officer -

### இதுவரை:

பொதுவாக முதல் கடனட்டை பெற்ற தினத்திலிருந்து உங்கள் கடன்சரிதம் கனடாவில் ஆரம்பமாகின்றது. நீங்கள் உங்கள் கடனை எவ்வாறு பராமரிக்கிறீர்கள் என்பதற்கு தரும் மதிப்பெண்ணே கிரடிட்ஸ்கோர் அல்லது கடன் மதிப்பெண் ஆகும். இந்தக் கடன் மதிப்பெண் 300 லிருந்து 900க்குள் இருக்கும். மதிபெண் கூடக்கூட உங்களுக்குக் கடன் கிடைக் கக்கூடிய வாய்ப்பும் அதிகரிக்கின்றது என்று பொருள். கூடிய மதிப்பெண் குறைந்த வட்டியில் கடன் பெற்றுத் தருகின்றது. மொத்தக்கடன் மதிப்பெண் தவிர, ஒவ்வொரு கடனையும் எவ்வாறு கட்டி வந்துள்ளீர்கள் என்பதை ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஆன எண்ணின் மூலம் தெரியப்படுத்துவார்கள். R1 உரிய தேதிக்குள் தவணையைக் கட்டி வருகிறீர்கள் என்றும் R9 மோசமான கடனாளி என்றும் நீங்கள் கடன்பெற விண்ணப்பிப்பவர்களிடம் அறிமுகப்படுத்தும். இதில் R1தான் சிறந்தது என்று சொல்லவும் வேண்டுமா?

கடன் மதிப்பெண் பல காரணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. எல்லாக் காரணிகளுக்கும் சம முக்கியத்துவம் இல்லை. அத்தகைய சில காரணிகளைப் பார்ப்போம்.

- உங்கள் கடன் சரிதம் எவ்வளவு பழையது?
- எத்தனை நிறுவனங்கள் உங்கள் கடன் சரிதத்தைப் பார்த்தன?
- நீங்கள் அத்தகைய கடன்களை எவ்வாறு உபயோகிக்கின்றீர்கள்?
- உங்கள் கடனை முழுமையாக உபயோகிக்கிறீர்களா?
- வசூல்த் தரகர்களிடமிருந்து உங்களுக்கு அழைப்புக்கள் வந்துள்ளனவா?
- வங்குரோத்து அறிவித்துள்ளீர்களா?

### இனி:

உங்களைப் பற்றிய விபரங்கள், குறிப்பாக மோசமான விபரங்கள் எவ்வளவு காலம் கடன் சரிதத்தில் இடம்பெறும் என்று இனிப் பார்ப்போம்.

|  | எக்யு.்.பக்ஸ் | டிரான்ஸ்யூனியன் |
|---|---|---|
| தவணை தவறிய கடன்கள் | 6 | 6 |
| நீதி மன்றத் தீர்ப்புக்கள் | 6 | 7 |
| வசூல் நடவடிக்கைகள்(கலெக்ஷன்ஸ்) | 6 | 6 |
| பதிவு செய்யப்பட்ட அடமானக் கடன்கள் (Secures Loans) | 6 | 5 |
| வங்குறோத்து (Bankruptcy) | 6 | 7 |
| நுகர்வோர் கடன் திட்டம் (Consumer Proposal) | 3 | 3 |
| கடன் ஆலோசனை | 3 | 2 |

இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. அந்தந்த மாநில சட்டங்களைப் பொறுத்தது. மேலும் காலஅளவு சிலசமயம் எக்யு.்.பக்ஸ்க்கும் டிரான்ஸ் யூனியனுக்கும் இடையில் கூட வேறுபடலாம். உதாரணத்திற்கு ஒன்ராறியோ மாநிலத்தில் எக்யு.்.பக்ஸ் மற்றும் டிரான்ஸ் யூனியன் உங்களைப் பற்றிய தகவல்களை எவ்வளவு காலத்துக்கு வைத்திருக்கும் என்று வருடங்களிலப் பார்ப்போம்.

முன்னர் குறிப்பிட்டதைப்போல டிரான்ஸ் யூனியன் மற்றும் எக்யு.்.பக்ஸ் ஆகிய இரு நிறுவனங்களுமே கடன் மதிப்பை அளவிட எண் 300 லிருந்து 900க்குள் பயன்படுத்துகின்றன. முன்னர் குறிப்பிட்டதைப்போல கூடிய மதிப்பெண் உங்களுக்கு நன்மையைப் பெற்றுத்தரும். ஆனால் இந்த இரு நிறுவனங்களும் ஒரேமாதிரியாக விபரங்களை மதிப்பிடுவதில்லை. அதனால் இந்த இரு நிறுவனங்களுக்கு இடையேயும் ஒவ்வொருவருக்கும் கடன் மதிப்பெண் நிச்சயம் மாறும். பெரும்பாலான நிறுவனங்கள் எக்யு.்.பக்ஸ் மூலம் கடன் சரிதத்தைப் பெறுகின்றன. சில நிறுவனங்கள் டிரான்ஸ் யூனியனின் மூலம் கடன் சரிதத்தைப் பெறுகின்றன. சில நிறுவனங்கள் இரண்டிலும் உள்ள கடன் சரிதத்தைப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகின்றன. வீடு போன்ற பெரிய கடன்களுக்கு விண்ணப்பிக்கு முன் எக்யு.்.பக்ஸ் மற்றும் டிரான்ஸ் யூனியன் இரண்டிலுமே நம்மைப் பற்றி உள்ள விபரங்களைச் சரி பார்த்துக்கொள்ளுதல் நல்லது. சரியில்லாத விபரங்கள் இருந்தால் கடனுக்கு விண்ணப்பிக்கு முன் கடன் சரித நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, தகுந்த ஆதாரங்களின் மூலம் தவறை நிரூபித்து சரி செய்து கொள்ள வேண்டும். இதைப் பற்றி விரிவாக இன்னொரு சமயம் ஆராய்வோம்.

அடுத்துவரும் தொடரில் எக்யு.்.பக்ஸ் எதன் அடிப்படையில் குறிப்பாக கடன் மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது, டிரான்ஸ் யூனியன் எதன் அடிப்படையில் கடன் மதிப்பெண்ணைத் தீர்மானிக்கின்றது என்றும் பார்ப்போம்.

ஆண்டுக்கு ஒருமுறை உங்கள் கடன் சரிதத்தை இலவசமாகப்பெற்று விபரங்களைச் சரிபார்த்துக் கொள்ளலாம். உங்கள் கடன் சரிதத்தைக் கேட்டு நீங்கள் விண்ணப்பிப்பது உங்கள் கடன் மதிப்பெண்ணைக் குறைக்காது. ஏனென்றால் அது உங்கள் உரிமை. ஆனால் இலவசமாகப் பெறும் கடன் சரிதத்தில் கடன் மதிப்பெண் தெரியாது. கடன் மதிப்பெண்ணையும் பார்க்க வேண்டும் என்றால் இணையத்தளத்தின் மூலம் கிரெடிட் கார்ட் வழியாக பணம் செலுத்தி கடன் மதிப்பெண்ணைப் பார்க்கலாம்.

இதற்கான இணையத்தள முகவரிகள்:
**www.equifax.ca**
**www.transunion.ca**

இந்நிறுவனங்களின் தொலைபேசி எண்கள்:
**எக்யு.்.பக்ஸ்: 1-800-465-7166**
**டிரான்ஸ்யூனியன்: 1-866-525-0262**

மேலும் பல பயன் உள்ள விபரங்களை இனிவரும் மாதங்களில் பார்ப்போம். இதற்கிடையில் பல பயன்தரும் விபரங்களை நீங்கள் மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாமே.

(தொடரும்)

■ ■ ■



VIEW TECH WINDOWS INC.
•Industrail •Commercial • Residential
• Storm Doors
• French Doors
• Patio Doors
• Porch Enclosures
• Thermal Windows
• Vinyl Windows
• Aluminum Windows
• Glass & Screen

All work Guaranteed
Vinyl and Aluminum Replacement Windows
FREE ESTIMATE
6068 Netherhart Rd Unit # 5, Mississauga, ON
KARUNA 905•796•9292/ 416•892•7070

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை
Scotiabank™
Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Senior Personal Banking Officer
Direct Line: 416.439-3040 x:2008

VJ'S
RENOVATION & CARPET CLEANING

• HARDWOOD FLOORING
• PLUMBING
• BASEMENT WORKS
• ELECTRICAL WIRING
• CARPET CLEANING (RESIDENTIAL/COMMERCIAL)
• TOTAL RENOVATION
CONTACT: VJ. KUMAR
647.588.2880

Cell tel Mobility

# CELL TELL MOBILITY

FOR ALL YOUR CELLPHONE AND ACCESSORY NEEDS...

We sell new & used cellphones, pagers and accessories for:

**Rogers Wireless, Fido, Telus Mobility, Bell Mobility**



NEW

**VIDEO CALLING**

Talk face to face with your friends and family in real time with video calling

**UNLIMITED LOCAL CALLING !!!**

**$40 /Month**

PREPAID ONLY



BLACKBERRY 8800 NOKIA N95 SAMSUNG I600

## CELL TELL MOBILITY WIRELESS REPAIR CENTRE

NOKIA, MOTOROLA PANASONIC, SONY ERICSSON, SAMSUNG

Display, Antenna Replacement and all the repairs... Call us first....

**PHONE RENTAL** • Planning a Vacations? You can rent a world wide GSM Phone

**We Also UNLOCK GSM PHONES**

| Eglinton/Midland | 16th Ave/Markham | Birchmount/Finch |
|---|---|---|
| 2687 Eglinton Ave. East | 220 - 5990 16th Ave. | 5C - 2950 Birchmount Road |
| 416.266.6818 | 905.201.4859 | 416.495.7776 |

**Call Toll Free: 1.877.312.5123** **Shop Online @ www.celltelmobilty.com**

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**Neilson/Finch**
4 B/R for Rent
416-910-0487

**Manson/ Ellesmere**
2B/R Basement Apt.
416-617-4671

**Eglinton/Donmils**
3B/R Condo for sale
416-429-6276

**Markham/Eglinton**
3B/R Condo for rent.
1 room available in 2B/R Apt.
647-409-6759

**Midland / Eglinton**
1 B/R in Basement Sep.ent.
3 B/R in top floor.
416-826-1643

**Old finch/ Stains**
1 B/R Basement
416-298-7336

**McCowan/ 16th Ave.**
2B/R Basement. Immid.
416-414-5562

**Malvern Mall**
2 B/R Basement
416-802-2827

**McCowan / Steels.**
2B/R Basement.
Cable, car park.
905-209-8540

**Jane / Finch**
2 B/R for rent in house.
416-745-0283

**Kennedy/ Eglinton**
1 B/R Basement
416-792-5073

**Mlvern Area**
1or 2B/R apt.
416-208-7361
416-994-1990

**McCowan / Lawrence**
3 B/R house for rent
416-431-7912

**Markham & Steel**
1/B Room Basement for Rent
Call: 416 917 8336

**Scar. Golf & Lawrence**
3B Room + 2/B Room Full House for Rent
Call: 416 724 0532

**Morningside & Sheppard**
3/B Room, 2/W Room
2/B Room House for Rent
Call: 416 283 5530

**Woodbine & Dun forth**
1/B Room Basement for Rent
&600.00
Call: 416 421 3960

**Brimley & Steel**
2 /B Room Basement for Rent
All facilities with Cable, & Park
Call: 416 421 3960

**McCown & Lawrence**
2/B Room Basement for Rent.
All facilities with Separate Entrance
Call: 416 431 7570


ELROD
Renovation

- Kitchen
- Washroom
- Hardwood Flooring
- Laminate Flooring
- Tiling
- Electrical
- Plumbing
- Separate entrance
- Full basement

Over 12 years of experience

For free estimate and consultation contact
Prem @ 416-712-1016


**Kennedy & Eglinton**
1/B Room Basement for Rent
(for Single Person)
Call: 416 285 7116

**Midland & Lawrence**
2/B Room Basement for Rent
(Separate Entrance)
(School, TTC + All facilities)
Call: 416 417 9027/416 751 5584

**Front of York University**
3/B Room for Rent for Student
416 546 1475 or 416 627 1956

**Morningside & Lawrence**
2/B Room Basement for Rent
Separate Entrance
416 287 9832 or 416 567 5043

**Neilson & McLeven**
2/B Room Basement for Rent
Separate Entrance
Call: 416 292 1953

**McCowan & Steel**
2/ Room Basement
Separate Entrance
Call: 905 294 9735 or 416 509 1260

## HOUSE / CONDO FOR SALE

**Markham/ Eglinton**
3 B/R House.
Free Hold Townhouse for sale
416-459-0417

**Victoria park/ Eglinton**
3B/R Condo for sale/ rent. A/C
416-264-9442 / 416- 615- 1897

**Morningside & Passmore**
4/B Room New(3 Yrs.) House for sale
2700 Sq.feet
Closing August
Call: 416 291 3997

**Keel & Finch**
2/B Room condo for Sale
$10.000.00
Call: 416 456 8895

## AUTO FOR SALE

**97 Toyota Camery**
- 233k
647-500-8215

**1990 Toyota Camery**
1 Owner $1000.
92 Toyota Corolla 287km. $1200.
905-471-7373 / 416-402-1124

**99 Volvo**
880 model 2.8.
197km. -navy blue. 7 900.
416-665-6750 / 416-903-9387

**94 Toyota Corolla**
243km.
416-417-1719

**91 Toyota**
647-223-6071

## OTHERS

**Painting**
Call - 416-828-5745

**Washer/Dryer**
Mag fag- new
416-917-8336
available: fixers for Basement

**Daycare (1-10)**
Scarborough Golf Club
416-847-9802

**Moving sale**
Markham/Lawrence
416-438-5301


CTR
கனடியத் தமிழ் வானொலி
416.264.8798



**Washer/Dryer**
Mag fag- new
416-917-8336
available: fixers for Basement

**Moving sale**
Markham/Lawrence
416-438-5301

**Daycare (1-10)**
Scarborough Golf Club
416-847-9802


**Employment**
Toronto Sun. Delivery.
416-455-3514 / 416-283-7586
Ajax / Pickering

**Type winter.**
TV 26' with stand
416-297-7633

**Senior sawing class.**
Free ticket.
416-922-9850 / 416-972-9728
office: 416-323-9086

**Moving sale**
McCowan/ steels
647-444-4017

**Plant for sale**
Clay pots in, rose of cheran.
Vilvan: 905-201-9116

**Washer / Dryer**
416-917-8336
Moving sale
flat screen. Bunk bed. Tables.
416-823-3552

**Need a room for rent**
In Hourontario/ Hwy 10 area.
Contact: 416-558-0829

**Moving sale**
Neilson/Finch
416-298-0843
416-319-2250


தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

உங்கள்
சிறு
விளம்பரங்களும்
வீடு
பத்திரிகையில்
விளம்பரமாவதற்கு
416-646-3422

# நீரின் சக்தி

**சூழல் - 4**

**- பொன் குலேந்திரன் -**

சக்தி, வலு, விசை ( Energy, Power. Force) இவை ஒன்றோடு ஒன்று இணைந்தவை. மனிதன் தன் பயனுக்கு இயற்கையில் இருந்து இவற்றைப்பெறுகிறான். இதனைப் பெறுவதற்கு நீர் மூலாதாரமாக அமைகிறது. அருவியில் வேகமாக விழும் நீரினுள் உள்ளடங்கியுள்ள சக்தி மின்சாரமாக மாற்றப்படுவதை நாம் பல நாடுகளில் கண்டுள்ளோம். வேகமாக ஓடும் நதியின் நீர், கடல் அலைகளின் வலு, பூமிக்கடியில் இருந்து வெளிவரும் வெந்நீர் ஊற்று, பரந்த ஏரிகளில் இருந்து வாய்க்கால் வழியே ஓடும் நீர் இவையெல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் மனித இனத்துக்கு உதவுகிறது.


## கடற் கோள்கள்

கடற் கோள்கள் கடல் நீரினது சக்திக்கு ஒரு எடுத்துக்காட்டு. அதனால் தானோ என்னவோ கடலை சமுத்திரதேவி என நாமம் சூட்டி சக்தியாய் இந்துக்கள் வழிபடுகிறார்கள். சமுத்திரத்தின் உக்கிரத்தில் இருந்து தம்மை காப்பாற்றிக்கொள்ள, மீனவர்கள், பொங்கல் செய்து படைத்து தீக்குளித்து வணங்குவதுண்டு. 2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி கடலுக்கடியில் ஏற்பட்ட 9.2 ரிட்சர் அளவுகோலுடைய பூகம்பமானது கடல் நீரினது சக்தியின் வலுவை சுனாமி என்ற பேரலைகளின் தோற்றத்தின் மூலம் உலகுக்கு எடுத்துக்காட்டியது. இவ்வலைகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை 14. இறந்த மக்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்தை தாண்டி விட்டது. இலங்கையில் மட்டும் ஒரு சில நிமிடங்களில் இறந்தவர்கள் எண்ணிக்கை 38000. காணமல் போனவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகம். இத்தகைய சக்திவாய்ந்த அலைகள் கடலில் எவ்வாறு உருவாகின? இவ்வலைகள் தோன்றுவதற்கு தூண்டுகோலாக பூமி இருந்தது. உலகில் கடலுக்கடியில் வருடாவருடம் எத்தனையோ பூகம்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் எல்லாப் பூகம்பங்களும் சக்திவாய்ந்த பேரலைகளைத் தோற்றுவிப்பதில்லை. இதனால் தோன்றும் பேரலைகள் ஒரு நாட்டின் கரையோரப் பகுதியைப் போய்ச் சேரும் போது சக்திவாய்ந்த உயரமான அலைகளாய்த் தாக்குகின்றன. அதுவும் மக்கள் தொகை அதிகமாக மீனவர்களும், உல்லாசப் பயணிகளும் வாழும் கரையோர நகரங்களைத் தாக்கும்போது மக்கள் அழிவு அதிகமாகிறது. இப்பேரலைகள் தோன்ற கடலுக்கடியில் பூகம்பம், எரிமலை வெடிப்பு, கடும் சூறாவளி, மண் சரிவு, வானத்தில் இருந்து வந்துவிழும் பிரமாண்டமான எரிகல், கடலுக்கடியில் அணுவாயுத பரிசோதனை காரணங்களாக அமைகிறது. ஜப்பானிய வார்த்தையான சுனாமியின் அர்த்தம் துறைமுக அலையாகும். ஜப்பானுக்கு அருகேயுள்ள கடலுக்கடியில் உள்ள தரையில் பூகம்பங்கள் அடிக்கடி தோன்றி பேரலைகளை உருவாக்கி ஜப்பானிய துறைமுகங்களை தாக்குவதினால் இப்பெயர் உருவாகியது. கிட்டத்தட்ட 195 தடவைகள் சுனாமி ஜப்பான் கரையோரப் பகுதிகளைத் தாக்கியுள்ளது. நடுக்கடலில் சுனாமி அலையின் உயரம் அதிகளவு கிடையாது. ஆனால் அலைகள் கடற்கரையை அடையும் போது அவ்வலைகள் விஸ்வரூபம் எடுத்து பல கி.மீ தூரம் வரை கடற்கரை பகுதிகளைத் தாக்கி அழிக்கிறது.

காலத்துக்கு காலம் ஏற்பட்ட இயற்கையின் சீற்றம் உலகின் வரலாற்றினையும் ஒரு நாட்டின் புவி அமைப்பின் தோற்றத்தினையும் வெகுவாகப்பாதித்துள்ளன. இலங்கைத் தீவானது கடற்கோள்களினால் பண்டைய காலங்களில் எவ்வளவுக்கு பாதிப்படைந்தது என்பதை அண்மையில் நடந்த சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பேரழிவின் பின் ஆராய்ச்சிக்குரிய விடயமாக அமைந்துள்ளது. தீவின் சுமார் 1000 மைல்களைக் கொண்ட கடலோரப் பகுதிகளில் எழுபது விகிதம், அதுவும் வடக்கு, கிழக்கு, தெற்கு, தென்மேற்கு பகுதிகளின் சில பகுதிகள் இப்பேரலைகளின் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளது. தீவு என்ற காரணத்தால் கடலோரங்களில் கடற்தொழிலை நம்பி வாழும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர். இலங்கைத் தீவின் வட பகுதியிலும் தென் மேற்குப் பகுதிகளான புத்தளம், மன்னார் பகுதிகளிலும் எருமைத்தீவு, காரைதீவு, காக்கைதீவு, கச்சைதீவு போன்ற சிறு சிறு தீவுகள் இருப்பதற்குக் காரணம் ஒரு காலத்தில ஏற்பட்ட கடற்கோள்களேயாகும். அதோடு மட்டுமன்றி வடக்கு கிழக்கு கடலோரப் பகுதிகளில் மூதூருக்கருகே உள்ள கோடியார்குடா, பொத்துவில்லுக்கருகே உள்ள அறுகம் குடா, வண்டலூர் குடா, கல்குடா போன்றகுடாக்களும், கோக்கிளை, மட்டக்களப்பு வாவி, நந்திக்கடல் ஆகிய பல வாவிகளும் இருப்பதை அவதானித்தால் கடலரிப்பும் கடற்கொள்களும் அவைற்றை தோற்றுவித்திருக்கலாம் என்று யூகிக்கக் கூடியதாக இருக்கிறது. இவைற்றின் தோற்றத்துக்கு கடல் நீரின் சக்தி எடுத்துக்காட்டு.

## இலங்கையில் ஏற்பட்ட கடற்கோள்கள்

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட கடற்கோள் போல் பலசுனாமிகள் இலங்கையைப் பாதித்துள்ளது. ஆனால், அதற்கான பதிவுகள் குறைவு. இலங்கைக்கு தெற்கே தென்துருவம் வரை பரந்த கடல். இதனால் கடலில் மிதந்த நிலையில் இருப்பதினால் கடலுக்கு கீழே பூகம்பங்கள் ஏற்படுவதினால் சுனாமி தோன்றி இலங்கைத் தீவினைப் பாதிக்க கூடிய நிலை ஏற்படுகிறது. இதற்கு முக்கியகாரணம் தீவுக்குக் கிழக்கே அந்தமான்தீவுகள் முதற்கொண்டு இந்தோனேசியாவரை உள்ள கடலுக்கடியிலான வெடிப்பு. இவ்வெடிப்பில், பூமியின் தகடுகள் அசைவதினால் கடலுக்கடியில் பூகம்பம் ஏற்பட்டு சுனாமியைத் தோற்றுவிக்கிறது. இதுவே 2004ம் ஆண்டு டிசம்பர் 26ல் பண்டாஅசேக்கு அருகே உள்ள கடலுக்கடியில் 9.2 ரிட்சர் அளவில் ஏற்பட்ட



பூகம்பம், பேரழிவு உள்ள சுனாமியைத் தோற்றுவித்து 14 நாடுகளைப் பாதித்தது. இலங்கையில் மட்டும் 36,000க்கு மேற்பட்டவர்கள் உயிர் இழந்தார்கள். பூகம்பம் நடந்தஇடத்தில் இருந்துதோன்றிய பேரலைகள் இலங்கைத்தீவை வந்தடைய 2.5 மணித்தியாலங்கள் எடுத்தன. தொழில்நுட்பமும் தகவல் பரிமாற்ற முறையும் முன்னேறிய காலகட்டத்தில், இலங்கை அரசின் கவனயீனமே இவ்வளவு மக்கள் பலியாவதற்குக் காரணமாகவிருந்தது. இது போன்று இலங்கைக்கு மேற்கே மாலைத்தீவில் ஆரம்பித்து தென்னிந்தியாவுக்கு 1600 கி.மீ தெற்கே, Diego Garcia தீவுகள் வரை கடலுக்கடியில் ஒரு வெடிப்புண்டு. இங்கும் பூகம்பம் ஏற்படலாம். 1983ம் ஆண்டு நொவெம்பா 30ம் திகதி இத்தீவில் இருந்து 34 மைல் தூரத்தில் வடமேற்கு கடலில் 7.1 ரிட்சர் அளவுகோலில் பூகம்பம் ஏற்பட்டு 5.0 அடி உயரத்துக்கு அலைகள் தோன்றி இத்தீவினைத் தாக்கியது. இன்னும் வலுகூடிய பூகம்பம்ஏற்படின் சுனாமி இலங்கைத் தீவின் தென் பகுதியினையும் மேற்குப் பகுதியினையும் தாக்கலாம். அவ்வாறு நடப்பின் பேரலைகள் கொழும்பு நகரம் உட்பட மேற்குப் பகுதிகளைப் பாதிக்கலாம். இலங்கைத் தீவு அமைந்துள்ள இடம் இயற்கையின் அழிவுக்கு உகந்த இடமாக வுள்ளது.

சிறிதளவான கடற்கோள்கள் ஏற்பட்டு பல தீவுகள் இலங்கைத் தீவினைச் சுற்றித் தோன்றியுள்ளன. யாழ் குடாநாட்டுக்கு அருகே உள்ள தீவுகளும் இவ்வாறே தோன்றியிருக்கலாம். பெரும் சூறாவளியினாலும் பூகம்பத்தினாலும் ஏற்பட்ட கடற்கோள்கள் இலங்கையையும் தென் இந்தியாவையும் பிரித்தன. ஒரே நிலப்பரப்பாக இருந்து, கல்பிட்டி பொன்பரப்புப் பகுதிகள் கடலால் பிரிந்து, புத்தளம் வாவி தோன்றியது. பந்துவாசன் என்ற இலங்கை அரசன் காலத்தில் ஏற்பட்ட கடற்கோளினால் தென்னிந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையே இருந்த 'இராமணணை' என்ற நிலப்பரப்பின் பகுதி கடலுக்குள் மூழ்கியதாக வரலாறுண்டு. கி.மு 2ம் நூற்றாண்டில் களனிதிஸ்ஸ எனற மன்னன் களனிப் பிரதேசத்தை ஆண்டான். இவனது பெயரே களனி நதிக்கு சூட்டப்பட்டது. அவனது அழகிய மனைவி, மன்னனின் சகோதரன் மேல் காதல் கொண்டாள். அதற்குத்தூதாக ஒரு புத்த பிக்குவை அனுப்பிய போது, கடிதம் கொண்டுவந்த பிக்குவை மன்னன் கையும் களவுமாகப் பிடித்து கொதிக்கும் எண்ணையில் உயிருடன் போட்டுக் கொன்றான். மன்னனின் ஆட்சியில் அட்டூழியங்கள் அதிகரித்ததினால் கடற்கோள் அப்பகுதியில் ஏற்பட்டு பல நகரங்களும் மக்களும் அழிந்தனர். கடலில் இருந்து 14 மைல் தூரத்தில் இருந்த களனி விகாரை, கடற்கோளினால் 10 மைல் தூரமாக குறைந்தது. சமுத்திரத்தின் கோபத்தை தணிக்க தனது அழகிய மகளை ஒரு தோணியில்ஏற்றி ஒரு மாதத்துக்குத் தேவையான உணவுப் பண்டங்களையும் வைத்து கடலுக்குத் தானமாகக் கொடுத்தான். அத்தோணி சில நாட்களுக்குப் பின்னர் இலங்கையின் தென் பகுதியான கதிர்காமத்துக்கு அருகேஉள்ள கிரிந்த என்ற கரையோரப்பகுதியை அடைந்தது. ருகுண பகுதியை ஆண்ட கவன் திஸ்ஸ என்ற இளவரசன் அவள் அழகைக் கண்டு, மோகம் கொண்டு திருமணம் செய்தான். விகாரை ஒன்று அருகே, தோணி போய்க் கரை சேர்ந்ததால், அவளுக்கு விகார மகாதேவி என்ற பெயர் சூட்டப்பட்டதாக மகாவம்சம் என்ற பௌத்த நூல் சொல்கிறது. இவளுக்குப் பிறந்தவனே துட்டுகைமுனு ஆவான். இவளது பெயரில் கொழும்பு மாநகரசபை கட்டிடத்திற்கு முன்னே பூங்கா ஒன்றுண்டு. ஆகவே கடற்கோள்கள் இலங்கைக்கு புதுமையான தொன்றல்ல. இயற்கையின் சீற்றமானது ஒரு தீவினை எப்போதும் புயல், தொடர்ந்த மழையினால் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பூகம்பம், சுனாமி போன்றஉருவில் தோன்ற ஏதுவாகிறது. மக்களை அச்சீற்றங்களில் இருந்து பாதுகாப்பது அரசின் கடமை.

சுனாமி என்ற பேரலைகள் பூகம்பத்தின் அளவு கோலினையும் கடலுக்கடியில் எவ்வளவு தாழ்வில் அது இடம்பெற்றிருக்கிறது என்பதிலும் தங்கியுள்ளது. மெகா சுனாமி என்று அழைக்கப்படும் மிக பெரிய சுனாமி அலஸ்காவில் உள்ள லித்துயா குடாவை 1958ம் ஆண்டு ஜூலை மாதம் தாக்கியது. அவ்வலையின் உயரம் 1,720 அடிகளாகும். 8.3 ரிட்சர் அளவு கோலுடைய பூகம்பத்தின் பின்னர் ஏற்பட்ட பனிமலைகளின் சரிவால் இப்பேரலைகள் தோன்றின. 1755ல் அட்லான்டிக் சமுத்திரத்தில் ஐரோப்பாவுக்கு அருகே ஏற்பட்ட பூகம்பம் போர்த்துக்கலின் லிஸ்பன் கடலோர நகரத்தைத் தாக்கியதால் பேரழிவுகள் ஏற்பட்டன.

2004ம் ஆண்டுக்கு முன்னர், 1883ம் ஆண்டு ஆகஸ்ட கரகோட்டா என்ற எரிமலை சுமத்திராவுக்கு அருகே வெடித்து, கடலுக்கடியே மறைந்தபோது ஏற்பட்ட பேரலைகள் ஹம்பாந்தோட்டை, காலி, குமண போன்ற கரையோரப் பகுதிகளைத் தாக்கின. ஆனால் அழிவுகள் பெரிதாக இருக்கவில்லை. இதற்குப் பின்னர் 1941ம் ஆண்டு ஜூன் மாதம் அந்தமான் தீவுக்கு அருகே கடலுக்கடியில் பூகம்பம் ஒன்று 7.0 ரிட்சர் அளவு கோலின்படி ஏற்பட்டாலும் சுனாமி அலைகள் வலு குறைந்தபடியால் இலங்கைத் தீவினைத் தாக்கவில்லை. ஆனால் பூகம்பத்தின் அதிர்வுகளை தீவில் உணரக்கூடியதாக இருந்தது. இச்சம்பவங்கள் எல்லாம் இலங்கைத்தீவினை இயற்கையின் சீற்றம் எந்நேரமும் தாக்கலாம் என எடுத்துக்காட்டுகிறது. இலங்கையின் தென் பகுதிக்கு அப்பால், வெகு தூரம் தென்

45ம் பக்கம் பார்க்க...

# நீரின் சக்தி....



45ம் பக்கத் தொடர்ச்சி...

துருவம் மட்டும் சமுத்திரமாக இருப்பதால், கடலுக்கடியில் அப்பகுதியில் பூகம்பம் தோன்றினால், நேரடியாக பேரலைகள் கடலோரப் பகுதிகளைத் தாக்க இலகுவாக உள்ளது. சமுத்திர தேவியின் கோபத்தில் இருந்து இலங்கைத் தீவினைக் காப்பாற்றுவதற்கே ஐந்து ஈஸ்வரங்களை இலங்கையின் கடலோரங்களுக்கு அருகே மூதாதையர் அமைத்துள்ளனரா என்பது கேள்விக் குரியது.

கடல் அலைகளில் இருந்து மின்சக்தியைப் பெறும் திட்டம் பிரான்ஸ் தேசத்தில் 1960 முதல் 1966 வரை உருவாகி செயலாக் கப்பட்டது. சூழலைப் பாதிக்காது நன்மை தரும் திட்டமிது. ரஷ்யா . ஸ்கொட்லாந்து நாடுகளிலும் இந்த முறை அமுல் செய்யப் படுகிறது.

## இலங்கைத் தீவில் இனியும் சுனாமிகள் ஏற்படுமா?

இலங்கைத் தீவானது கிழக்கே இந்து சமுத்திரத்துக் கீழ், அந்தமான் தீவு முதல் சுமத்திரா, ஜாவா தீவு வரை அவ்வெடிப்பு இருப்பதினாலும் மேற்கே மாலை தீவு முதல் டியோகா கார்சியா வரை வெடிப் பொன்று கடலுக்கடியில் இருப்பதினால் எந்த சந்தர்ப்பத்திலும் கடலுக்கடியில் 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட பூகம்பம் போல் சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்படலாம் என்பது விஞ்ஞானிகள் கூற்று. இலங்கைத் தீவின் தென் பகுதியில் இருந்து அண்டார்டிக்கா வரை ஒரே சமுத்திரமாகையால், இவ்விரு வெடிப்புகளில், தட்டுகள் உராய்வினால் கடலுக்கடியில் ஏற்படும் பூகம்பத்தினால் சுனாமி தோன்றினால் பெருமளவு இத் தீவினைப் பாதிக்கலாம். அலைகளைத் தடுத்து நிறுத்த நிலப்பரப்புகள் இல்லை. இந்தியாவின் மேற்கு கடலோரங்களும், ஆபிரிக்காவின் கிழக்கு கடலோரங்களும் பாதிப்படையலாம். அதுவுமன்றி தீவின் கரையோரப் பகுதிக்கருகே கடலின் ஆழம் அதிகமாகையால் சுனாமியின் வேகமும் சக்தியும் அதிகரித்து கடலோரப் பகுதி களைத் தாக்கலாம். காரணம் சுனாமியின் வேகம் கடலின் ஆழத்திலும் புவியீர்ப்பின் முடுக்கத்திலும் (Accleration due to Gravity) தங்கியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் சிந்து சம வெளி நாகரீகம்தான் மிகவும் பழமையானது என்கிறது வரலாறு. ஆனால் அதற்கு முன் தோன்றிய மூத்த நாகரீகம் தமிழனின் நாகரீகம். ஆதனால் தானோ என்னவோ கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த தமிழ் என தமிழை அழைத்து மிகவும் பழமை வாய்ந்த தமிழ் மொழியும், தமிழர் நாகரீகம் எனவும் மதிப்பு கொடுத்துள்ளனர். இதற்கான ஆதாரங்களைக் கடல் கொண்டு விட்டது. குமரிக் கடலின் அடியில் உள்ள லெமூரியா கண்டத்தில் தான் மனிதன் முதல் தோன்றினான். லேமூர் என்றால் பரிணாம வளர்ச்சியில் குரங்கிற்கும் மனிதனுக்கும் இடைப்பட்டவன் எனபது பொருள். ஆகவே உலகில் முதல் பரிணாம வளர்ச்சி குமரி கண்டத்தில் நடந்திருக்கிறது. இந்தியாவின தென்பகுதியான கேரளா, தமிழ்நாட்டில் இருந்து இந்தியா இந்துசமுத்திரத்தில் நிலப்பரப்பாக விரிவடைந்து இலங்கைத்தீவு, மடகஸ்கார், தென் கிழக்காசியா, அவுஸ்திரேலியா போன்ற நிலப்பரப்புகளை உள்ளடக்கிய-தாக வரலாறு சொல்கிறது. குமரிக்கடல் 49 ஆயிரம் சதுர மைல்கள் என்கிறார்கள். கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் கிழக்கு எல்லை அவுஸ்திரேலியா, மேற்கு எல்லை மடகஸ்கார், தெற்கெல்லை அண்டார்டிகா. ஒரு காலத்தில் இவை இவை அனைத்தும் ஒன்றாக இருந்திருக் கின்றன. காலப்போக்கில் பிரமாண்டமான கடற்கோள் இவைற்றை பிரித்துள்ளது. இக்கடல் தோன்றக் காரணம் கண்டங்களின் அசைவு ( Continental Shift) அல்லது Meteriorite எனப்படும் வானில் இருந்து இந்து சமுத்திரத்தில் விழுந்த பெரும் எரிகல்லினால் ஏற்பட்ட சுனாமி போன்ற பிரமாண்டமான பெரும் அலைகள் அல்லது கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் தோன்றிய கடற்கோளாக இருந்திருக்கலாம். Dinosaurs என்ற மிருக இனம் கணப் பொழுதில் உலகில் இருந்து மறைந்தன என்கிறது வரலாறு. அதற்கு காரணம் பூமியை எரிகல் தாக்கியதே என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். உயரமான நிலப் பரப்பு கூட கடலில் மூழ்க அதற்கான மிக உயர்ந்த கடல் அலைகள் தோன்றியிருக் கலாம்.

## குமரிக் கண்டம்

குமரிக் கண்டம் அவுஸ்திரேலியாவையும் மடகஸ்காரையும் உள்ளடக்கியிருந்தது என்பதற்கான பல ஆதாரங்கள் உண்டு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். குறிப் பாக அவுஸ்திரேலியா நாட்டின் பழம்குடி யினர் இன்னும் சிவா நடனம் என்ற பழம் பெரும் சிவா நடனத்தை ஆடுகிறார்கள். நெற்றியில் கண் வைத்துக் கொண்டு, முக்கண்ணுடன் ஆடுகிறார்கள். வன உயிர் களை வேட்டையாட அவர்கள் பூமராங் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள். இது எதிரியை அப்படியே தாக்கிவிட்டு திரும்பி அனுப்பியவரிடமே வந்துவிடும். இந்த பூமராங்கைஇன்றும் ஊட்டி கோடைக் கானல் பகுதிகளில் வாழும் பழம் குடி மக்கள் பயன்படுத்துகிறார்கள். இது போல் ஆபிரிக்க பழங்குடியின மக்களுக்கும் தமிழர்களுக்கும் பல ஒற்றுமைகள் இருக் கின்றன. அவர்களும் குடும்பங்களில் வயதானவர்களை நாம் அழைப்பது போல் பாட்டி என அழைக்கின்றனர். அவல் என்ற பெயரை உச்சரிக்கிறார்கள். நமது மீனவர் கள் நாட்டுப் படகை தெப்பம், மிதப்பு என்று அழைப்பது போல் ஆபிரிக்க பழங் குடியினரும் அச்சொற்களைப் பாவிக்கிறார் கள். இது ஒரு காலத்தில் ஆபிரிக்கா குமரிகண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பதற்கு ஆதாரமென்கிறார்கள் ஆராய்ச் சியாளர்கள்.

46ம் பக்கம் பார்க்க...



LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS
"Dedicated and determined to provide the best results for your personal injury claims"

30 மில்லியன் டொலர்கள்
2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்



- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?

MOTOR VEHICLE ACCIDENT
Serious Injuries

Rocky Lofranco
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
LOFRANCO CHAGPAR
Personal Injury Lawyers
வாகன விபத்து கோரிக்கைகளில் 75 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
இலங்கதாஸ் பத்மநாதன்

| TORONTO OFFICE | MISSISSAUGA OFFICE |
| --- | --- |
| Yonge / Norton Centre | Dundas / Hurontario |
| 5255 Yonge Street, | 257 Dundas St. East, |
| Suite1300 North York | Unit 1 |
| 416 223-8333 | 905 275-8806 |

FREEE CONSULTATION
LANKATHAS PATHMANATHAN
416 774-8122
DIRECT LINE
TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

# நீரின் சக்தி...

45ம் பக்கத் தொடர்ச்சி...

நீக்ரோயிட்ஸ் (Negroids) என அழைக்கப்படும் கறுப்பினமக்கள் ஆபிரிக்காவின் பெரும் பகுதிகளில் வாழ்கின்றனர் என்பது பலர்அறிந்ததே. கறுப்பின அவுஸ்திரேலிய பூர்வ குடிமக்களான (Aborigines), அந்தமான் தீவு பூர்வ குடிவாசிகள், இலங்கையை சேர்ந்த வேடவர்கள், நிட்டாவோ இனங்கள், இந்தியாவின் பூர்வ குடிமக்கள் எல்லோரும் கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள். சொலமன் தீவு மக்களும் ஆபிரிக்க இனத்தவருக்கும் நிறத்தில் பல ஒற்றுமைகள் உண்டு. பூமத்திய ரேகையை உள்ளடக்கிய குமரிக் கண்டம் அதிக வெப்ப நிலை காரணத்தால் அக்கண்டத்தில் வாழ்ந்தவர்களின் சருமத்தின நிறம் கறுப்பாக அமைந்தது என்கிறது ஒரு வாதம். நாவலம் என்ற குமரிக்கண்டத்தின் தென் பகுதி தமிழர் நாகரீகம் வளர்ந்த பகுதியென்கிறது வரலாறு. தமிழ் ஆராய்ச்சியாளர்கள் Gondwana என்ற குமரி கண்டத்தின் வடபகுதியே லெமூரியா கணடம் என அழைக்கப்படும் குமரிக் கண்டமாகும். Ruta, Deita போன்ற நாடுகளைப்பற்றி இந்திய இதிகாசத்தில் பேசப்படுகிறது.இந்நாடுகள் குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாகவிருந்து கடலுக்குள் மூழ்கியதாக வரலாற்றாளர்கள் கருத்து. கறுப்பின மக்கள் ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, பப்புவா நியூகினி போன்ற தேசங்களில் காணப்படுவதற்கு இந்நாடுகள் எல்லாம் ஒருகாலத்தில் ஒன்றிணைந்த நிலப்பரப்பாக இருந்தது என்பது ஒரு விளக்கம். இதற்கு ஆதாரமாக ஆவுஸ்திரேலிய பூர்வ குடிமக்களின் பூர்வீகம் குமரி கண்டத்தில் தோன்றியது என்பர். 650 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தென் அமெரிக்கா,ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, தென் துருவம் ஆகிய நிலப்பரப்புகள் ஒரு பரப்பாக Gondwana என்ற பெயரில் அமைந்ததென்பது வல்லுனர்கள் கூற்று. பூமியின் சுழற்சி காரணமாக இந்நிலப்பரப்பு பிரிந்து புதுக் கண்டங்கள் தோன்றியிருக்கலாம். உலகப் படத்தினைச் சற்று கவனமாக உற்று நோக்கினால் ஒவ்வொரு கண்டத்தினது கரையோரங்களின் அமைப்பு மற்றைய கண்டத்துடன் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளதைப் பார்க்கலாம். ஒரு உருளியை (Jar) எவ்வாறு உடைத்துவிட்டு பொருத்த முடியுமோ அவ்வாறு அமைந்துள்ளது. ஒன்று சேர்ந்த கொட்வானா கண்டம் பிரிந்தபோது தற்றேபாதைய கண்டங்கள் தோன்றின. பவழப் பாறைகளைக் கொண்ட தீவுகள் இந்து சமுத்திரத்தில் தோன்றின. இவ்வாறு தோன்றிய தீவுகளில் மால தீவு, லக்ஷதீவுகள், கொக்கூஸ் தீவுகள், சாக்கோஸ் தீவுகளான டியகோ கார்சியா போன்றவை அமையும். இந்தியா, இலங்கை, பவழப்பாறைத் தீவுகள், மடகஸ்கார் போன்ற நாடுகளில் உள்ள தாவரங்களுக்கிடையே உள்ள ஒற்றுமையும் குமரிக் கண்டம் இருந்ததிற்கு ஒரு ஆதாரமாகும்.

தமிழ் வரலாற்றாளர்கள் தமிழ் நாகரீகம் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் நாவலம் என்ற தீவில் உருவாகியது என்கிறார்கள். இதுவே பூமத்திய ரேகைக்கு அருகே தோன்றிய நாடாகும். தமிழ், அறிஞர்களையும் புலவர்களையும் கொண்ட முதலாவது சங்கம் லுமேரியா கண்டத்தில் தோன்றியது என்கிறார்கள். இந்த சங்கம் லுமேரியா கண்டத்தினை கடல் கொண்டு, மதுரை நகரம் இந்து சமுத்திரத்திற்குள் மூழ்கிய போது மறைந்ததாக சரித்திர வல்லுனர்களின் கூற்று. திராவிடர்களே இந்தியாவின் பழம் குடி இனமாவர். ஆரியர்கள் இந்தியாவிற்கு வரமுன்னரே திராவிடர்கள் இந்திய கண்டத்தில் வாழ்ந்தவர்கள்.

குமரிக் கண்டத்தில் ப∴ருளி ஆறு ஓடியதாக வரலாறு. குமரி மாவட்டத்தில் பரளி ஆறு ஓடுகிறது. ப∴ருளிதான் பருளியாக மருவி இருக்கிறது. அது போல பழையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள முதல் அணைக்கட்டில் ப∴ரூளி ஆறு அணைக் கட்டு என குறிப்பிடப்பட்டுள்ளது. 1960ம் ஆண்டு கடலாராய்ச்சியின் போது, ஆராய்ச்சியாளர்கள் குளச்சல் பகுதி கடலுக்கடியில் மலைகளைக் கண்டனர். கடல் கொள்வதற்கு முன்னர் மலை அவுஸ்திரேலியாவரை பரவி இருந்ததாக நம்பப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் பிரசித்தமான தாமிரபரணி என்ற நதி ஒரு காலத்தில் இலங்கையின் மன்னார் பகுதிக்குத் தெற்கே உள்ள தம்பபாணி என்ற பகுதியினூடாக ஓடும் நதியுடன் இணைந்திருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. தம்பபாணி கிராமத்து மன்னும் செப்பு நிற மண்ணாகும். தாமிரம் என்பது செப்பினை குறிக்கும். இந்நதி ஓடும் திருநெல்வேலி நிலமானது செப்பு நிறமான சிகப்பு நிற மண்ணைக் கொண்டது. வருணி என்பது ஓடும் நதியை குறிக்கும் ஆகவே, அப் பெயர் வந்திருக்கலாம். தம்பபானை பகுதியில் உள்ள மண் செப்பு நிறமுடையது என்பது அவதானத்துக்குரியது.

குமரிக் கண்டத்தில் குமரிக்கோடு என்ற இடம் இருந்ததாக வரலாறு கூறுகிறது. இதனால்தான் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடு என்ற பெயரில் முடியும் பல ஊர்பெயர்கள் உண்டு. சங்கம் வளர்த்த தமிழின் தாய்நிலம் குமரிக்கண்டம் தான். அதனால் குமி என்ற பெயரில் பல தேசங்கள் இபபோதுண்டு. மடகஸ்கார் தீவினை குமரி அல்லது கொம்ரூன் என அழைப்பர். 6ம் நூற்றாண்டில் கம்போடியாவில் குமரி அம்மனை வழிபட்டதாக சான்றுகள் உண்டு.

# கடல் கொண்ட காவரிப்பூம் பட்டினம்

பொதுவாக ஆறு கடலுடன் கலக்கும் பகுதியை புகார் என்பர். காவேரி ஆறு கடலுடன் கலக்கும் இடமும் புகாராகும். இவ்விடம் நாகப்பட்டனத்திற்கு வடக்கே சில மைல்கள் தூரத்தில் உள்ளது. அண்மையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் நாகப்பட்டனமும் ஒன்று என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. காவேரி நதி புகும் பட்டணம் என்பதால் காவிரிப் பூம்பட்டினமென அழைக்கப்பட்டது. இப்பட்டினத்தின் சிறப்பைப் பற்றி சங்க கால இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஒரு காலத்தில் சோழ சாம்ராஜ்யத்தின் சிறந்த துறைமுகமாகத் திகழ்ந்தது. இங்கு அயல் நாட்டுக் குதிரைகள் வந்திறங்கின. அதே காலத்தில் மன்னாருக்கு அருகே இருந்த மாந்தை துறைமுகமும் சிறப்புற்று திகழ்ந்தது. பல வகையாலும் சிறந்து வளர்ந்த பூம்புகார் நகரத்தின் ஒரு பகுதி கடற்கோளினால் அழிந்தது. குமரிக் கண்டத்தைக் கடல் கொண்டதற்கான ஆதாரம் சிலப்பதிகாரத்தில் வருகிறது. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் இத் துறைமுகம் சுனாமி அலைகளினால் அழிந்திருக்கலாம். அந்தமான் தீவுக்கு அருகே கடலுக்கடியில் உள்ள வெடிப்பில் பூகம்பம் ஏற்பட்டு பெரும் அலைகள் தோன்றி இந்தியாவின் கிழக்குக் கரையோரங்களை தாக்கி அழித்திருக்கலாம். “ப∴ருளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள” என்று தொல்காப்பியர் எழுதியுள்ளார். குமரிக் கண்டத்தைக் கடல் கொண்ட போது தென்பகுதியின் ஒரு பகுதி கடலுக்குள் அமிழ்ந்து, வடபகுதி மேல் எழும்பியதாக வல்லுனர்கள் கருத்து. மகாபலிபுர கடற்கரையில் அண்மையில் நடத்தப்பட்ட கடலுக்கடியிலான ஆராய்ச்சியில் ஒரு நகரமே மூழ்கி கிடப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். தனுஷ்கோடியையும் மன்னாரையும் இணைக்கும் இராமர் அணை இப்போது சர்ச்சைக்குரியதாகி, இராமனால் அமைக்கப்பட்ட பாலம் என்கிறார்கள் சில இந்திய அரசியல்வாதிகளும் மத வாதிகளும். ஆனால் தென்னிந்தியாவும் இலங்கையும் ஒரே நிலமாக இருந்ததற்கு பல ஆதாரங்கள் உண்டு. பளிங்கு கற்களால் காட்சியளிக்கும் இந்தப் பாலம், கடற்கோள் அப்பகுதியைத் தாக்கியதால் தோன்றியிருக்கலாம். இவையெல்லாம் நீரின் சக்திக்கு எடுத்துக்காட்டாகும். நீரின் சக்தியானது, இயற்கையின் அமைப்பை மாற்றி விட்டதுடன் புதிய வரலாற்றினையும் தோற்றுவித்தது.

(தொடரும்)

■ ■ ■

# கோடைகால சிக்கனம்

**- மாணவன் -**

வீடு வாசகர்களே வீடு வாங்கலாம் விற்கலாம் ஆனால் அதனைப் பராமரிப்பது என்பது பிரதான விடயம். அதிலும் பராமரிப்புச் செலவுகளைக் குறைப்பது என்பது மிகப் பிரதானமான விடயம். குளிர்காலம் முடிந்து நீங்கள் வசந்தகாலத்தைத் தரிசித்துக் கொண்டிருப்பீர்கள். பூந்தோட்டம், மரக்கறித் தோட்டம், புல் வளர்த்தல் என மனதிற் பல திட்டங்களைப் போட்டு ஆரம்பித்திருப்பீர்கள். அத்தோடு குளிரூட்டிகளையும் தயார் படுத்தத் தொடங்கியிருப்பீர்கள். இந்த வேளையில் கோடை காலத்தில் உங்கள் மின்சாரக் கட்டணங்களையும், எரிவாயுக் கட்டணங்களையும் குறைத்துக் கொள்ளச் சில சிக்கனமான முறைகளைக் கையாளலாம்.

நீங்கள் குளிரூட்டிகளை (Air Conditioner) அதிகம் பாவிப்பவர்களானால் வீட்டில் மின் விசிறிகளையும் சிறிது நேரத்துக்குப் பாவியுங்கள். உங்கள் யன்னற் கதவுகளையும் சிறிது நேரம் (குளிரூட்டிகளைப் பாவிக்காத நேரத்தில்) திறந்து வையுங்கள். உள்ளே புதிய காற்று வருவதனால் நீங்கள் உற்சாகமடைவீர்கள். மேலும் நீங்கள் பாவிக்கும் சில மின்சாதனங்களின் உபயோக நேரத்திலும் மாற்றம் செய்வதனால் மின்கட்டணங்களைக் குறைத்துக் கொள்ளலாம். அதாவது காலை 9 மணியிலிருந்து இரவு 6 மணிவரை பலரும் அதிகளவு மின்சார பாவனையைச் செய்துகொள்ளும் நேரமாகையால் இந்நேர இடைவெளியில் மின்கட்டணம் அதிகமாகவிருக்கலாம். இதைக் கருத்தில் வைத்து மின்கட்டணம் அதிகமாக நேரங்களில் குளிரூட்டி போன்ற அதிக மின்சாரத்தை உறிஞ்சும் சாதனங்களைப் பாவிக்காதிருக்க முயற்சிக்க வேண்டும். அத்தோடு உங்கள் குளிரூட்டிகளைப் பாவிக்கும்போது வெப்பக் கட்டுப்பாட்டுக் கருவியை (Thermostat) 27 பாகை செல்சியஸ் (78 பாகை பரன்ஹைட்) இல் வைப்பது நன்று. இந்த வெப்ப அளவு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது.

உடைகளைக் கழுவும் சலவை இயந்திரங்களையோ, சமையல் பாத்திரங்களைக் கழுவும் இயந்திரங்களையோ அல்லது குளியலறைப் பாவனைகளையோ காலை அல்லது மாலை வேளைகளில் உபயோகிப்பது நல்லது. இப் பாவனைகளின் போது உற்பத்தியாகும் நீராவியை குளிரூட்டி சாதனங்கள் அகற்றிவிடும். இதனால் வீட்டினுள் ஈரப்பதன் (midity) குறைவாக விருப்பது மட்டுமல்லாது இதமான குளிரையும் ஏககாலத்தில் அனுபவிக்க முடியும்.



உங்கள் குளிர்சாதனப் பெட்டியின் உறைநிலையினை 3 பாகை செல்சியஸ் (37 பாகை பரன்ஹைட்) இல் வைத்திருப்பது நல்லது. அத்தோடு குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே அதிக பொருட்கள் இல்லாமல் வெறுமையாகவிருந்தால் இவை அதிக மின்சாரத்தை எடுத்துக்கொள்ளும். ஆகவே அவற்றை எப்போதும் நிரப்பி வைத்திருக்க வேண்டும் அல்லது அதன் வெப்பநிலைக் கட்டுப்பாட்டை (உறைநிலை) குறைத்து வைத்துக் கொள்ள வேண்டும். சிறிய வெப்பமானியொன்றை (Thermometer) குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்திருப்பது நல்லது.

கோடை காலத்திலே உங்கள் துணிகளையும் ஆடைகளையும் உலர்த்துவதற்கு வெளியேயுள்ள காற்றினையும் சூரிய வெப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அத்தோடு நீங்கள் உங்கள் வீட்டிலுள்ள மேசை விளக்குகள், கணனி, வானொலி போன்ற சாதனங்களை அவை பாவனையிலில்லாத நேரத்தில் இணைப்பிலிருந்து துண்டித்து வைத்திருங்கள். வெந்நீர் கொதிகலத்தின்(Water Heater)வெப்பத்தை 48பாகை செல்சியஸ் (120 பாகை பரன்ஹைட்) ஆகக் குறைத்து வைத்திருங்கள். விடுமுறைகளுக்காகத் தூரவிடங்களுக்குச் செல்லும் போது வெந்நீர்க் கொதிகலனின் வெப்பக் கட்டுப்பாட்டை குறைத்து வைத்துவிட்டு அல்லது நிறுத்தி விட்டுச் செல்லுங்கள். காலையிலும் மாலையிலும் வீட்டினுள் சற்றுக் குளிர்மையாக இருக்கும் போது சமையலைச் செய்யுங்கள். சமையலால் ஏற்படும் வெப்பம் வீட்டையும் வெப்பமாக்கும் அதேவேளை சமையலறையிலும் அதிகவெப்பம் உங்களை வாட்டிஎடுக்காது.

வீட்டினுள் அதிக நேரம் பாவனையிலிருக்கும் மின்குமிழ்களை பாதரச மின்குமிழ்களுக்கு மாற்றிக் கொள்ளுங்கள். இவை சாதாரண டங்ஸ்டன் குமிழ்களைவிட மிக சொற்பமான மின்சாரத்தையே பாவிக்கின்றன. அதேபோல வீட்டிற்கு வெளியே பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்களுக்கு நடமாட்ட முகர்வுக் கருவிகளை (Motion Sensor) பொருத்திக் கொள்ளுங்கள். குளிரூட்டிகளை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பராமரிப்பு நிறுவனங்களைக் கொண்டு பரிசோதித்துக் கொண்டால் (Tune-up)சீரான உபயோகம் இருக்குமென்பதோடு மின்பாவனையையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள உதவும்.

மத்திய குளிரூட்டி (Central Air) வீட்டின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் அச்சாதனத்தைச் சுற்றி மூன்று அடிகளுக்கு பொருட்கள் எதையும் வைத்துக்கொள்ளாது பார்க்க வேண்டும். இச்சாதனத்திற்கு வெப்பத்தைத் தணிக்க அதிக காற்றோட்டம் அவசியம். அல்லாவிடில் காற்றோட்டம் தடுக்கப்படும்போது குளிர்சாதனம் விரைவில் சூடேறி இயக்கமற்றுப் போகவும் நேரிடலாம். இச்சாதனத்தைச் சுற்றி நிழல் தரும் மரங்களை (மூன்றடி தள்ளி) நாட்டினால் நேரடியான சூரிய வெப்பத்திலிருந்து தவிர்க்கப்பட்டு சாதனத்தின் வினைத்திறன் அதிகரிக்க வழியேற்படும். வீட்டினுள் சூரிய செளிச்சம் அதிகமாக உள்வரும் யன்னல்களின் பக்கமாக மரங்களை வளருங்கள். இது வீட்டை வெப்பத்திலிருந்து பாதுகாப்பதோடு வீட்டினுள்ளே தங்கிநிற்கும் தீய காபனீரொட்சைட் போன்ற வாயுக்களை அகற்றவும் ஏதுவாகும். குளிர்காலத்தில் இலைகள் உதிர்ந்துபோகும்போது வீட்டினுள் அதிகவெளிச்சம் வருவதற்கும் இவை காரணமாகும்.

■ ■ ■


## கனடா தமிழீழச் சங்கம்

பல்கலாச்சார குடியமர்வுச்சேவைகள்

Tel: 416 757 6043 Fax: 416 757 6851

கனடா தமிழீழச்சங்கம் நடத்தும் 'தமிழர் திறமை' போட்டி
பொது அறிவு, கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள்

கடந்த 28 ஆண்டுக்கு மேலாகத் தமிழ் மக்கள் உள்ளிட்ட பல்பண்பாட்டு மக்களுக்கான பலவகையான சேவைகளை ஆற்றி வரும் தமிழீழச் சங்கமானது, தமிழர் பண்பாட்டையும் சிறப்பையும் திறமைகளுக்கூடாக வெளிப்படுத்தும் முகமாக 'தமிழர் திறமை' என்ற போட்டியை நடத்தவுள்ளது.

விண்ணப்ப கட்டணம் - $ 10.00
விண்ணப்ப முடிவு நாள் July 30/2007
ஆக்கங்கள் கையளிக்கப்பட வேண்டிய இறுதி நாள் August 24/2007
பொது அறிவுப்போட்டி: August 04, 2007 and August 05, 2007

பரிசில்கள்: முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு வெற்றிப்பதக்கமும் பணச்சான்றிதழும் வழங்கப்படும்.
போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

போட்டிகளுக்கான அகவைப் பிரிவு,
போட்டி விதிமுறைகள்,
மற்றும் போட்டிகளுக்கான தலைப்புகள்

குறித்த கூடுதல் தகவல்களுக்கு

**கனடா தமிழீழச் சங்கத்தை அழையுங்கள்**

**416 757 6043**



**STS ADVERTISING**
Audio - Video - Graphics
39-501 Passmore Ave
Scarborough
416 640 5445
stsads@gmail.com

Acting/Voice Talents Wanted - Any Age.

மனவெளி கலையாற்றுக்குழு வழங்கும்

# 14th அரங்காடல்

**Markham Theatre for Performing Arts**
171 Town Centre Blvd. (Warden & HWY 7)
Markham, ON L3R 8G5

**July - 8 - 2007**
**Sun 1PM & 6PM**

416-417-6933
416-514-1271
416-819-7923



ஹரல்ட் பின்றரின்

## இப்பொழுதும் எப்பொழுதும்

நெறியாள்கை: துஷி ஞானப்பிரகாசம்

ஆனந்தி சசிதரனின்

## நிறங்களின் நிஜங்கள்

சிவமணியின்

## இரண்டுக்கும் நடுவே

நெறியாள்கை: இளையபாரதி

பென்னேஸ்வரனின்

## அரி ஓம் நம

நெறியாள்கை: புராந்தகன்

கவிஞர் சிவசேகரத்தின்

## சாகாத சரித்திரங்கள்

(கவிதா நிகழ்வு)
நெறியாள்கை: கவிஞர் வி. கந்தவனம்



**TICKETS AVAILABLE AT**

**GNANAM'S STUDIO 416-750-8118**
**MARKHAM VIDEO 905-294-4253**
**ELANTHULIR VIDEO INC. 416-495-9155**
**VIMIKA 416-746-1223**

Childcare facility is available at the show.

# கூத்துக்கலைத் திரவியம்

எமது சமூகத்தின் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் என்பவற்றைக் கட்டிக்காத்த பெருமை கிராம மக்களுக்கு உரியது. இவ்வாறு இவற்றைப் பாதுகாத்து வளர்த்து அவை அழிந்து போகாது நிலைத்து நிற்க, அவர்கள் சமயச்சடங்குகளையும், அதனடியாய்த் தோன்றிய நாட்டுக்கூத்துக்களையும் தமது கருவிகளாகப் பயன்படுத்தினர். இவர்களில் கூத்துக்கலைஞர்கள் தமது நுண்ணறிவுகளையும், கலைஞானத்தையும், கூத்துகள் செழித்தோங்க, பசளையாகப் பாவித்துள்ளனர். இவர்களில் ஒருவரே கூத்துக்கலைத் திரவியம் எனப்படும் திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள்.

கூத்து எனப்படுவது நாட்டார் வழக்கியலில் இருந்து உருவானதொன்று. நாட்டார் வழக்கியல் மனிதன் தோன்றிய காலந் தொட்டே ஆரம்பமாகியது. இது பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாக பரவிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. அச் சந்ததியினரின் உணர்வுகளையும், அச்சமுதாயத்தின் உள்ளப்பாங்குகளையும் வெளிப்படுத்தும் ஒரு ஊடமாக இருந்துவந்துள்ளது.

வேட்டையாடிய ஆதிமனிதன் தன் அனுபவத்தைச் சொல்ல ஓவியங்களையும், உடல் மொழியையும் உபயோகித்தான். அந்த உடல் மொழியே நாடகங்களின் தொடக்கமாக இருக்கலாம். இந்த உடல்மொழி மிருகங்களின் அசைவுகளையும் அதற்கேற்ப மனிதனின் பிரதிபலிப்பையும், வேட்டையாடும் முறையையும், வேட்டையாடும்போது மிருகங்களின் துடிப்பு, வேதனைகளைக் கொண்டதாயும் அமைந்திருந்தது.

நைஜீரியாவின்வடமாநிலமான சொக்கட்டோவில் 'கம்பறையா' என்ற இனத்தவரிடையே மிருகங்களின் அசைவுகளைக் குறிக்கும் நடனமுறை இன்றும் உள்ளது. மான் துள்ளிக் குதித்தோடுவது, முயல் பதுங்கிச் செல்வது, பாம்பு ஊர்ந்து செல்வதுபோன்ற நடனமுறைகள் அவர்களது சடங்குகள், திருவிழாக்கள் போன்றவற்றில் ஆடப்படுகின்றன.

அதுபோலவே, முதலையை வணங்கும் ஒரு இனத்தவர் பூரண நிலவு நாளில் முதலை போன்று நெளிந்து ஆடி முதலை வணக்கம் செய்யும் முறையும் உள்ளது. இதை ஒன்றைப்போலச் செய்தல் (Imitation) என்பர்.

சிலர் நாடகங்கள் சடங்குகளிலிருந்து தோன்றியது என்பர். குறிப்பாக வைரவர் கோயிற் சடங்கு, கண்ணகி அம்மன் சடங்கு என்பன ஆண்டுதோறும் நடந்துவரும் சமயச் சடங்குகளாகும். இச்சடங்குகள் அம்மக்களின் வாழ்வுநிலை, சாதியமைப்பு, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் நாடகத்தன்மையுள்ள சடங்கு முறைகளாகும். சிறப்பாக சூரன்போர்த் திருவிழாவில் ஆடப்படும் ஆட்டமுறையிலிருந்து நாடகங்களுக்குரிய ஆட்டமுறைகள் தோன்றியிருக்கின்றன. இதுபோன்று பல சமயச் சடங்குகள் நாடகங்களுக்கு ஊற்றுவாயாக இருந்துள்ளன.

இவ்வாறே முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்புப் பிள்ளையார் கோயிலிலும், மண்டூர்க் கந்தசாமி கோயிலில் நடைபெறும் வேட்டைத் திருவிழா என்பனவும் இதற்குச் சான்று. இதுபோலவே நியூமெக்சிக்கோ, பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் கிறிஸ்துவின் பாடுகளைக் குறிக்கும் நிகழ்வாகச் சிலுவைசுமந்து செல்லுதல், முள்ளாலான முடிசூட்டுதல், சவுக்கால் அடித்தல் போன்ற சடங்குகளும் கிரேக்கத்தில் காணப்படும் திருமணமுறைகள் செயூஸ், ஹெரா ஆகிய தெய்வங்களுடன் தொடர்புடைய சடங்குகளாக உள்ளமையும் நல்ல சான்றாகும்.

இப்படியான சமயச் சடங்குகள், ஒன்றைப் பார்த்துச் செய்தல் (போலச் செய்தல்) ஆகியவையிடமிருந்து உதித்த நாட்டார் வழக்குகள் கூத்துகளாக விரிந்து பின்னர் பலவகையான கூத்துகளாயின. இக்கூத்து முறைகள் யாவும் ஆடப்படும் இனக்குழுக்களின், பண்பாடு, கலாச்சாரம், தொழில் முறை, சாதியமைப்பு, சமூகத் தரக் கட்டமைப்பு என்பவற்றிற்கேற்ப மாறுபட்டவையாக இருக்கக் காணலாம்.

அவ்வாறு மாறுபட்டு எம் சமூகத்தரிடையே நிகழும் கூத்துமுறைகளை

1. வடமோடி
2. தென்மோடி
3. மன்னார்க் கூத்து
4. மகுடிக் கூத்து
5. பறைமேளக் கூத்து
6. வசந்தன் கூத்து
7. விலாசம்

என்பவை முக்கியமானவைகளாகும்.

### வடமோடிக் கூத்து

இது மிக விறுவிறுப்பானது பெரும்பாலும், இதிகாசக் கதைகளைக் கொண்டதாய் இருக்கும். பாத்திரங்களின் குணாதிசயங்களுக்கேற்ப தாளக்கட்டுகள் அமையும். தாளம் சில இடங்களில் ஒரு அடி முன் வைத்தும், சில இடங்களில் காலுக்குள் வைத்தும், இன்னும் சில இடங்களில் இரண்டும் கலந்தும் வைக்கப்படும். பிற்பாட்டு முழுப்பாட்டுக்கும் பாடப்படும். இதன் ஆடைகள் பெரும்பாலும் கரப்புப்போன்ற அமைப்பு உடையதாய் இருக்கும். பாதம் முழுவதும் நிலத்தில் பதிந்து இருக்கும்.

### தென்மோடி

இதுமிக நுணுக்கமானது. பெரும்பாலும் தமிழ் நாட்டுக் கதைகளே கருவாக இருக்கும் தாளக்கட்டுகள் அனேகமாக ஒரு மாதிரியாக இருக்கும். ஒரு அடி முன்வைத்துத்தாளம் தீர்கப்படும். பாட்டின் இறுதிஅடிகளே பிற்பாட்டாகப் பாடப்படும். பாதத்தின் முன்பகுதி அல்லது குதி நிலத்தில்படும்.

### மன்னார்க் கூத்து

இது துள்ளல் நிறைந்து விறுவிறுப்பாயிருக்கும். ஆட்டங்கள் போடுவதற்கு நிறைந்த பயிற்சியும் உற்சாகமும் தேவை. பாட்டின் கடைசிப்பகுதியும் சிலவேளைகளில் முழுப்பாடலும் பிற்பாட்டாகப் பாடப்படும். சிலஇடங்களில் தென்மோடியிலான கூத்துக்களும் ஆடப்படுகின்றன.



### மகுடிக்கூத்து

இக்கூத்து யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும், முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களிலும், மட்டக்களப்பில் சில இடங்களிலும் ஆடப்படுகிறது. இக்கூத்து கேளிக்கை நிறைந்து காணப்படும். இதற்கென்று நிறதிட்டமான உரையாடல்கள் இல்லை. இங்கு மந்திர தந்திர நிகழ்வுகள் நிறைந்து காணப்படும்.

### பறைமேளக்கூத்து

இங்கு பறையை இடுப்பில் கட்டிக் கொண்டு ஒலி எழுப்பியவாறு ஆட்டம் ஆடப்படும். இப்பறைமேளக் கூத்து பெரியவர்களை வரவேற்பதற்கான நிகழ்வுகளில் நடத்தப்படும். இங்கு பாடல் அடிகள் பாடியமுடிய மேளம் அடித்து ஆடுவர்.

### வசந்தன்கூத்து

வசந்தன்கூத்து மட்டக்களப்பின் சில பகுதிகளில் ஆடப்படுகிறது. இக்கூத்து தெய்வங்களையும், மனிதர்களையும் புகழ்ந்து பாடுவையாக இருக்கும். இதுபெரும்பாலும் விவசாயிகளால் அறுவடை நாட்களில் தமது மகிழ்வை வெளிப்படுத்தும் முகமாக ஆடப்படுவது.

எமது பண்பாட்டையும், உணர்வையும் காத்து வளர்ந்துவரும் கூத்துக்கலையை இன்றும் செம்மையாக மக்களிடையே எடுத்துச் செல்லும் கூத்தின் பணியையும் அதன் மேன்மையையும் கட்டிக் காப்பதில் எமது கிராமப்புறக் கலைகள் பெருமுயற்சி செய்து பெரும்பணி ஆற்றி வருகிறார்கள். அவர்களில் முக்கியமான ஒருவரே எமது கூத்துத் திரவியம் திரு.அந்தோனிப்பிள்ளை அவர்கள்.

இவர் இளவாலை போயிட்டி என்னும் கிராமத்தில் 1926ம் ஆண்டு நாட்டுக்கூத்துக் குடும்பத்தில் பிறந்தார் இவரது பெரிய தந்தையும் மாமனாரும் நாட்டுக்கூத்து அண்ணாவியார் ஆவர். இவர் தனது கல்வியை இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் முடித்துக் கொழும்புத் துறை ஆசிரியர் கல்லூரியிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி இலங்கையின் பலபாகங்களிலும் கல்வி புகட்டியுள்ளார்.

இவர் தனது ஆறாவது வயதில் யேசு பாலகனாக நடித்து கலையுலகில் பிரவேசித்துள்ளார். இதனைத் தொடர்ந்து தனது ஏழாவது வயதில் 'சந்தியோகுமையர் நாட்டுக் கூத்தில்' குட்டிச் சந்தியோகுமையராகவும் யேசுபாலகனாகவும் வேடம்பூண்டார். தனது ஒன்பதாவது வயதில் திரும்பவும் சந்தியோகுமையர் கூத்தில் கன்னியாகவும், சேனாதிபதியாகவும் நடித்துள்ளார். தான் கல்வி கற்ற கல்லூரியில், தனது 13 ஆவது வயதில் 'ராச லோதினி' அல்லது 'மதியூசேகரன்' என்ற நாட்டுக் கூத்தில் மதியூசேகரனாகப் பாத்திரமேற்றுள்ளார். தனது இருபத்திநாலாவது வயதில் ஒரு நாள் ஒத்திகையுடன் 'கற்பலங்காரி' நாட்டுக் கூத்தில் முதலாவது கற்பலங்காரியாக வேடமேற்று பலரதும் பாராட்டைப் பெற்றவர்.

தொடர்ந்து 'சங்கிலியன்' கூத்தில் சங்கிலியனாகவும், 'விஜயமனோகரன்' கூத்தில் ஆஞ்சலோ பிரபுவாகவும் வேடமேற்று சிறப்பாக ஆடியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தான்பெற்ற நாட்டுக் கூத்து அனுபவங்களை, தனது கல்விப் பணிக்காகச் சென்ற இடங்களிலெல்லாம் தமது மாணவர்கட்குப் புகட்டி பல நாட்டுக்கூத்துக் கலைஞர்களையும் உருவாக்கிய பெருமை இவருக்குரியது.

'வேங்கை நாட்டு வேந்தன்', 'வீரரைப் பெறுதல் தமிழ்ப் பெண்டிர் கடனே' போன்ற பல கூத்துக்களையும் எழுதியுள்ளார்.

இவ்வாறாக நாட்டுக் கூத்தின் சகல கூறுகளையும் ஆய்ந்தறிந்த நாட்டுக்கூத்து வித்துவான் இன்னும் கூத்துக்கலைக்குத் தொண்டு செய்தல் வேண்டும்.

■ ■ ■



## அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை (திரவியம் மாஸ்ரர்) அவர்களின் புத்தக வெளியீடு

இளைப்பாறிய பாடசாலை அதிபரும் வல்வை சிவகுரு வித்யாசாலை, வல்வை மகளிர் பாடசாலைகளின் இளைப்பாறிய ஆசிரியருமான அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை (திரவியம் மாஸ்ரர்) அவர்களின் புத்தக வெளியீடும், இசைத்தட்டு வெளியீடும் நடைபெற உள்ளது. இவர் பல நாடகங்களை எழுதியும் பல நாட்டுக் கூத்துக்களை எழுதி மேடையேற்றியவரும் ஆவார். கனடாவில் தமிழ்க் கலைத் தொழில்நுட்பக் கல்லூரியில் வேங்கை நாட்டு வேந்தன் என்ற நாட்டுக்கூத்தை எழுதி மேடையேற்றியுமுள்ளார். இவ்வெளியீட்டு விழாவில் அவரே எழுதிய வேளத்தை வீழ்த்திய வேங்கை நாட்டுக்கூத்தும் நடைபெறுகிறது.

காலம்: ஆடி 21ம் திகதி சனிக்கிழமை 6:30 மணி
St. Maria Corretti School, 21 Kenmarh Blvd, Scarbrough.

# புதிய நில உரிமை மாற்றுவரி

ரொறொன்ரோ நகருக்கு டொலர் 300 மில்லியன் புதிய வருவாயை வருடாந்தம் பெற்றுக்கொடுக்கும் இந்தப் புதுவரி போக்குவரத்து, மற்றும் வீதிகளுக்கான செலவைத் தருவதுடன் அடுத்தவருட வரவு செலவிலுள்ள பற்றாக்குறையைப் போக்கவும் உதவும்.

வர்த்தக வட்டாரங்கள் இந்த நிலஉரிமை மாற்று வரியினால் இந்த நகரம் ஆயிரக் கணக்கான வேலைகளை இழக்கவேண்டி வரும் எனக் கருதுகின்றன. நில உரிமை மாற்றுவரி ஆலோசனைகள் மற்றும் ஆண்டுக்கு டொலர் 60 மில்லியன் வருவாய் ஈட்டிக்கொடுக்கவல்ல வாகன உரிமையாளர்கள் பற்றிய விபரங்கள் நகரில் வெளியிடப்பட்டன. இந்தச் சிபார்சுகள் நகரின் அமுலாக்கற்குழுவிடம் இவ் வாரம் சென்றடையும். இவை எதிர்பார்க்கப் படுவது போல சபையில் ஏற்றுக் கொள்ளப் பட்டால் ஜனவரி 2008ல் இருந்து அல்லது இன்னும் சில நாட்களில் அமுலுக்கு வரும்.

ஒன்றாறியோ கிளையின் சுதந்திர வர்த்தக சங்க உபதலைவர் யூடித் அன்ட்றூ அவர்கள், இங்கே வசிப்பது மிகவும் செலவானது அதை ஒரு தீர்வாக எடுத்தல் பைத்தியக் காரத்தனம். ஒரு இடத்திலும் எந்த அறிவித்தலிலும், எந்த ஆதரவும் கிடைக்கவில்லை. நான் எடுத்த குறிப்பை அவர்கள் எடுக்காததுபோல தெரிகிறது.” என்று குறிப்பிட்டார். கவுன்சிலர் கேஸ் ஊற்ஸ் (வார்ட் 29- ரொ-றொன்ரோ-டன்போர்த்) ‘எப்படி நீங்கள் ஒரு நில உரிமைமாற்றுச் சட்ட வரியை இன்னொன்றுக்கு மேல் நியாயப்படுத்துவீர்கள்?” என்று கேட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் ‘மேயர் டேவிட் மில்லர், நல்வாழ்வு போன்ற சமூக நலத்திட்டங்களை நவீனப் படுத்திச் சமூக நலத்திட்டம் போல ரொறொன்ரோ சொத்துவரி அடிப்படையிலிருந்து எடுக்க வேண்டும்” என்றார்.

ஆனால் கவுன்சிலர் அடம் லோகன் (வார்ட் 20 ட்றினிட்டி- ஸ்படைனா) ‘நகரில் வீட்டுச் சந்தைவிலை மெதுவாக வளர்ந்து வருவது நல்லதாக இருக்கலாம்” என்றார். நகரின் மையத்தில் (Down Town) சொத்துக்களின் விலைகள் உயர்ந்து உண்மைக்குப் புறம்பானதாக இருக்கலாம். எனினும் அது மெதுவாக உயர்ந்தால் சிலருக்கு அது வீடு வாங்கக் கூடியதாக இருக்கலாம். டொலர் 250,000 க்கு மேல் பெறுமதியுள்ள நிலங்கள் விற்றால் நிலஉரிமை மாற்றுவரி 0.5 வீதத்திலிருந்து 1.5வீதம் வரை உயரலாம் என நகர அறிக்கை ஆலோசனை கூறுகிறது. ஒன்றாரியோ மாகாணம் ஏற்கனவே நிலஉரிமை மாற்றுவரியை வசூலிக்கிறது. இந்தப் புதுவரி வீதம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் நிலஉரிமை மாற்றுவரி ரொறொன்ரோவில் டொலர் 387,000 பெறுமதியான வீட்டுக்கு டொலர் 4,200ல் இருந்து டொலர் 6,000க்கும் மேலாக உயரும். அந்த அறிக்கை டொலர் 400,000க்குமேல் பெறுமதியான வீடுகளுக்கு மேலதிகமாக 5வீதம் வரி வசூலிக்கலாமெனக் கூறுகிறது.

அடுத்த வருடம் ரொறொன்ரோவின் வரவு செலவில் டொலர் 575 மில்லியன் பற்றாக்குறையை எதிர்பார்க்கிறது. நிதி அலுவலர் இதை ஈடுசெய்ய ரொறொன்ரோ நகரம் தனக்குக் கிடைத்த புதிய வரிவசூலிக்கும் அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்கிறார். புதிய வருவாய், போக்குவரத்து, வீதிகள், பூங்காக்கள், உல்லாசம் பொழுது போக்கு இடங்கள், கலாச்சாரம், காலநிலை மாற்றம் ஆகியவற்றில் முதலீட்டு முன்னெடுப்புகள் அடுத்த வருடம் எதிர்பார்க்கப் படுகிறது. பணப் பற்றாக்குறையை ஈடு செய்யும், மதுபானம் சில்லறையாக விற்பதற்கு வரி வசூலிப்பதென்ற ஆலோசனை மீதான அறிக்கை குளிர் காலத்தில் எதிர் பார்க்கப்படுகிறது.

ரொறொன்ரோ வர்த்தக சபை நடத்திய ஆய்வின்படி புதியவரிகள், மக்களின் செலவு செய்யும் பழக்கத்தையே மாற்றவுள்ளது. இந்தஆய்வு யூன் 8-15வரை நடந்தது. 1085 நபர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வசிக்கும் மக்களிடம் ரொறன்ரோ நகரம் எட்டுப் புதிய வரிகளைக் கருத்தில் எடுத்தது.எந்தவரி உங்கள்குடும்பத்துக்கோ, வர்த்தகத்துக்கோ பெரும் செலவை ஏற்படுத்தும் என்று கேட்கப்பட்டபோது, அவர்களின் முக்கியகுறைபாடு ‘நில உரிமை மாற்றுச் சட்டமும் வாகனப் பதிவுச் சட்டமுமே” என்றனர்.

வர்த்தக சபையின் பேச்சாளர்களில் ஒருவரான கிளென் ஸ்றோன் ‘ரொறொன்ரோவின் பொருளாதாரத்தைப் புதிய வரிகள் பலவீனப்படுத்தி விடலாம் என அங்கத்தவர்கள் பயப்படுகின்றார்கள்” என்று கூறினார்.

■ ■ ■


**Location ! Location! Location**
**BRAND NEW HOUSE FOR SALE**



McCowan & Dennison சந்திப்பிற்கருகில் சகல வசதிகளும் (TTC, School, Go Train, Community Center, Mall, Grocery shops போன்றன) அருகாமையில் உள்ள குடிபுகாத புதிதாக கட்டப்படுகின்ற 5 அறைகளையும் 4 குளியளறைகளையும் கொண்ட அழகான புதிய வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

விலை $474,900.00

தொடர்புகளுக்கு: HARAN (416) 522-3314



## ஆறாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா

ஒக்ரோபர் 6, 2007


- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 25 ம் நாள் (SEPTEMBER 15,2007)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

M.Ragunathan
Independent Art Film Society of Toronto
4 Castlemore Avenue,
Markham, Ontario
Canada L6C 2B3

INDEPENDENT ART FILM SOCIETY

மேலதிக தொடர்புகளுக்கு
**416-857-6406, 416-450-6833**
rathan@rogers.com, www.iafstamil.com






கனடிய தமிழ் வானொலி
வழங்கும்
நட்சத்திரத் திருவிழா
2007
ஜூலை 07
ஜூலை 08
Markham Fair Grounds
10801 McCowan Rd, Markham ON.
தொலைபேசி
416.264.8798
www.ctr24.com
CTR
நட்சத்திரத் திருவிழா 2007
இசை நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டிய நாடகம், நகைச்சுவை, வானம்பாடிகள், கிளித்தட்டு, கயிறுழுத்தல், பொய்க்கால் குதிரை, தலையணைச் சண்டை,
வழுக்கு மரம் ஏறுதல், அக்னி, மெல்லிசைப் போட்டிகள், தமிழியல் போட்டிகள், ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டிகள், இயந்திர மனிதக் காட்சிகள்
Platinum Sponsors
tvi Tamil Vision Int.
cmr Diversity FM 101.3
Tel: 416.593.9300
Cash Point Mortgages
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E., Unit 202, Scar, ON
FRONTLINE AUTO COLLISION CENTRE
Mechanical, Alignment, Muffler, Diagnostic Test, Auto Glass
24 Hr Towing
416.916.7501
416.833.5310
740 Warden Ave., Scarborough, ON
ASIYANS TEX & GIFTWARE INC.
3601 LAWRENCE AVE. EAST, #23, Scarborough
416.438.6568
The one stop shopping centre for the entire family
BRITHI LTD
Kitchen & Bath
55 Nugget Ave., Scarborough, ON
416.412.4447
For All your printing needs
www.viveka.com
VIVEKA Printers
80 Barbados Blvd., ON
Tel: 416.410.6401
www.viveka.com
Indran Sweets
Tel: 416.321.7552
Cell: 416.725.2543
80 Nashdene Rd,
Unit # C56, C57 & C58
Scarborough, ON
t junction
416.548.7887, 416.548.7888
YOUTH RUBEES BANQUET HALL
Party Service and Banquet Hall
Ruban Theivendram
416.588.8300
Program Sponsors
Your peace of mind is my goal...
Shan Thayaparan
Sales Representative
Dir: 416.567.7675
HomeLife GTA Realty Inc. Brokersage
White Pine Motel on the lake
you relax in a right place
1-866-796-7333, 705-375-5357
1449 HWY 69 South, RR#2, Parry Sound, ON
THE LAW OFFICE OF
MELENI V.DAVID B.A., LL.B
உங்களுக்கான ஒரு தமிழ் வழக்கறிஞர்
416.430.0044, 905.290.9249
வீடு வாங்க விற்க | Life Insurance | RESP
Pakeerathan Sahadevan
Century 21
416.908.6003
நாம் யார்க்கும் குடியல்லோம்
Tam Sivathasan
Broker
VEEDU REALTY INC.
416.804.3443
AJP DOOR & WINDOW INC.
2220 Midland Ave., Unit 60 BR, Scarborough
416.297.7522, Cell: 416.918.5360
Thayan Singarajah
Mortgage Specialist
647-207-5465
Northwood Mortgage
Rates from 3.40%
வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க All kind of Mortgages
THAVA ELIYATHAMBY
Associate Broker, MBA
Century 21
416.992.7989, 416.290.1200
RAMAN APPLIANCES INC.
Home Product Consultant
647.893.4414
Showroom
3021 Markham rd, Suite 51, Scarborough
A1 MASTER COUNTER TOPS INC.
OVER 15 YEAR EXPERIENCE
MANNY - 416.757.2875, 416.726.1850
63 Howden Rd, Unit #F, Scarborough
digi media


UNITED TAMILS ASSOCIATION PRESENTS
ADVANCE TICKETS $3.00
DOOR PRICE $5.00
MARKHAM FAIR GROUNDS
10801 McCowan Road
அன்னக்கிளி நீ வாடி,
காதல் வந்தும் சொல்லாமல் புகழ்
பிரசன்னா
கானா காணும் காலங்கள்
முதல் முதலாய் புகழ்
மதுமிதா
ஓ மரியா ஓ மரியா
கைய வைச்சுக்கிட்டு புகழ்
தேவன்
மே மாசம் 98இல்
டோலு டோலு தான் புகழ்
சுசித்ரா
இசைப்பயணம்,
காக்க காக்க புகழ்
சாருலதாமணி
பாட்டுக்கு பாட்டு புகழ்
அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத்
YOGI-B & NATCHATHIRA
FROM MALAYSIA
TAMIL CARNIVAL
2007
"அசத்தப் போவது யாரு" புகழ்
காமடி மன்னர்கள்
உங்கள் வர்த்தகச் சாவடிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
Venders, Food Venders and
Ice Cream Truck & Hot Dog Vehicle Info
416.564.9642
தமிழ்மக்களுக்கான ஒரு
குதூகலத் திருவிழா
தமிழ்
காணிவல்
www.tamilsevent.com
AUG 11 SAT
AUG 12 SUN
digi


COMMERCIAL
• INVESTMENT • LANDS
• DESIGN-BUILD • LEASING
• HOTELS • MOTELS
• PLAZAS • INDUSTRIAL
• OFFICE • PROPERTY VALUATION
ROYAL LEPAGE
UTHAYAN NADARAJAH
Broker
Cell: .416.727.9945
Royal LePage Credit Valley Real Estate Inc.
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000
digi Media Creations


Protectron
Free Alarm System Stating from $19.95
Residential & Commercial Alarm Systems
Special Offer
• Free Installation
• 2 Digital Key Pad
• 3 Motion
• All Windows & Doors
• Garage Opener
• Tel & Cable
• Burglar alarm
• fire alarm
• police emergency
• Medical alert
Security Camera
New Home Buyer!
• Dish Washer • Ice Maker
• Waser & Dryer • Phone Jack
Insulation and Labour FREE
(some conditions may apply)
Garage Door Opener
Range Hood
• General Contractors • Sales • Service • Installation
Please Call for a FREE in-home product consultation
647-893-4414


SERANDIBTRAVEL1
AROUND THE WORLD WITH SERANDIB
WITH US YOUR ARE A GUEST NOT A PASSENGER
We don't just sell air line tickets.
we make your trip a comfortable and memorable one.
That is why you should try us First.
Serandib Travel1
For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691
Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com
USA
New York: 716-408-0342
Washington DC: 202-517-0139
Los Angeles: 213-254-0119
New Jersey: 732-783-1513
Detroit: 313-263-0610
Chicago: 312-625-1420
Miami: 305-625-4102
Honolulu: 808-457-1730


M and M CONSULTANTS
Serving 22years in Canada
www.mandmconsultants.net
Financial Planning
Advice on Bankruptcy
Arrangement with Creditors
Credit Management & Counselling
Corporate & Personal Tax Consultations
Settlement without Bankruptcy / Consumer Proposals
Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance
2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876
3645 Bathurst Street #212
(Bathurst & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550
BMK

# கோடை விடுமுறை



திரு மகேசன்

## மனதைக் கிறங்கடிக்கும் மலேசியா!

கொஞ்சமாவது மனதுக்குத் தெம்பு கொடுக்கும் எமது மண்வாசனையை நுகரலாம் என்றால் -இது என்ன ஒரே மேற்கத்தைய நாடுகளைப் பற்றித்தான் விளாசித் தள்ளுகிறார்களே என்று மண்டை முடியை (முடி இருப்பவர்கள்) பிய்த்துக்கொள்வது எமக்குத் தெரியாமல் இல்லை.

ஈழத்திலும் சுற்றிப் பார்க்கவில்லை. அருகே இருந்த இந்தியாவையும் சுற்றிப் பார்க்கவில்லை. மாற்றுக் கலாச்சாரத்தைப் படித்து என்ன காணப்போகின்றோம் என்று சலித்துக்கொள்கிறீர்கள்.

சரி, எப்போது ஈழப் பக்கமோ... ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! இந்தியா போக விசாவுக்கு கடவுச் சீட்டை அனுப்பிவிட்டு, விசா கிடைக்குமோ கிடைக்காதோ எனப்



பூக்கட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதை விட்டு, மாற்று மருந்து ஏதாவது தேடலாம் என்றபோதுதான் மனதில் வந்து உதித்தது இருக்கவே இருக்கிறது மலேசியா என்று! இன்றைக்கும் ஊரில் இவ்வளவு போராட்டத்திற்கு மத்தியிலும் நான் 'மலேசியப் பென்சன்காரன்' என்ற மல்லாக்காகப் படுத்துக்கொண்டு விலாசக் கதைகள் பலர் கதைப்பதைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். "அண்டைக்கு 1940 இல் மலேசியாவில.. என்று தொடங்கியவுடன் படலையைப் பிய்த்துக்கொண்டு பிடரி அடிபட 'பழசு கிளம்பிவிட்டுதடா கதை சொல்ல' என்று ஓட்டம் பிடித்த காலம் ஒன்றிருந்தது. மரண அறிவித்தல்களில் கூட அடைப்புக் குறிக்குள் இன்று 'மலேசியன் பென்சனர்' என்ற விலாசம் போடுவது இன்னமும் வழக்கிலுள்ளது. அப்படி ஊரையே உலுக்கி அடுக்கு மாடிவீடுகளில் வாழ்ந்த நம்மவர்கள் மலேசியாவில் என்ன கொட்டிக் கிழித்தார்கள் என்று நாமும் பார்த்தால் நல்லது தானே! எப்படி நம்மவரை ஒருகாலத்தில் பட்டுக்கம்பளம் விரித்து வரவேற்ற மலேசியா இன்று எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா?

நிச்சயமாகப் பார்க்க வேண்டும். அந்த வகையில் மலேசியா உல்லாசப் பயணத்துறையின் அழைப்பின் பேரில் கனடாவிலிருந்து அழைக்கப்பட்ட 16பேரில் ஒரேயொரு தமிழர் என்ற பெருமையுடன் மலேசிய மண்ணைத் தரிசித்தவன் என்ற முறையில் மலேசிய பயணக் கட்டுரையை எழுதும் தகுதியைப் பெற்றவன்.

கனடாவின் ரொறன்ரோ சர்வதேச விமான நிலையத்தில் இருந்த எயார் கனடா மூலம் ஐரோப்பிய நாடொன்றிற்குச் சென்று, அங்கிருந்து மலேசியன் எயார் லைன் உதவியுடன் மலேசியா செல்வதே உகந்த பயணமாக இருக்கும்.

தாய்லாந்தையும். சிங்கப்பூரையும் தனது பக்கத்து நாட்டு எல்லைகளாகக் கொண்டதே மலேசியா. எனவே, மலேசியா செல்பவர்கள் சிங்கப்பூருக்கும், தாய்லாந்துக்கும் பயணம் செய்யத் தவறுவதில்லை. மலே, சீனர், இந்தியர் ஆகிய மூன்று இனத்தவர்களைக் கொண்டு அழகு நடைபோடும் நாடே மலேசியா. இந்த மூன்று இனத்தவர்களும் தமக்குள் முட்டி மோதி மூக்கை உடைத்துக்கொள்ளாமல் வாழுவதால்தான் மலேசியா எந்த கலவரமும் இன்றி, சகல கலாச்சாரத்துக்கும் மதிப்பளிக்கும் ஒரு நாடாக விளங்குகிறது. மேற்குலக கலாச்சார வாடை இங்கே எட்டிப் பார்த்திருந்தாலும் நாம் கட்டிப்பிடித்துக்கொண்டு கொண்டாடுவது போல மலேசிய நாட்டவர்கள் மேற்குலக கலாச்சார சீரழிவில் இலகுவில் சிக்கிவிடவில்லை.

மலேசியாவின் தலைநகரமாக கோலாலம்பூர் இருக்கிறது. நவம்பரிலிருந்து ஜனவரிக்கு இடைப்பட்ட காலத்தில் காலநிலை சீராக இருக்காது. ஆதலால் இந்த நேரத்தில் மலேசியப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. ஏனென்றால், காலநிலை சீராக இல்லாவிட்டால் கிழக்குக் கடற்கரையின் அழகை நீங்கள் ரசிக்க முடியாது.

கோலாலம்பூரில் நம்மை வரவேற்பது உலகின் உயர்ந்த கட்டடம் என்றழைக்கப்படும் மலேசியன் Tower. China Town ம் Little India வும் இங்கே அமைந்திருப்பது இங்கே கூடும் Night market இற்கு இன்னமும் அழகைக் கூட்டுகிறது.



மலேசியா தனிநாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பெப்பிரவரி 1ம் திகதியை, கோலாலம்பூரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இக் கொண்டாட்டமானது, Tasik Perdan உம் Titiwangsa Lakeஉம் அமைந்திருக்கும் நகரின் வடக்குப் பிரதேசத்தில் மிகப் பிரமாண்டமாகக் கொண்டாடப்



படுகிறது. அதேபோல், யூலை மாதத்தில் கோலாலம்பூரில் மலர்களின் கொண்டாட்டம் நடைபெறுகிறது. Floral Parade எனப்படும் பலவகை வண்ணமலர் களின் பவனியைக் காண லட்சக்கணக்கில் கூடுவதோடு இப்படிப்பட்ட மலர்களின் கண்காட்சியும் பவனியும் வேறு எந்த நாட்டிலும் நடைபெறுவதில்லை. ஆதலால். சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளிலிருந்தும் மக்கள் இப்பவனியைக்காண குவிகின்றார்கள். 30ம்திகதி ஆகஸ்ட் மாதம் நள்ளிரவில் Merdeka Square (இது Times squareஇல் புது வருடத்திற்கு கூடுவது போல்) இல் 1957இல் சுதந்திர நாடாக மலேசியா அறிவிக்கப்பட்டதை பெரும் கொண்டாட்டமாக வாண வேடிக்கைகள், வண்ண வண்ண பவனிகளுடன் கொண்டாடுகின்றனர். செப்ரெம்பர் மாதம் முழுவதும் மலேசியா Fest எனப்படும் Colours of Malasiaவினை வெகு சிறப்பாகக்கொண்டாடுகிறார்கள். அனைத்து கலாச்சார பின்னணியைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கெடுத்துத் தமது ஒற்றுமையை வெளிப்படுத்துவதோடு, பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் பார்த்து மகிழ ஒரு அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள்.

முன்னர் பிரித்தானியருக்குச் சொந்தமாக இருந்த ˙92 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட Merdeka Square இல் அமைந்திருக்கும அழகிய மலர்த் தோட்டத்தை நாம் பார்க்காமல் விட்டுவிடக்கூடாது. இங்கே அமைந்திருக்கும் Butterfly park உம், Orchid Garden உம் உலகில் வேறெங்கும் பார்க்க முடியாத பொக்கிஷமாகும். இங்கே அமைந்திருக்கும் Tasik Pernada இல் நாம் படகுகளை வாடகைக்குப் பெற்று ஓட்டி மகிழலாம். இதேபோல், உலகின் மிக உயர்ந்த கோபுரமான Menara Tower இல் மிகக் கடுமையான சோதனைகளுக்கு மத்தியில் உயர்ந்து சென்று, மலேசிய நாட்டின் அழகைப் பார்ப்பதுடன் மலேசியாவின் அயல்நாடுகளான சிங்கப்பூர், தாய்லாந்து போன்றவற்றின் அழகையும் நாம் கண்டு களிக்கலாம்.

இப்படி செயற்கை, இயற்கை அழகைக் கண்டு களிக்க, எமக்கு ஆன்மிக அழகை அள்ளிக் கொள்ள அமைந்திருக்கிறது ஸ்ரீ மகமாரியம்மாள் ஆலயம். இந்துக் கலாச்சாரம் எவ்வளவு செழிப்பாக வளர்ந்து பேணிக்காக்கப்படுகிறது என்பதற்கு இந்த ஆலயம் ஒரு முக்கிய ஆதாரமாகும். பல்கலாச்சாரத்தைச் சேர்ந்த மக்களும் இவ்வாலயத்தில் விசேடமாகக் கொண்டாடப்படும் தைப்பூச விழாவிலே அலகு குத்தி, காவடி எடுத்து முருகனை வழிபடுவது என்பது எவ்வளவு சிறப்பு என்பதை எண்ணிப் பாருங்கள்! வெள்ளித் தேரானது தைப்பூசத்தன்று வெளியே பவனிவருவது, நாம் எமது ஈழத்தே நிற்பதுபோன்ற உணர்வை அள்ளித் தெளிக்கும்.


நமது உள்ளத்திற்கு கதகதப்பூட்ட நாம் நிச்சயம் Penang நகரைப் பார்க்காமல் வரக்கூடாது. காரணம், பிரித்தானியர் காலத்தில் நம் மூதாதையர் பலர் இங்குதான் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் இங்கேதான் அதிகம் உள்ளன.

தீபகற்பத்தின் முத்து என்று அழைக்கப்படுகிறது Penang. பழமையும் புதுமையும் கலந்த கட்டிடங்கள் இன்னமும் நிறம் மாறாமல் நிமிர்ந்து நிற்கின்றன. Khoo Kongsi Temple ஆனது மிகவும் வண்ண மயமாகக் காட்சியளிக்கிறது. இங்கே குரங்குகள் கை நீட்டி உணவுகளைப் பெற்றுக்கொள்கின்றன. எவரிடம் இருந்தும் இந்தக் குரங்குகள் எதனையும் தட்டிப் பறிப்பதில்லை. நம் ஊர்க் குரங்குகளைவிட இவை விசேடமான குணத்தோடு இருப்பதால் நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன. இங்கே இருக்கும் Penang Bridge ஆனது ஆசியாவின் முதலாவது மிகப் பெரிய பாலமாகவும் விளங்குகிறது. 1805ம் ஆண்டில் சீன புத்த துறவியான Chor Soo Kong ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட Snake temple இனுள் இன்னமும் விஷமுள்ள பாம்புகள் வாழ்வதாக ஒரு ஐதிகம் உண்டு. இங்கே காணப்படும் புத்த துறவிகள் உருட்டல், மிரட்டல், புரட்டுக்களில் ஈடுபடுவதில்லை. முழுநேரமும் தியானத்திலேயே செலவிடுகிறார்கள். ஓ! அதனால் தான் இந்த மலேசியா அமைதியாக இருக்கிறதோ!

328,550 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் 24.53 மில்லியன் சனத்தொகையையும், இஸ்லாம், கிறிஸ்தவம், இந்துசமயம், புத்த சமயம், சீக்கியம் ஆகிய சமயத் தொடர்புகளையும் ஒன்றுகூட்டி கைகோர்த்து நிற்பதால்தான் மலேசியா இன்றைக்கும் நம் கண்ணில் நிற்கிறது.

மொத்தத்தில் சரி, நமது நாட்டுக்குத்தான் போக முடியவில்லையே! போய் வருவோம் - பெட்டியைக் கட்டுங்கள் - மலேசியாவைத் தொடுவோம். நம் மனதைக் குளிர வைப்போம்!

■ ■ ■


RAHALAYAM Music Academy
இராகலயம்
SINCE 1989
இராகலயம் இசைக் கல்லூரியின்
திரை இசை நிகழ்ச்சி
இன்னிசை வார்ப்புகள் 2007
ரொரோண்டோ இசை மேடைகளில் 2ஆவது முறையாக மேல் நாட்டு இசை வாத்தியங்களுடன் கர்நாடக இசை வாத்தியங்களும் (கீபோர்ட், வீணை, வயலின், மிருதங்கம், தப்லா, கிட்டார், பேஸ், டிரம்ஸ்) இணைந்து வழங்கும் ஓர் புதுமையான திரை இசை நிகழ்ச்சி
சங்கீதவித்துவான்/இசைத்திலகம்/பல்கலை வேந்தன்/
முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசை நிகழ்ச்சித் தயாரிப்பாளரும்,
இசையமைப்பாளருமான
K.S. இரவீந்திரனின்
இசை மேற்பார்வையில் கல்லூரி மாணவ, மாணவிகளுடன் பல்லினக் கலைஞர்களும் பங்கேற்கும் பழைய/இடைக்கால/புதிய திரை இசைப்பாடல் தெரிவுகளுடன், சிறியோர் முதல் பெரியோர் வரை பங்கு கொள்ளும் மாபெரும் சிறப்பு இன்னிசை நிகழ்ச்சி
◆ திரை இசைப்பாடல்கள்
◆ வாத்திய விருந்து
◆ கர்நாடக இசைப்பாடல்கள்
◆ தாளவாத்தியக் கச்சேரி
◆ மெல்லிசைப் பாடல்கள்
◆ சிறப்பு நடனம்
இன்னும் பல சுவையான அம்சங்களுடன் காணத் தவறாதீர்கள்!!!
கலைமாமணி
K.S. இராஜ்குமார்
(ஜெர்மனிய இசைக்கலைஞர்)
சிறப்பு நிகழ்ச்சியாக
தாளவாத்தியக்கச்சேரி இடம்பெறும்
காலம்: Sunday, July 22, 2007
நேரம்: மாலை 5 மணி
இடம்: Sts. Peter & Paul Banquet Hall
231 Milner Avenue, Scarborough ON
தொடர்புகளுக்கு: 416-335-7157, 416-788-3785
இன்னிசை வார்ப்புகள் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM in CANADA
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
THE CHAIRMAN'S CLUB
NATIONAL
Award Winner 2003 to 2006
Top 1% in Canada
வீடு வாங்கவும், விற்கவும்
Tel: 416-284-5555
880 Ellesmere Road. Suite 203(Kennedy & Ellesmere), Scarborough, ON.
Karu Kandiah FRI, CRES
Broker
19 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்...

# கடன் அட்டை ஏமாற்று...

5ம் பக்கத் தொடர்ச்சி...

வற்றிற்கான கொடுப்பனவுகள் உங்களுடையதா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

- யாராவது உங்களுக்கு கடன் அட்டை வழங்கியவர் எனக்கூறி உங்கள் கணக்கு இலக்கத்தை தொலைபேசியில் கேட்டால் அதனை வழங்கவேண்டாம். கடன் அட்டை வழங்குவோரால் அவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தால், அவர்களுக்கு உங்கள் இலக்கம் தெரிந்திருக்கும்.

- உங்கள் கடன் அறிக்கையில் (Credit report) காணப்படும் பாதகமான தகவல்களை அகற்றுவதாகக் கூறும் நிறுவனங்களை நம்ப வேண்டாம். கடன் அறிக்கையில் காணப்படும் தவறான (inaccurate) தகவல்களை அகற்ற முடியுமே தவிர, உண்மையான, ஆனால் உங்களுக்குப் பாதகமான தகவல்களை அகற்ற முடியாது.

- உங்கள் சமூக காப்புறுதி அட்டை

(Social Insurance Card) காணாமற் போனால், உங்களை வேலைக்கு அமர்த்தியவரை, அல்லது உங்கள் உள்ளூரில் மனிதவள அபிவிருத்தி – கனடா (Human Resources Development Canada – HRDC) அலுவலகத்தை உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

சாரதி அனுமதிப் பத்திரம் தொலைந்தால், உங்கள் உள்ளூர் சாரதி மற்றும் வாகன அனுமதிப் பத்திரத்தை வழங்கிய அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். அத்துடன் உங்கள் உள்ளூர் பொலிஸ் நிலையத்திற்கும் இதனை அறிவிக்க வேண்டும்.

## உங்கள் கடன் அட்டை கூற்றுக்களை (Statement) எவ்வாறு சரிபார்க்கலாம்.

உங்கள் கடன் அட்டை கூற்று வந்ததும் இதிலுள்ள கட்டணங்கள் சரியானதா என்பதை உறுதிப்படுத்த சரிபாருங்கள். நீங்கள் மேற்கொள்ளாத கொள்வனவு பற்றி உடனடியாக விசாரியுங்கள்.

- கூற்றுக்களை பாதுகாப்பான இடத்தில் வையுங்கள். இவை முக்கியமான தகவல்களைக் கொண்டிருக்கும்.
- பழைய கூற்றுக்களை அகற்றமுன், மூடப்பட்ட வங்கிக் கணக்குகளின் கூற்றுக்களைக்கூட சிறிதாகக் கிழித்துப் போடவும்.

உங்கள் கூற்று சரியான நேரத்திற்கு வரவில்லையெனின், கடன் அட்டை வழங்குபவரை அழைக்கவும்.

## தன்னியக்க பணம் பெறும் இயந்திரம்(ATM) மற்றும் தனிப்பட்ட அடையாள இலக்கங்களை (PIN) பயன்படுத்தும் போது ஏமாற்றுக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துங்கள்.

- தன்னியக்க பணம் பெறும் இயந்திரத்தை (ATM) ஐப் பயன்படுத்தும் போது உங்கள் ரகசிய எண்களை மற்றவர் அறியா வண்ணம் பதிவு செய்யுங்கள்.
- உங்கள் ரசீதுகளை ஒரு போதும் விட்டுச் செல்ல வேண்டாம்.
- தனித்தன்மையான ஓர் தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) ஐத் தெரிவு செய்யுங்கள். உங்கள் பிறந்தநாள், தொலைபேசி எண், சமூகக் காப்புறுதி எண் (SIN), போன்ற முக்கியமான எண்களைத் தவிர வேறு எண்களைத் தெரிவு செய்யுங்கள்.
- உங்கள் காசோலைப் புத்தகத்திலோ அல்லது உங்கள் கடன் அட்டைகளிலோ உங்கள் PINஐ எழுத வேண்டாம். இந்த எண்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது சிறந்தது. நீங்கள் உங்கள் PIN ஐ பதிவு செய்யும் போது எவரும் அவதானிக் கிறார்களா என சுற்றுப் புறத்தைக் குறித்துக் கவனமாயிருங்கள்.

## தபால் சேவையைப் பயன் படுத்தும்போது ஏமாற்றுக்கள் ஏற்படுவதைக் குறையுங்கள்.

- உங்களுக்குத் தபால் வருவது நின்று போனால், கனடா தபாலுடன் தொடர்பு கொள்ளுங்கள். சில சமயம், உங்கள் தபாலை அல்லது உங்கள் அடையாளத்தைத் திருடுவதற்கு, முகவரி மாற்றம் ஓர் ஏமாற்றுவோரால் வழங்கப்பட்டிருக்கும்.
- ஓர் புதிய கடன் அட்டைக்கு விண்ணப்பித்து அது உங்களை வந்தடையா விட்டால், இதனை வழங்குபவரைத் தொடர்பு கொண்டு விசாரியுங்கள்.

## நீங்கள் கடன் அட்டை ஏமாற்றுக்கு உட்பட்டுள்ளீர்கள் என்று எவ்வாறு அறிவீர்கள்?

ஓர் கடன் அல்லது சட்டஅமுலாக்கல் நிறுவனமானது, ஏமாற்றப்பட்டோருக்கு உதவி செய்யும் திணைக்களத்திற்குச் செல்லும்படி கூறினால், நீங்கள் ஏமாற்றப்பட்டவர் என்பது உங்களுக்கு ஏற்கனவே தெரிந் திருக்கலாம். நீங்கள் இந்தபிரச்சனையை உருவாக்கவில்லை என்பதையும் ஆனால் கடன் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிந்தால், நீங்கள் கடன் ஏமாற்றிற்கு (Credit fraud crime) இலக்காகியுள்ளீர்கள் என்பதுடன் உங்கள் உரிமைகளைப் பாதுகாக்க சில படிமுறைகளையும் எடுக்க வேண்டும்.

## அடையாள ஏமாற்றிற்கு (Identity Fraud) உட்பட்டதற்கான அடையாளங்கள் வேறு படலாம். ஆனால் ஏமாற்றப்பட்டதற்கான பொதுவான அறிகுறிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

உங்களுக்கு கடன் வழங்குவோர் ஒருவர் உங்கள் பெயர் மற்றும் சமூக பாதுகாப்பு இலக்கத்துடன் கடனுக்கான விண்ணப்பம் ஒன்றை பெற்றுள்ளதாக உங்களுக்கு அறிவிக்கலாம். நீங்கள் ஒருபோதும் விண்ணப்பம் செய்யாத கடனானது, நிராகரிக்கப்பட்டதாகவோ அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ தொலைபேசிஅழைப்பை அல்லது கடிதங்களை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

- நீங்கள் ஒரு போதும் விண்ணப்பம் செய்யாத கடன்அட்டை,அத்தியாவசிய சேவைகள் (Utilities) மற்றும் தொலை பேசி போன்றவற்றின் கூற்றுக்கள் (Statements) உங்களுக்குக் கிடைக்கப் பெறலாம்.
- உங்கள் கடன் அட்டை கூற்றுக்கள் அல்லது உங்களுக்கான எல்லாக் கடிதங்களையும் நீங்கள் அதிக காலம் பெற்றுக் கொள்ளாமலிருக்கலாம்.
- உங்களால் இனங்காண முடியாத கொள்வனவுகளை உங்கள்கடன்அட்டை கூற்று உள்ளடக்கியிருக்கலாம்.
- ஓர் சேகரிக்கும் நிறுவனம் (Collection Agency) உங்கள் அடையாளத்துடனான ஓர் கணக்கிற்காக பணம் சேகரிக்கின்றனர் எனக்கூறலாம். ஆனால் அந்தக்கணக்கு நீங்கள் ஆரம்பிக்காததாக இருக்கலாம்..

## அடையாள ஏமாற்றுக்கு உட்பட்டிருக்கிறீர்கள் என நீங்கள் சந்தேகித்தால், உங்கள் கடன் வரலாற்றை மீளமைக்க (Resto -re) என்ன செய்யலாம் என்பதைக் கண்டறியுங்கள்.

நீங்கள ஏமாற்றப்பட்டுள்ளீர்கள் என்பதை உணர்ந்தால், அரசாங்கம், வங்கி, கடன் நிறுவனம் போன்றவற்றை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியேற்படும். உங்கள் ஒத்துழைப்புடனும் பொறுமையுடனும் கடன் நிறுவனங்கள் உங்கள் பாதகமான நிலைமையைத் தீர்க்க உதவி செய்யும். இச் செயல்முறையை கூடுமானவரை சமாளிப்பதற்கு, உங்கள் கடன் வழங்குனருடன் ஏற்படும் எந்த பிரச்சனையையும் சமாளிப்பதற்கும், உங்கள் கடன் அறிக்கையிலிருந்து எந்த திருத்தமற்ற தகவலையும் நீக்குவதற்கும் மேலதிக எந்த ஏமாற்றையும் தவிர்ப்பதற்கும் TransUnion கடன் நிறுவனம் பின்வரும் செயல்முறைகளை தயாரித்துள்ளது.

## உங்கள் கடன் அறிக்கையை பாதுகாத்துக் கொள்ளுங்கள் (Protect your Credit Report)

உங்கள் கடன் கோப்பினுள் ஓர் ஏமாற்று எச்சரிக்கையை (Fraud alert) சேர்ப்பதன் மூலம் கடன் வழங்குனரை எச்சரிக்கலாம்.. உங்கள் வதிவிட நிலையை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் ஓர் பாதுகாப்பு உறைநிலைக்கு (Security Freeze) தகுதி பெறலாம். இதன் மூலம் எவரையும் (சில விதிவிலக்குகளுடன்) உங்கள் கடன் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதில் இருந்து தவிர்க்கலாம்.

## உங்கள் கடன் அறிக்கையின் பிரதி யொன்றைப் பெற்றுக் கொண்டு மீளாய்வு செய்யுங்கள்.

காலத்திற்குக் காலம் உங்கள் கடன் அறிக்கையைப் பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்வதுடன் எந்த ஒரு ஒழுங்கற்ற நடவடிக்கையையும் சரிபாருங்கள். உங்கள் கடன் கோப்பில் (Credit file) உங்களுக்கல்லாத தகவல்கள் காணப்பட்டால், கடன் வழங்குவோரைத் தொடர்பு கொண்டு, கணக்கை அல்லது விசாரணைகளைப் பற்றி (Inquiries) வினவுங்கள்.

## ஏமாற்றுக்களை அறிவியுங்கள் (Report the Fraud)

ஏமாற்று நடவடிக்கைகளை அறிவிக்க உள்ளூர் சட்ட அமுலாக்கல் நிறுவனத்தை தொடர்புகொள்ளுதல் விரும்பத்தக்கதாகும்.

## உங்கள் கடன் நிதி நிறுவனங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களுக்கு தொடர்புகள் இருக்கும் கம்பனிகளையும் தொடர்பு கொள்ளுவதுடன் அந்த கம்பனிகளுடன் உங்கள் கணக்குகள் சீர் செய்யப்படலாம் (Compromise) என்பதை அவர்களுக்கு அறிவியுங்கள். உங்கள் கடன் அறிக்கையில் உங்களால் இனங்காணமுடியாத கம்பனிகளை தொடர்பு கொண்டு, அறிக்கை செய்யப்பட்ட விடயம் தொடர்பாக அவர்களின் அறிக்கைகளில் காணப்படும் தகவல்கள் பற்றி ஆராய்ந் தறியுங்கள். உங்கள் பொலிஸ் அறிக்கையின் பிரதி, சத்தியக் கடதாசி (Affidavit), அல்லது ஏனைய பொருத்தமான ஆவணங்களின் பிரதியினை கடன் வழங்குனருக்கு வழங்குங்கள். கடன் தொடர்பான எல்லா தொலைபேசி உரையாடல்கள், நீங்கள் உரையாடிய ஆட்களின்பெயர்கள் ஆகியன அடங்கிய அறிக்கையினை வைத்திருங்கள்.

## தொடர்நடவடிக்கை (Followup)

கம்பனிகள், ஏஜன்சிகளுடன் தொடர்ந்து தொடர்பு கொள்வதன் மூலம் அவர்களின் ஆய்வுகள் உங்களுக்குசாதகமாக அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

## உங்கள் உரிமைகள் (Your rights)

சமஷ்டி நேர்மையான கடன் அறிவிக்கும் சட்டமானது (The federal Fair Credit Reporting Act (FCRA)) ஒவ்வொரு "நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனத்தின்' (Consumer Report Agency-CRA) கோப்புக்களின் திருத்தமான தன்மை (Accuracy), நேர்மை (Fairness), அந்தரங்கமான தன்மை (Privacy)என்பவற்றை முன்னேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டது. அநேகமான நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்கள் (CRA) உங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து விற்கும்கடன் அலுவலகங்களாக இருக்கும்.

**பின்வருவன உங்கள் உரிமைகளாகும்.**

## உங்கள் கோப்பினுள் (file) இருக்கும் தகவல் உங்களுக்கு எதிராக பயன் படுத்தப்பட்டால் உங்களுக்கு அறிவிக் கப்படல் வேண்டும்.

கடன், காப்புறுதி அல்லது தொழிலிற்கான உங்கள் விண்ணப்பத்தை மறுப்பதற்காக நுகர்வோர் அறிக்கையின் இன்னோர் வகை அல்லது கடன் அறிக்கையை யாராவது பயன்படுத்தினால் அல்லது உங்களுக்கு எதிராக இன்னோர் எதிர்மறையானசெயலை செய்தால் - உங்களுக்குச் அறிவிப்பதுடன், இத் தகவலை வழங்கிய நிறுவனத்தின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கங்களை கொடுக்க வேண்டும்.

## உங்கள் கோப்பில் என்ன இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு.

நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனத்தின் (உங்களது "கோப்பு வெளிப்படுத்தல்") கோப்புகளில் உள்ள உங்களைப் பற்றிய

59ம் பக்கம் பார்க்க...

J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி
• Loans
• Mortgages
• Insurance Claims
• Traffic Ticket
• Auto/Life Insurance
• Scholarship Plan (RESP)
• Real Estate Related
• Credit Counselling
• Accounting
• Tax Services

R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.
Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

அனுமதி இலவசம் அனுமதி இலவசம் அனுமதி இலவசம்



மீண்டும் வருகிறது

வர்த்தக வசந்தம்

# வர்த்தக வசந்தம் 2007

**Richmond Green Park**
**Aug 4, 5**

**1300 Elgin Mills**
**(Hwy404/Elgin Mills)**

Bharradhi Arts பாரதி ஆர்ட்ஸ்

agni



**4 August** **5 August**

## ஆகஸ்ட் 4, 5

சனி, ஞாயிறு இரு தினங்களும்
காலை 10 மணிமுதல் இரவு 10 மணிவரை





## அனுமதி முற்றிலும் இலவசம்




**மாறுபட்ட கோணங்களில்**

உள்அரங்க, வெளியரங்க வர்த்தகச் சாவடிகள்
பிரமாண்டமான மேடையில் கலை நிகழ்ச்சிகள்
சிறுவர்களுக்கான தனியான விளையாட்டுத்திடல்



ரிச்மண்கில் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்
Elgin Mills/Leslie (Hwy404 north, Exit ElginMills)




*For Stalls Booking & Information*
*416-298-9322 or 647-409-8966*

அனுமதி இலவசம் அனுமதி இலவசம் அனுமதி இலவசம்

# கடன் அட்டை ஏமாற்று...

57ம் பக்கத் தொடர்ச்சி...

தகவல் அனைத்தையும் கோரி பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் சரியான அடையாளத்தைக் காட்டும்படி கோரப்படுவீர்கள். இதனுள் உங்கள் சமூக பாதுகாப்பு இலக்கம் உள்ளடங்கியிருக்கலாம். அநேகமான சந்தர்ப்பங்களில், வெளிக்காட்டப்படல் இலவசமாக இருக்கும்.

**பின்வரும் சம்பவங்கள் நடந்திருந்தால் நீங்கள் இலவசமான கோப்பு வெளிப்படுத்தப்படலுக்கு (File exposure) தகுதி பெற்றவர்களாக இருப்பீர்கள்.**

- உங்கள் கடன் அறிக்கையில் காணப்படும் தகவலினால் ஒரு நபர் உங்களுக்கு எதிராக பாதகமான நடவடிக்கை எடுத்துள்ளார்.
- நீங்கள் அடையாளத் திருட்டிற்கு உட்பட்டுள்ளதுடன், உங்கள் கோப்பினுள் ஓர் ஏமாற்று எச்சரிக்கையையும் இட்டுள்ளீர்கள்.
- ஏமாற்றின் விளைவாக உங்கள் கோப்பினுள் திருத்தமற்ற தகவல் காணப்படுகின்றது.
- நீங்கள் பொது உதவி (Public Assistance) பெற்று வருகின்றீர்கள்.
- நீங்கள் வேலையற்றி இருக்கிறீர்கள். ஆனால் 60 நாட்களுக்குள் வேலைக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கிறீர்கள்.

**நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்கள் திருத்தமற்ற, பூரணமற்ற அல்லது ஆராய்ந்தறிய முடியாத தகவலை திருத்த வேண்டும் அல்லது நீக்க வேண்டும்.**

திருத்தமற்ற, பூரணமற்ற அல்லது ஆராய்ந்தறிய முடியாத (unverifiable) தகவல்கள் 30 நாட்களுக்குள் அகற்றப்படல் வேண்டும். எவ்வாறெனினும், நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனமானது, உங்கள் கோப்பில் இருந்து திருத்தமான ஆனால் பாதகமான (derogatory) தகவலை, காலஞ்சென்றிருந்தால் (Outdated) அல்லது ஆராய்ந்தறியப்பட முடியாததாக இருந்தாலொழிய அகற்ற முடியாது. ஓர் நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனமானது, திருத்தமானது என ஆராய்ந்தறியப்பட்ட தகவலை தொடர்ந்து அறிவிக்கும்.

**நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்கள், காலம் சென்ற (Outdated)எதிர்மறையான தகவல்களை அறிவிக்காது.**

அநேகமான சந்தர்ப்பங்களில் 7 வருடங்கட்கு மேற்பட்ட எதிர்மறையான தகவலையோ அல்லது 10 வருடங்கள் பழமையான வங்குரோத்துக்களையோ (Bankruptcy) அறிவிக்காது.

**உங்கள் கோப்புக்களை அணுகுதல் வரையறுக்கப்பட்டது**

ஓர் நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனமானது, உண்மையான தேவையுடனான மக்களுக்கு மட்டுமே உங்களைப் பற்றிய தகவலை வழங்கும்.–பொதுவாக ஓர் கடன் வழங்குவோர்(Creditor), காப்புறுதியாளர் (Insurer), தொழில் வழங்குனர் (Employer), நிலச் சொந்தக்காரர்(Landlord) அல்லது ஏனைய வியாபாரங்களுடன் ஓர் விண்ணப்பத்தை கவனத்திற் கொள்வதற்கு உங்களைப் பற்றிய தகவலை வழங்கும

**தொழிலாளருக்கு வழங்குவதற்கான அறிக்கைகட்காக உங்கள் அனுமதியை நீங்கள் கொடுக்க வேண்டும்.**

ஓர் நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனமானது உங்களை வேலைக்கு அமர்த்தியவருக்கோ அல்லது அமர்த்தக் கூடியவருக்கோ உங்கள் எழுத்து மூலமான அனுமதி வேலை கொள்வோருக்கு (Employer) கொடுக்கப்பட்டால் ஒழிய உங்களைப் பற்றிய தகவலைக் கொடுக்காது.

**நேர்மையான கடன் அறிவிக்கும் சட்டமானது (Fair Credit Reporting Act (FCRA)) நீங்கள் அடையாளத் திருட்டிற்கு இலக்காகினால் அல்லது உட்பட்டுள்ளீர்கள் என எண்ணினால், குறிப்பிட்ட உரிமைகளை வழங்கும். அடையாளதிருட்டில் இருந்து நீங்கள் மீளெழுவதற்காக வடிவமைக்கப்பட்ட உரிமைகளின் சுருக்கமான சாராம்சம் பின்வருமாறு:**

**நாடளாவிய நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்கள் உங்கள் கோப்பினுள் "ஏமாற்று எச்சரிக்கை" (Fraud alerts) களை இடும்படி கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.**

நீங்கள் அடையாளத் திருட்டிற்கு இலக்காகக் கூடும் என கடன் வழங்குவோருக்கும் ஏனையோருக்கும் அறிவிப்பதற்காக நாடளாவிய நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்கள் உங்கள் கோப்பினுள் "ஏமாற்றுக்கள் பற்றிய எச்சரிக்கையை இடும்படி கூறலாம். ஓர் ஏமாற்று எச்சரிக்கையானது, உங்கள் பெயரில், கடனைப் பெறுவதை மிகக் கடினமாக்கலாம். ஏனெனில், இது உங்களைப் பாதுகாப்பதற்காக சில செயல் முறைகளை மிகவும் கடினமாக்கும். இது மேலும், கடனைப் பெறக்கூடிய உங்கள் திறனையும் (ability) மிகவும் தாமதமாக்கும். இரண்டு நாடளாவிய நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்களுள் ஒன்றை அழைப்பதன் மூலம் நீங்கள் உங்கள் கோப்பினுள் ஓர் ஏமாற்று எச்சரிக்கையை இடலாம். இந்த நிறுவனம், உங்கள் ஏமாற்று எச்சரிக்கையை செயல்படுத்தும் போது, இது ஏனைய நிறுவனங்களுக்கும் அறிவிக்கும். இந் நிறுவனமும் பின் உங்கள் கோப்பினுள் ஏமாற்று எச்சரிக்கைகளை இடும். இந்நிறுவனங்கள் பற்றி முன்னையஇதழில் விவரிக்கப்பட்டது. அவற்றின் தொலைபேசி இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

Equifax:1-800-525-6285
www.equifax.com
TransUnion; 1-800-680-7289

ஓர் ஆரம்ப ஏமாற்று எச்சரிக்கையானது (An Initial fraud alert) 90 நாட்களுக்கு உங்கள் கோப்பினுள் காணப்படும். ஓர் தொடர்ச்சியாக்கப்பட்ட எச்சரிக் கையானது, உங்கள் கோப்பினுள் 7வருடங்கட்கு காணப்படும். இந்த எச்சரிக்கை களை இடுவதற்கு, ஒரு நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனமானது, உங்கள் அடையாளத்தைப் பற்றிய பொருத்தமான நிரூபணத்தை வழங்குவதற்குக்கோரும். இதனுள் சமூக பாதுகாப்பு இலக்கமும் (Social Security number) உள்ளடங்கும். தொடர்ச்சியான எச்சரிக்கையை இடும்படி நீங்கள் கேட்டால், அடையாளதிருட்டு அறிக்கையை நீங்கள் வழங்கவேண்டியிருக்கும்.

அடையாளதிருட்டு அறிக்கையானது, ஓர் சமஷ்டி, அரச அல்லது உள்ளூர் சட்ட அமுலாக்கல் நிறுவனத்துடன் நீங்கள் கோப்பு (file) செய்த அறிக்கையின் பிரதியையும் மேலதிக தகவல்களையும் ஓர் நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனம் உங்களை சமர்ப்பிக்கும்படி கேட்கலாம். அடையாள திருட்டு அறிக்கை பற்றிய மிகவிரிவான தகவல்கட்கு www.consumer.gov/idtheft எனும் இணையத்தள முகவரிக்குச் செல்லுங்கள். உங்கள் அடையாளத்தைப் பாதுகாக்குமுகமாக, உங்கள் கடன் கோப்பில் இருந்து ஏமாற்று எச்சரிக்கையை அகற்றுவதற்கு ஓர் எழுத்து மூலமான வேண்டுகோளை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

**உங்கள் கோப்பினுள் இருக்கும் தகவல் பற்றிய இலவச பிரதிகளைப்பெற உங்களுக்கு உரிமையுண்டு (உங்கள் கோப்பை வெளியரங்கமாக் குதல் - File disclosure)**

ஓர் ஆரம்ப ஏமாற்று எச்சரிக்கையானது (Initial Fraud Alert), கடன் அறிவிக்கும் நிறுவனங்களிலிருந்து உங்கள் கோப்பின் தகவல்களின் ஒரு பிரதியை இலவசமாக பெற உங்களுக்கு உரிமையளிக்கும். விரிவுபடுத்தப்பட்ட எச்சரிக்கையானது (Extended Fraud Alert), 12 மாத காலத்தில் இரு தடவை இலவசமாக அறிக்கைகளைப் பெற உங்களுக்கு தகுதியளிக்கும். இந்த மேலதிக அறிக்கைகள், ஏமாற்றுச் சமிக்ஞைகளை கண்டறிய உதவும். உதாரணமாக, உங்கள் பெயரில் ஏமாற்றுக் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளதா அல்லது, யாராவது உங்கள் விலாசத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என அறிவித்துள்ளார்களா? என்பதைக் கண்டறிய உதவும். எந்த ஒரு நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனத்திலும், உங்கள் கோப்பில் அடையாளத்திருட்டு போன்ற ஏமாற்றின் காரணமாக திருத்தமற்ற தகவல் காணப்படுகின்றது என நீங்கள் நம்பினால் உங்கள் கோப்பில் உள்ள தகவலின் இலவசமான பிரதியைப் பெற்றுக் கொள்ள உரிமை உள்ளது.

**உங்கள் தனிப்பட்ட தகவலைப் பயன்படுத்தி திறக்கப்பட்ட கணக்குகள் தொடர்பான ஏமாற்று தகவல் பரிமாற்றங்களுடன் (Fradulent transactions) தொடர்பான ஆவணங்களைப் பெறும் உரிமையுண்டு.**

நீங்கள் எழுத்து மூலம் கேட்டால் உங்கள் அடையாளத் திருட்டின் விளைவான பரிமாற்றங்கள், கணக்குகளுடன் தொடர்பான ஏனைய வர்த்தக பதிவுகளினதும், பிரயோகங்களதும் (Applications) பிரதிகளை உங்களுக்கு கொடுக்க வேண்டும். ஓர் வர்த்தக நடவடிக்கையின்போது (Business), உங்கள் அடையாளத்திற்கான நிரூபணம் (Proof), ஓர் பொலிஸ் அறிக்கை, ஓர் சத்தியக் கடதாசி (affidavit) ஆகியவற்றை உங்கள் ஆவணங்களைக் கொடுக்குமுன் கேட்கலாம். உங்கள் கோரிக்கையை அனுப்புவதற்கு உங்களுக்கு ஓர் விலாசத்தையும் குறிப்பிடலாம். சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், ஒரு வர்த்தகமானது (Business) இந்த ஆவணங்களை வழங்குவதற்கு மறுக்கலாம். www.consumer.gov/idtheft ஐப் பார்க்கவும்.

**கடன் சேகரிப்பவரிடமிருந்து தகவலைப்பெற உங்களுக்கு உரிமையுண்டு.**

அடையாளத் திருட்டின் மூலம், உங்கள் பெயரில் பணம் பெறப்பட்டதாக நம்பப்படும் குறிப்பிட்ட தகவலை நீங்கள் கோருமிடத்து கடன்சேகரிப்பவர் உங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**உங்கள் கோப்பில் உள்ள தகவல்கள், அடையாளத் திருட்டின் மூலம் ஏற்பட்டதென நீங்கள் நம்பினால், உங்கள் கோப்பில் இருந்து அந்தத் தகவலை ஓர் நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனம் தடுக்கும்படி கேட்கும் உரிமை உங்களுக்கு உண்டு.**

ஓர் அடையாளத் திருடன் உங்கள்பெயரில் கொள்வனவுகளைச் செய்தபோதிலும் அவற்றிற்கான கொடுப்பனவுகளைச் செலுத்த மாட்டான். செலுத்தப்படாத கொடுப்பனவுகளின்தகவல், உங்கள் நுகர்வோர் அறிக்கையில் காணப்படலாம். குறிப்பிட்ட இத் தகவலை அறிக்கை செய்வதை தடுப்பதற்கு நுகர்வோர் பற்றி அறிக்கை யிடும் நிறுவனத்தை கேட்பதற்கு தீர்மானித் தால், தடைசெய்ய விரும்பும் தகவலை இனங்காண வேண்டும். அத்துடன் உங்கள் அடையாளத்தின் நிரூபணத்தை கொடுப்பதுடன், உங்கள் அடையாள திருட்டு அறிக்கையின் பிரதியொன்றையும் வழங்க வேண்டும். தடை (Block) ஒன்றைச் செய்ய வேண்டுமென்ற, உங்கள் கோரிக் கையை நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனம் மறுக்கலாம் அல்லது இரத்துச் செய்யலாம். உதாரணமாக, நீங்கள் அத்தியாவசியமான தகவலை வழங்காவிடில் அல்லது, ஓர் வழுவிலிருந்து (Error) அல்லது தகவலை நீங்கள் தவறாக பிரதிநிதித்துவப்படுத்தியதால் (Misrepresentation of fact) இந்த தடையானது ஏற்பட்டிருக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்படலாம். நிறுவனமானது இந்த தடையை செய்யாதுவிடில், (declines) அது உங்களுக்கு அறிவிக்க வேண்டும். அடையாளத் திருட்டில் இருந்து ஏற்படும் கடனானது தடுக்கப்பட்டால், தடை அறிவித்தலுடன் ஓர் நபர் அல்லது வியாபாரம் கடனை சேகரித்தலுக்காக(Collection) விற்கவோ, பரிமாறவோ முடியாது.

**உங்களைப் பற்றிய தகவல்கள் அடையாளத் திருட்டின் விளைவாக ஏற்பட்டது என நீங்கள் நம்பினால், அவற்றை நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனங்கட்கு, வர்த்தகங்கள் (Business) அறிவிப்பதை தவிர்க்கலாம்.**

இதனைச் செய்வதற்கு, நுகர்வோர் அறிவிக்கும் நிறுவனத்திற்கு தகவலை அறிவிக்கும் வர்த்தகத்தில் குறிப்பிட்ட முகவரிக்கு உங்கள்கோரிக்கையை அனுப்ப வேண்டும். வர்த்தகமானது, உங்களால் அறிவிக்கப்பட்ட விரும்பாத தகவல் எது என இனங்காண வேண்டுமென்று எதிர்பார்ப்பதுடன் ஓர் அடையாளத் திருட்டு அறிக்கை யையும் வழங்க வேண்டுமென்று எதிர்பார்க்கும்.

அடையாளத் திருட்டைப் பற்றி அதிகம் அறிந்து கொள்வதற்கும், அதன் விளைவுகளை எவ்வாறு கையாளலாம் என்பதற்கும் www.consumer.gov/idtheft எனும் இணையத்தள முகவரிக்குச் செல்லுங்கள். மேலதிக தகவல்கட்கு, உங்கள் உள்ளூர் நுகர்வோர் பாதுகாப்புநிறுவனத்தையும் உங்கள் அரச சட்டத்தரணி (State attorney general) ஐயும் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஏமாற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்** TransUnion **இன் திணைக் களம்** (Fraud Victim Assistance Department)

60ம் பக்கம் பார்க்க...

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம். காலம். நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பாகுபடுத்தும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416-400-6406

# கடன் அட்டை ஏமாற்று...

59ம் பக்கத் தொடர்ச்சி...

கடன் ஏமாற்றுக்கு (Credit fraud) இற்கு இலக்காகியோருக்கு உதவுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட கடன் தொழிற்சாலையின் (Credit Industry) முதலாவதும் மிக ஒருங்கிணைப்பானதுமான திணைக்களமே (Fraud Victim Assistance Department) FVAD ஆகும். கடன் ஏமாற்றினை கண்டறிதல், தடுத்தல், திருத்துதல் (Rectification) என்பவற்றுக்காக பூரணமாக அர்ப்பணிக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட TransUnion திணைக்களமே இதுவாகும். கடன் ஏமாற்று நிகழும்போது, நீங்களும் உங்கள் கடன் வழங்குனரும், கடன் அறிவிக்கும் நிறுவனங்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஏமாற்று கண்டு பிடிக்கப்படும்வரை, பொய்யாகத் (Fuadulently) திறக்கப்பட்ட கணக்குகள் உங்கள் கடன்அறிக்கையில் காணப்படும். FVADஆனது இந்த பொய்யான கணக்குகளை இனங்காண உதவுவதுடன் ஏமாற்றை அறிவிக்க வேண்டிய கடன் வழங்குவோரைப் பற்றியும் ஆலோசனை கூறுவதுடன், உங்கள் கடன் கோப்பிலிருந்து ஏமாற்று கணக்குகளை அகற்றுவதற்குமாக வேலை செய்கின்றது.

## 7 படிமுறை நிகழ்ச்சித் திட்டம்.

ஓர் ஏமாற்று திருட்டுக்குட்பட்டவர் என்ற வகையில் உங்களுக்கு வினைத் திறனான முறையில் உதவுவதற்கு FVAD ஆனது 7 படிமுறைகளை உடைய ஓர் நிகழ்ச்சித் திட்டத்தை தாபித்துள்ளது

1. நுகர்வோர் ஏமாற்றுக் கூற்றை சேர்ப்பதுடன், தபால் பட்டியலில் இருந்து ஏமாற்றுபவரை நீக்குதல்.
2. அண்மையில் விசாரிக்கப்பட்டவற்றையும் / சந்தேகப்படும் கணக்குகளையும் சிறப்பாக எடுத்துக்காட்டுதல் (Highlighting).
3. தபாலில் அனுப்புதல்
4. அறிவூட்டுவதற்கான (Educational) குறிப்புகளையும் பொருட்களையும் (Mate rial) தபாலில் அனுப்புதல்.
5. கடன் வழங்குவோர் - பாதிக்கப்பட்டவருக்கு அறிவித்தல்.
6. ஏமாற்றுத் தகவலின் தரவுத் தளத்தை (Data base) வைத்திருத்தல்
7. பாதிக்கப்பட்டவரின் கடன் கோப்பை அதன் திருத்தமான நிலைக்கு மீளக் கொண்டுவரல் (restore).

### 1. கடன் மற்றும் காப்புறுதியின் முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்காக (offers) தபால் பட்டியலில் இருந்து பாதிக்கப்பட் டவரை அகற்றுவதுடன் ஓர் நுகர் வோர் ஏமாற்றுக் கூற்றை சேர்த்தல்

FVADஆனது உங்கள் கடன் கோப்புக்கு ஓர் ஏமாற்றுக் கூற்றை சேர்க்கும். கடன நடவடிக்கைகளை அனுமதிக்க முன்னர், எந்தஒரு கடன் வழங்குவோரையும் உங்களை தொடர்பு கொள்ளும்படி, ஆலோசனை கூறும். இந்தக் கூற்றானது, இது சேர்க்கப்பட்ட தினத்தில் இருந்து 7 வருடங்கட்கு அல்லது அதனை அழிப்பதை எழுத்தில் கோரும் வரை உங்கள் கடன் கோப்பில் பேணப்படும் (Retained). மேலும், உங்கள் பெயரும் விலாசமும், 5 வருடங்கட்கு காப்புறுதிக்காக அல்லது முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்ட கடன் வழங்கல்கட்காக TransUnion இன் எந்த ஒரு தபால் பட்டியலிலும் உள்ளடக்கப்படமாட்டாது.

### 2:ஏமாற்று என சந்தேகிக்கப்பட்ட அண்மைய விசாரணைகளையும் / அல்லது கணக்குகளையும் சிறப்பாகக் காட்டுக.

உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர், FVAD பிரதிநிதியானவர் உங்கள் கோப்பில் புதிதாக ஏற்பட்டிருக்கும் கணக்குகள் மற்றும் விசாரணைகள் பற்றி ஆலோசனைகூறுவார். இந்த விசாரணைகள் அல்லது கணக்குகள் (Inquiries and/or account) பற்றி நீங்கள் அறியாதிருந்தால், அவற்றின் விலாசங்களையும் தொலைபேசி இலக்கங்களையும் தொலைபேசியினூடாக இப் பிரதிநிதி வழங்குவார்.

### 3: கடன் கோப்பை நுகர்வோருக்கு தபால்மூலம் அனுப்புக.

தொலைபேசி அழைப்பின் பின் உங்கள் TransUnion கடன்கோப்பின் பிரதி ஒன்றை FVAD பிரதிநிதியானவர் தபாலில் அனுப்புவார். உங்கள் கோப்பை (file) மேலும் ஏமாற்று நடவடிக்கையில் இருந்து பாது காக்க அடையாளத்திற்கான நிருபணமும் / அல்லது வாழிடத்திற்கான நிருபணமும் (Proof of residency) தேவைப்படலாம்.

### 4: கல்வி சார்ந்த பொருட்களை தபாலிலிடல் (Mail educational Material)

FVAD ஆனது ஓர் கடன் கோப்பை தபாலில் அனுப்பும்போது, ஓர் பிணக்கு படிவத்தை (Dispute form) உள்ளடக்குவதுடன் உங்கள் பொறுப்புகளையும் (Responsibilities) உங்களுக்கு ஆலோசனை கூறும் கல்விசார் பொருட்களையும் (Materials) அனுப்பும். அத்துடன் எதிர்கால ஏமாற்றைத் தவிர்ப்பதற்கான தகவல்களையும் உள்ளடக்கலாம். வழங்கப்பட்ட குறிப்புக்கள் கடந்த கால அல்லது ஏற்படக்கூடிய ஏமாற்றின் தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

### 5: கூட்டாக பாதிக்கப்பட்டவர், கடன் வழங்குவோருக்கு அறிவித்தல்.

உங்களுடனான FVAD இன் கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டு, FVAD ஆனது சந்தேகப்பட்ட ஏமாற்று விசாரணையுடன் கடன் வழங்குவோரின் நோக்கில்(perspectives) ஏமாற்றை அணுகுவதன் மூலம், கணிசமானளவு ஏமாற்றானது தவிர்க்கப்படும்.

### 6: ஏமாற்றுத் தகவலின் தரவுத் தளத்தைப் பேணுதல் (Keep a database of fraud information)

FVAD ஆனது ஏமாற்று விலாசங்கள், தொலைபேசி இலக்கங்கள், சமூக பாதுகாப்பு இலக்கங்களை ஏமாற்று தகவலை உள்ளடக்கிய உள்வாளி தரவுத் தளத்துடன் (Data base) சேர்க்கும். இந்த தகவல் எதிர்காலத்தில் ஏமாற்றை கண்டறிவதற்காக, கடன் வழங்குவோருக்கு ஆலோசனை கூறுவதற்காக உருவாக்கப்படும்.

### 7: ஏமாற்றுக்கு இலக்காகியவரின் கடன் கோப்பினை அதன் திருத்த மான நிலையில் மீளமைத்தல் (Restore the victim's credit file to its accurate state).

- உங்கள் கடன் கோப்பினை அதன் திருத்தமான நிலையில் மீளமைத்தலுக்கு உதவுவதற்காக எந்த ஒரு பிணக்கிற்குட்பட்ட கடன்தகவலையும் FVAD ஆராயும்.
- உங்கள் தனிப்பட்ட அடையாள அட்டை தொலைந்தால் அல்லது களவாடப்பட்டால், சந்தேகத்திற்குரிய ஏமாற்று நடவடிக்கைகள் பற்றி ஓர் நிறுவனம் உங்களைத் தொடர்பு கொண்டால், Equifax இன் இலவச எண்ணிற்கு 1 800 465 7166 அல்லது 1 514 493 2314 இனை அழையுங்கள். FVAD கடன் வழங்கு வோரை எச்சரிக்க உங்கள் கோப்பில் ஏமாற்று நடவடிக்கைக்கு நீங்கள் உட்படலாம் என ஓர் கூற்றினை சேர்க்கும்.
- அடுத்தமுறை நீங்கள் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது நீங்கள் மேலும் அதிகமாக வினவப்படுவீர்கள். கடன் வழங்குவோர், நீங்கள் சொல்லும் நபர் நீங்கள்தானா என்பதை உறுதிப்படுத்த விரும்புவார். உங்கள் கோப்பினுள் ஏமாற்றுஎச்சரிக்கை உள்ளதால் மேலதிக வினாக்கள் உங்களிடம் வினவப்படலாம்.

■ ■ ■



உங்கள்
இல்லக்கனவுகளின்
திறவுகோல்

- Residential 1st, 2nd, 3rd Mortgage
- Refinancing/Renewal/Transfer
- Switch the mortgage without loosing/paying any cents
- Mortgage for new immigrants
- Mortgage for non immigrants
- Mortgage for social insurance starting with 9
- 0 down payment mortgage
- Mortgage for previously bankrupt
- Mortgage for no credit established
- Mortgage for self-employed
- Mortgage for poor credit

- Commercial mortgages
- Secured, Unsecured line of credit
- Debt consultation

NO CMHC or Genworth Premium
Guaranteed lowest rate

Questions pls call
Thevan Kankesu
Certified Mortgage Consultant

Future Financial Inc.
Direct: 416.939.8789
Office: 416.446.0077 ext. 224

# கூரை பராமரிப்பு

- த. சிவதாசன் -
வீடு விற்பனை முகவர்

## பொருத்து மூடிகள் (Flashings)

பொருத்து மூடிகள் கூரையின் முக்கியமான ஒரு அம்சம். கூரை நிர்மாணத்தின்போது பல ஓரினமற்ற (dissimilar) பொருட்கள் (உதாரணம்: இரும்புத் தகடும் செங்கல்லும் அல்லது மரமும் அலுமினியமும்) பாவிக்கப் படுகின்றன. அவை பொருந்துமிடங்களில் இடைவெளி இருப்பின் அதனூடு மழை நீர் போய் சுவர்களை நாசமாக்கிவிட நேரிடும். இவ்விடைவெளிகளை மூடுவதற்குப் பாவிக் கும் பொருளே பொருத்து மூடி (flashing) எனப்படும். இப்பொருத்து மூடிகள் இலகு வாக வளைந்து நெளியக்கூடிய உலோகங் களினால்தான் செய்யப்படுகிறது. இரண்டு கூரைகள் சந்திக்கும் இடத்திலோ அல்லது புகைபோக்கியும் கூரையும் சந்திக்கும் இடத்திலோ ஏற்படுகின்ற பொருத்துகளை இப்படியான உலோகத்தகடுகளினால் மூடிப் பசையிட்டு ஒட்டி விடுவது வழக்கம். இப்படியான ஒட்டுக்கள் வெப்பநிலை மாற் றங்கள், அதி வேகமான காற்று போன்ற காரணிகளால் நாளடைவில் விடுபட்டுப் போய் நீர்க் கசிவு ஏற்பட்டு சுவர்கள் நாசமாகிவிடுகின்றன.

## பராமரிப்பு

முன்பு கூறியது போல கூரையின் பலவி டங்களில் இப்படியான பொருத்துகள் செய்யப்படுவதால் ஒவ்வொரு இடத்திற்கும் வெவ்வேறு வகையான பொருட்களும் பசைகளும் பாவிக்கப்படுகின்றன. குறைந் தது 2 வருடங்களுக்கு ஒரு தடவையாவது கூரை மீது ஏறி (கோடை காலத்தில்) இப்பொருத்துகளைச் சரிபார்த்துச் செப்பனிட வேண்டும். இதை Tune என்பார்கள். கூரை மீதேறுவது ஆபத்தான காரியமாகையால் பாதுகாப்பான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். அல்லது இதற்கான தொழிலா ளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும்.

## கூரைப் பள்ளத்தாக்கு (Roof Valley)

இரண்டு சரிவான கூரைகள் சந்திக்கு மிடத்தில் ஏற்படும் பள்ளம் மலையிடுக்கு கள் போல அதிகமானதும் வேகமானது மான நீரோட்டத்தை எதிர் கொள்ளும். இதில் அமைக்கப்படும் பொருத்து மூடிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. கூரையில் ஏற்படும் நீர்க்கசிவில் பெரும்பங்கு இப்படி யான இடுக்குகளிலேயே ஆரம்பிக்கிறது என்கிறார்கள்.

## கூரை-சுவர்ச் சந்திப்பு (Roof to Wall)



கூரை தட்டையானதா(flat) அல்லது இறக்க முள்ளதா (sloped) என்பதைப் பொறுத்து விதம் விதமான பொருத்துகள் பாவிக்கப் படுகின்றன. சில வேளைகளில் ஒன்றிற்கு மேற்பட்ட மூடிகள் பாவிக்கப்படலாம்.

## புகை போக்கி-சுவர்ச் சந்திப்பு

இதுவும் மேற்கூறியது போன்றதே. கூரைச் சீமெந்து (Roofing Cement) எனப்படும் ஒரு வகைப் பசை இங்கு பொருத்து வேலைக ளுக்குப் பயன் படுத்தப்படுகிறது. கூரையின் உச்சியிலிருந்து வேகமாக ஓடிவரும் மழை நீர் புகைபோக்கியின் இந்த சந்திப்பில் மோதிச் சிதறி ஓடுவதால் இந்த இடத்தில் பசை கழன்று, ஒட்டு விடுபட்டு சந்திப்பதில் இடைவெளி உருவாகிறது. மழை நீர் இதனூடு கசிய ஆரம்பித்து வீட்டின் உட் புறச் சுவரைப் பாதிக்கின்றது. ஆரம்பத்தில் கூறியவாறு, இரண்டு வருடத்துக்கு ஒரு தடவையாவது கூரையைப் பரிசோதித்தால் இப்படியான குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். கூரைச் சீமெந்து (Roofing Cement) எனப்படும் பசையினால் தற்காலிக நிவர்த்தியைச் செய்து கொள்ள லாமெனினும் அடுத்த தடவை கூரை மாற்றும்போது புதிய பொருத்து மூடிகளைப் பாவிக்க வேண்டும்.

## வானொளிக் கூரைகள் (Skylights)



கடந்த சில வருடங்களாக வீட்டினுள் விழு கின்ற வெளிச்சத்தை அதிகரிக்கவென கூரையில் ஒரு துண்டை வெட்டி எடுத்து விட்டு கண்ணாடிக் கூரையால் மூடி விடும் பழக்கம் அறிமுகமாயிருக்கிறது. பல புதிய வீடுகளில் இது ஒரு தரம் கூட்டும் அம்சமாகக் கருதப்படுகிறது. அதிக வெளிச் சம் வருவது ஒரு நன்மையாகவிருப்பினும் சரியான முறையில் நிர்மாணிக்காவிடின் இங்கும் நீர்க்கசிவு ஏற்படவழியுண்டு. ஓரங் களில் பசை உலர்ந்து, வெடிப்புகள் உருவாகுவதைத் தவிர்க்க வேண்டும்.

## காற்றுத் துவாரங்கள் (Roof Vents)

கூரையின்மேல் கவிழ்த்து வைத்த சட்டிகள் போலவும், சுழலும் பந்துக் காற்றாடிகள் போலவும் தெரிகின்றவை உண்மையில் கூரையின் "சுவாசத் துவாரங்களே" (சமையல். குளித்தல் போன்றவற்றினால் சேகரிக்கப்படும் நீராவி மற்றும் வீட்டினுள் உருவாகும் துர் மணம் போன்றவை கூரை யின் முகட்டினுள் தங்கிவிடாது இருக்கவே இந்தத் துவாரங்கள் வைக்கப்படுகின்றன. கூரையின் தாவாரம் (Overhang) எனப்படும் கூரை எச்சத்தில் இருக்கின்ற காற்றுத் துவா ரங்களினூடு உட்புகும் காற்று கூரைக்கு மேலுள்ள துவாரங்களினால் வெளியேறும் போது கூரையின் அடியில் சிறைப்பட்டுள்ள வேண்டாத காற்றையும் நீராவியையும் வெளியேற்றி விடும். கூரையின் மேல் சுழல் பந்துக் காற்றாடி அமைத்திருப்பின் அது இப்படியான காற்றை விரைவாக அகற்றி விடும்.) இத் துவாரங்களைச் சுற்றியும் பொருத்து மூடிகள் அமைக்கப்படுகின்றன.

புகை போக்கி, வானொளிக் கூரை போன்று இங்கும் பசை உலர்ந்து வெடித்து நீர்க் கசிவு ஏற்படக் காரணமேற்படுகிறது. கூரைப் பரிசோதனையின்போது இவ்விடங்களும் கவனிக்கப்படவேண்டும்.

## கூரை ஓடுகள் (Shingles)

கூரை ஓடுகள் பல விதமானவை பல விலைகளிலும் கிடைக்கும். சுமார் 15 இலிருந்து 30வருடங்கள் வரை இவற்றுக்கு ஆயுள் உண்டு. இருப்பினும் சில புறக்கார ணிகளின் தாக்கத்தால் சில வேளைகளில் கூரையின் ஆயுள் குன்றிப் போகலாம். உதாரணமாக வேகமான காற்று, மரம் செடிகளின் விதைகள் ஓடுகளின் இடுக்கு களில் முளைத்தல் போன்ற பலவேறு காரணங்கள் கூரையைப் பாதிக்கின்றன. வழமையான கூரை ஓடுகளின் தேய்வு (Wear) (ஓடுகளின் மேற்பரப்பின் பாதுகாப் புப் படை தேய்ந்து இழந்து போதல்) ஒரு வகையில் கவனிக்கப்பட வேண்டிய அம்ச மாகும். இத் தேய்வு உடனடியான பாதிப்பைத் தராவிட்டாலும் "வயது வந்து விட்டது" என்பதன் அறிகுறியே அது. கூரையின் ஓடுகளில் கறுப்பு "தேமல்" போன்று சொர சொரப்பான தன்மை இப்புள் ளிகளில் இருக்காது. இப்புள்ளிகள் தோன்ற வாரம்பித்தால் சுமார் இரண்டு மூன்று வருடங்களில் கூரைமாற்ற வேண்டி நேரலாம். இதை விட, கூரை ஓடுகளின் புருவங்கள் உலர்ந்து ஒட்டுக்களிலிருந்தும் விடுபட்டு மேல் நோக்கி வளைந்து கொள் வதும் கூரை மாற்றுவதற்குரிய காலம் அண்மித்துவிட்டது என்பதன் அறிகுறியே. எப்படியாயினும் கூரை அவசரமாக மாற்ற வேண்டுமா என்ற கேள்விக்கு இரண்டு பதில்களைத் தரலாம்.

1. உங்கள் அயலிலுள்ள வீடுகளின் கூரை கள் பெரும்பான்மையானவை கடந்த ஓரிரு வருடங்களில் மாற்றப்பட்டவையா? இந்த வருடத்தில் உங்கள் அயலில் கூரைகள் மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின் றனவா? அப்படியானால் உங்கள் கூரையும் மாற்றப்பட வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

2. உங்கள் வீட்டின் கூரை முகட்டிற்குள் (Attic) போவதற்காக சதுர அல்லது நீள் சதுர துவாரம் ஒன்று வீட்டின் ஒரு அறைக்குள்(பெரும்பாலும் ஒரு குளோசற்றி னுள் ) இருக்கும். ஒரு சிறிய ஏணியைப் பாவித்து டோர்ச்லைட் வெளிச்சத்தின் உதவி யுடன் கூரையின் உட்பகுதியைப் பரிசோதி யுங்கள். குறிப்பாக ஒரு மழை பெய்த நாளில் பரிசோதிப்பது நல்லது. கூரை ஓடுகளின் அடியில் அமைக்கப்பட்டிருக்கும் ஒட்டுப் பலகையில் நீர் ஊறியதற்கான அடையாளங்கள் காணப்படின் உங்கள் கூரையின் மேலேறிப் பரிசோதிக்கவேண்டும். (இது மிகவும் ஆபத்தான செயலாகையால் கூரை மாற்றும் நிறுவனங்களை ஆலோசித் துச் செய்வது நல்லது.) சில வேளைகளில் முழுக் கூரையையுமே மாற்ற வேண்டும். அல்லது ஒரு பகுதியை மட்டும் செப்பனிட் டாலும் போதுமானது.

## கூரை மாற்றம் (Roof Re-Shingle)

கூரை மாற்றுவதென்று முடிவு செய்து விட்டால் அது ஒரு வெப்பமான கோடை காலத்தில் மட்டுமே செய்யப்பட வேண்டும். அப்போதுதான் ஓடுகளின் அடிப்பகுதியி லுள்ள தார் உருகி ஏனைய ஓடுகளுடன் இறுக்கமாக ஒட்டி நீர் புகாது தடுக்கும். இப்படியான கோடை மாதங்களில் சுற்றுச் சூழலில் திறந்து பார்த்தால் கூரை மாற்றம் செய்த அல்லது செய்யப்படப்போகின்ற வீடுகளின் முற்றத்தில் கூரை மாற்றும் நிறுவனங்களின் விளம்பரங்கள் நடப்பட் டிருக்கும் அல்லது சமீபத்தில் கூரை மாற் றிய, வீடுகளின் சொந்தக்காரரிடம் கேட்டு அப்படியான நிறுவனங்களின் தொடர்பு இலக்கங்களை எடுத்து அழைத்துப் பாருங் கள். சிபாரிசு மூலம் அல்லது ஏற்கனவே செய்த வேலைகளைப் பார்த்து அந்த நிறுவனத்தைத் தெரிவு செய்வது நல்லது. கூரை மாற்றுவதற்கான சராசரி விலைகள் சதுர அடி அளவைப்பொறுத்து வேறுபடும். சுமாராக 1200 ச.அடி பங்களாவிற்கு அல் லது 1600 ச. அடி இரட்டை மாடி வீட்டுக்கு கூரை மாற்ற 2000 இருந்து 2500 டொலர் கள் வரை செலவாகலாம். அதிக முகடு கள், சிகரங்கள், ஏற்ற இறக்கங்கள் உள்ள கூரைகளுக்கு விலை சற்று அதிகமாக விருக்கலாம். அத்தோடு, ஒரு கூரையின் ஓடுகள் சராசரி 15 வருடங்களுக்கு தாக்குப் பிடிக்குமெனின் 45-50 வயதுடைய வீடு மூன்றாவது தடைவ கூரை மாற்றம் செய்ய வேண்டியிருக்கும். அப்போது ஏற்கனவே போடப்பட்டிருக்கும் இரண்டு படை கூரை களையும் உரித்தகற்றி விட்டே அடுத்த படையை ஒட்டிக் கொள்ளலாம். இந்த முறைக்கு செலவு இன்னுமொரு சுமார் 500 டொலர்கள் அதிகமாகவிருக்கலாம்.

எப்படியாயினும் எவருடனும் பேசி விலை தீர்க்கும்போது ஒரு சிறு காகிதத் துண்டில் "கிறுக்கி" யாவது விலையை (Contract) எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். காசை முற்பணமாகக்கொடுக்காதீர்கள். காசோலை கொடுப்பதானால் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது நிறுவனத்தின் பெயருக்கோ காசோலையை எழுதுங்கள். 10 வீதத்துக்கு மேல் முற்பணம் கொடுக்க வேண்டுமென்ப தில்லை. வேலை செய்யப் போகும் திகதியையும் அவரதுகையாலேயே குறித் துக் கொள்ளச் சொல்லுங்கள். வேறு நான்கு இடங்களிலும் விசாரித்துவிட்டு தொலைபேசியில் அழைப்பதாகக்கூறி இலக் கத்தை வாங்கிக் கொள்ளுங்கள். நிறையப் பேர் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள்.

■ ■ ■



கதிரொளி புகழ் "கலைவேந்தன்"
கணபதி ரவீந்திரனின்
JULY
06
7:30
PM
RR CINE CREATIONS
ரூபி யோகதாசனின்
தயாரிப்பில்
கதை
அருண்
இசை
கபிலேஸ்வர்
Design by: RR Dream Works 416-566-2904
Fairview Library
Theatre
35 fairview Mall Dr
North York
பார்த்தவர்களின் பாராட்டுக்களோடு மீண்டும் ரசிகர்களுக்காக...
கனேமயன்
ஒளிப்பதிவு படத்தொகுப்பு இயக்கம் ரவி அச்சுதன்
Ravi: 647-408-1417
Ruby: 647-274-7829


Kuberan
Divine Homes
1845 Lawrence Av.East. Scarborough,
ONT. M1R 2Y3 (Lawrence /Pharmacy)
Tel: 416 999 3997, 647 435 0105
இல்லத்திற்கு ஏற்றாற் போல் வழிபாடு செய்வதற்கு சிறிய கோவில் போன்ற பூஜை மேடைகள் எம்மிடம் உண்டு
உங்கள் விருப்பத்திற்கேற்ப சமயமுறைப்படி சாமிமேடை செய்து தரப்படும்.
கீழே அமர்ந்து பூஜை செய்யக்கூடிய மேடைகளும், உட்கார முடியாத பெரியவர்களுக்கும்,
பிள்ளைகளுக்கும் நின்று கொண்டு பூஜை செய்யக்கூடிய மேடைகளும் உண்டு.
சுவாமி சிலைகள், குபேரன் சிலைகள், வலம்புரிச் சங்குகள்,
அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள்
அன்பளிப்பு பொருட்கள் இன்னும் பல...
www.divinehome.org
divinehome@rogers.com
Graphicland - 647 219 7576

# குறைந்த வாடகையில் குடியிருப்பு வீடு

## அறியவில்லையானால் அறிந்து கொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -



**தகவல் தொடர் - 7**

**மிகவும் வருமானம் குறைந்த நிலையில் அல்லது சமூக உதவிப் பணத்தில் வாழ்பவராக இருந்து தங்களின் குடியிருப்புஇல்லங்களுக்கு வாடகை செலுத்த முடியாதுள்ளதா?**

**தங்கள் குடியிருப்புக்கு குறைந்த மாத கட்டுப்பணத்தில் வாடகை வீடு பெற்றுக்கொள்ள மனு கையளித்தீர்களா?**

தங்களின் வரிகழிக்க முன்னரான வருமானம் எதுவோ அவ்வருமானத்தில் 30% மட்டும் வாடகைப் பணம் செலுத்தினால் போதும். அதி உச்ச வாடகைக் கொடுப்பனவுகள் என்ற தலையிடி எதுவும் இல்லாது சுலபமாக வசித்துக்கொள்ளலாம்.

இக் குறைந்த வாடகைக் கட்டணத்தில் குடியிருப்புக்கள் பெற்றுக்கொள்ள ரொறன்ரோ நகர்ப் பகுதியில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**Housing Connections**
**176 ELM street**
**Toronto**
**Ontario M5T 3M4**
**Tel: 416 981 6111**
மின்தகவல்: www.housing connections.ca

இந்நிறுவனம் உள்ள விலாசத்திற்கு நேரே சென்று விண்ணப்பம் செய்யலாம். தபால் மூலமும் விண்ணப்பம் பெற்று நிரப்பி அனுப்பலாம். மின்தகவல் மையத்தின் ஊடாகவும் விண்ணப்பிக்கலாம். இந் நிறுவனத்தின் மூலம் ரொரன்ரோவில் பல்வேறு வகையான வாடகைக் குடியிருப்புக்கள் மலிவான விலையில் வழங்கும் நிறுவனங்களுக்கு கோரிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும். கால தாமதங்கள் ஏற்பட்டாலும் குடியிருப்பு மனைகிடைக்கும் சந்தர்ப்பம் எப்படியோ எட்டும். குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாக வைத்து, அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டாலும் பின்வரும் நிலையில் உள்ளவர்களுக்கு வரிசைக் கிரமத்தில் உரிமை வழங்கப்படுமென இந்நிறுவனத்தின் மின் கணனி தகவல் மையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை யாவன:



**1. Victims of Abuse**
(ஏதாவது பாதிப்புக்கு உள்ளானவர்கள்)

- ஒன்றாக இருந்த இடத்தில் உடல்ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்
- ஒன்றாக இருந்த குடியிருப்பில் பாலியல் வன்முறைகளுக்கு உட்பட்டவர்கள்
- இருந்த குடியிருப்பில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்
- முரண்பாடுகள் காரணமாக ஒன்றாகக் குடியிருந்த வீட்டில் பாதுகாப்புக் கருதி தொடர்ந்து இருக்க முடியாது என்ற நிலைக்கு வந்தவர்கள்

**2. Terminally Ill**
இறுதிக்கட்ட நோய் நிலைமைக்கு உட்பட்டவர்கள் மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபித்து, இத்தகைய மலிவான வாடகைக் குடியிருப்புகளுக்கு விண்ணப்பிக்கும் போது இரண்டாவது உரிமை வழங்கப்படலாம்.

**3. The third priority is over – housed tenants in rent – Geared – to – income**
ஏற்கனவே இம்மலிவான குடியிருப்புகளில் வசிப்பவர்கள், அவர்களின் வருமானமாற்றம், குடும்ப அங்கத்தவர்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மனைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.

**4. Homeless**
வரிசையில் குடி இருக்க வீடு இல்லாதவர்கள்

**5. Separated families with children in the care of a children's aid society**
குழந்தைகளுடன் விலக்கப்பட்டு குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தின் பராமரிப்பில் தங்கியிருப்பவர்கள்.

**6. New comers who are homeless**
கனடாவுக்கு புதிதாகக் குடியேறிவந்து குடியிருப்பு மனை இல்லாது இருப்போர்

**7. Youth who are 16 or 17 years old at the time of applying**
விண்ணப்பிப்பவர் 16 அல்லது 17 வயது நபராக இருந்தால் விரைவாகக் குடியிருப்பு மனை கிடைப்பதற்கு சலுகை காட்டப்படும்.

(இம்முன்னுரிமைகள் அடிப்படையில் குடியிருப்பு மனை பெறவேண்டுமானால், அதற்காகப்பிரத்தியேகமான இன்னொரு விண்ணப்பப்படிவம் நிரப்பிச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

விண்ணப்பம் கிடைத்தவுடன் இது பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தி, ஒரு பதிவு இலக்கம் குறிப்பிட்டு கடிதம் அனுப்புவார்கள். விண்ணப்பத்தில் பூரணமான தகவல் வழங்கப்படவில்லையானால், அது தொடர்பாக மேலதிக தகவல் கேட்டு கடிதம் அனுப்புவார்கள்.

ரொறன்ரோ நகரில் இக்குடியிருப்பு மனைகள் எங்கெங்கு உள்ளதோ அதன் தகவல்கள், வரைபடங்களுடன் வழங்கி விரும்பிய இடத்தினைத் தெரிவுசெய்யுமாறு விண்ணப்பத்தில் கோருவார்கள்.

**எப்படியோ ஒரு வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் குடியிருப்பு மனை வழங்கப்படுவதால் இங்கு காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாக இருப்பது வழமையாகும்.**

குடியிருப்பு மனை ஒன்றை இந்நிறுவனங்கள் சிபார்சு செய்யும் போது தங்களுக்குப் பிடிக்கவில்லையானால் அதனை மறுக்கலாம். மூன்றுமுறை மறுப்பதற்கு உரிமையுண்டு. மூன்று முறைக்கு மேலாக என்றால் விண்ணப்பக் கோரிக்கை பதிவில் இருந்து நீக்கப்பட்டுவிடும். பின்னர் புதிய விண்ணப்பப் படிவம் வழங்கி, தொடர்ந்து ஆரம்பத்தில் இருந்து வரிசைக் கிரமத்தில் காத்து நிற்கவேண்டும்.

விண்ணப்பம்செய்துவிட்டு, குடியிருப்பு மனைக்காகக் காத்து நிற்பவர், தமது தொலைபேசி இலக்கம், விலாசங்கள் மாறினால் அதனை இந்நிறுவனத்துக்கு அறிவித்தல் வேண்டும். அவர்கள் சந்தர்ப்பம் கையில் வரும்போது தகவல் தருவதற்காக தேடும்போது தாங்கள் எங்கே என்பது தெரியவில்லையானால் கிடைக்கும் சந்தர்ப்பமும் நழுவி இதன் காரணமாக, விண்ணப்பிப்பவருக்கு தகவல் தரக்கூடிய இன்னொரு விலாசம், தொலைபேசி இலக்கம் விண்ணப்பத்தில் கேட்கப்படுவது வழக்கமாகும்.

59 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த நிறுவனத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் போது வசதிகள் ஓரளவு நிறைந்த "முதியோர் விடுதிகள்" கிடைக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

சரி! இவ்வழியில் காத்து நிற்பவர்களுக்குச் சில நேரங்களில் அவசர குடியிருப்பு இருப்பிடம், தேவையென்றால் யாது செய்யலாம்?

அழையுங்கள் : 211 அல்லது 416 392 4575 பாதிப்பான மக்களுக்கு இலவசமாக உதவ இந்நிறுவனம் என்றும் தயார் நிலையில் உள்ளது.

வருமானம் குறைந்தவர்களுக்கு மிகக் குறைந்த வாடகையில் வழங்கும் இக் குடியிருப்பு மனைகள் -நல்ல திருப்தியானதாகவும் அமையலாம்.

சில இடங்கள் சகித்துக்கொண்டு குடியிருக்க வேண்டியதாகவும் அமையலாம். ஏற்றுக்கொள்வதோ இல்லையோ என்பது விண்ணப்பதாரியின் முடிவில் தங்கியுள்ளது.

■ ■ ■




காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

# இந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற உள்ள நிகழ்வுகளில் சில...

| | | |
|---|---|---|
| கணபதி ரவீந்திரனின் கனேடியன் திரைப்படம் – கனடா | | July 06, 2007 |
| ஒன்று கூடல் – கோப்பாய் அபிவிருத்திச் சங்கம் – கனடா | | July 07, 2007 |
| வெளிக்கள ஒனறு கூடல் | உடுப்பிட்டி கலாச்சாரச் சங்கம் – கனடா | July 07, 2007 |
| உறுதிப்பூக்கள் | ரொறன்ரோ மத்தி பீல் பிரதேச கலை பண்பாட்டுக் கழகம் – கனடா | July 07, 2007 |
| C.T.R STR FESTIVAL | சீ. ரீ. ஆர் – நட்சத்திர திருவிழா | July 07, 2007 |
| ஒன்று கூடல் | உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம் – கனடா | July 07, 2007 |
| ஒன்று கூடல் | கோப்பாய் அபிவிருத்திச் சங்கம் – கனடா | July 07, 2007 |
| ஒன்று கூடல் | வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் / ஊர்மக்கள் | July 07, 2007 |
| ஒன்று கூடல் | நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் – கனடா | July 07, 2007 |
| ARANGADAL | அரங்காடல் – கனடா | July 08, 2007 |
| Naadaka Chakkaram / நாடகச் சக்கரம் | ஸ்காபரோ தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் – கனடா | July 08, 2007 |
| C.T.R STR FESTIVAL | சீ. ரீ. ஆர் – நட்சத்திர திருவிழா | July 08, 2007 |
| ஒன்று கூடல் | பாடும் மீன்களின் பொழுது | July 08, 2007 |
| ஒன்று கூடல் | பூநகரி அபிவிருத்திச் சங்கம் – கனடா | July 08, 2007 |
| ஒன்று கூடல் | வேலணை மக்கள் ஒன்றியம் – கனடா | July 08, 2007 |
| Senthil Kumaran's Minnal | செந்தில் குமரனின் மின்னல் | July 13, 2007 |
| சுவடுகள் / Suvadukal - 2007 | The University of Toronto at Mississauga, Tamil Students' Association, | July 14, 2007 |
| ஒன்று கூடல் | துன்னாலை கரவை மக்கள் – கனடா | July 14, 2007 |
| Miss Tamil Toronto 2007 | தேவதைகளின் அரசி 2007 – கனடா | July 14, 2007 |
| House leaque Tournament -1 | Mississauga Central Soccer Club - Mississauga | July 14, 2007 |
| A.G.M. ஒன்று கூடல் | இளவாலை சென்ஹென்றிஸ், இளவாலை கொன்மன்ற் பழைய மாணவர் சங்கம் | July 14, 2007 |
| ஒன்று கூடல் | கரவெட்டி கிழக்கு ஐக்கிய மக்கள் சங்கம் – கனடா | July 14, 2007 |
| ஒன்று கூடல் | தாவடி மக்கள் – கனடா | July 14, 2007 |
| ஒன்று கூடல் | மல்லாகம் மக்கள் மன்றம் – கனடா | July 14, 2007 |
| ஒன்று கூடல் | உரும்பராய் பழைய மாணவர்கள் – கனடா | July 15, 2007 |
| சுவாமி விபுலானந்தர் | நினைவு விழா – 2007 – கனடா | July 15, 2007 |
| ஒன்று கூடல் | முரசுமோட்டை, கண்டாவளை மக்கள் ஒன்றியம் – கனடா | July 15, 2007 |
| கலை விழா | இலங்கை தமிழ் முதியோர் சங்கம் – எற்ரோபிக்கோ | July 20, 2007 |
| 10வது உலகத்தமிழ் | பண்பாட்டு மாநாடு - Malaysia | July 21, 2007 |
| கலைவிழா | வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி – கனடா | July 21, 2007 |
| இன்னிசை வார்ப்புகள் – 2007 | இராகாலையம் மியூசிக் அக்கடமி – கனடா | July 21, 2007 |
| ஒன்றுகூடல் | மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி – கனடா | July 21, 2007 |
| ஒன்று கூடல் | குப்பிழான் விக்கினேஸ்வர மக்கள் மன்றம் – கனடா | July 21, 2007 |
| ஒன்று கூடல் | வளலாய் மக்கள் – கனடா | July 21, 2007 |
| பண்ணிசைப் போட்டி | இணுவில் திருவூர் ஒன்றியம் – கனடா | July 21, 2007 |
| நாட்டுக் கூத்து | ஒளித்தட்டு வெளியீடும் நூல் வெளியீட்டு விழாவும் – கனடா | July 21, 2007 |
| Miss Tamil Canada - 2007 | கனடிய தமிழ் அழகி - 2007 | July 28, 2007 |
| குமார்மூர்த்தி அவர்களின் நினைவு நாள் | | July 28, 2007 |
| தேர்த் திருவிழா – ரொறன்டோ வரசித்தி வினாயகர் | | July 28, 2007 |
| திருமுறை மாநாடு - 2007 | ஒன்ராறியோ இந்துசமயப் போரவை – கனடா | July 28, 2007 |
| Thirumurai Mahanadu / திருமுறை மகாநாடு | ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை – கனடா | July 28, 2007 |
| யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி வருடாந்த ஒண்று கூடல் | | July 28, 2007 |
| ஒன்று கூடல் – ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா, USA | | July 28, 2007 |
| ஒன்று கூடல் / Annual General Meeting and Sports | | July 28, 2007 |
| அச்சுநகர் புனித சூசையப்பர் பங்கு மக்கள் – கனடா | | July 28, 2007 |
| உசன் மக்களின் ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும் | | July 29, 2007 |
| திருமுறை மாநாடு 2007 | ஒன்ராறியோ இந்துசமயப் போரவை – கனடா | July 29, 2007 |
| உசன் மக்களின் ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும் – கனடா | | July 29, 2007 |
| ஒன்றுகூடல் - Get-Together | அச்சுவேலி மத்தியகல்லூரி பழையமாணவர் சங்கம் – ரொறன்ரோ | July 29, 2007 |
| Thirumurai Mahanadu / திருமுறை மகாநாடு | ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை – கனடா | July 29, 2007 |
| ஒன்று கூடல் | வட்டுக்கோட்டை சங்கரத்தை மக்கள் – கனடா | July 29, 2007 |
| தமிழர் திறமைப் போட்டி | தமிழீழச் சங்கம் – கனடா | July 30, 2007 |

**இதைவிடவும் அதிக நிகழ்வுகள் ரொறன்ரோவில் நடை பெறுகின்றன. மேலே உள்ளவை inayam.net இல் பதியப்பட்ட நிகழ்வுகளில் சில. உங்கள் நிகழ்வுகளையும் inayam.netஇல் பதிவு செய்வதன் மூலம் இன்னொரு நிகழ்வு அதே நாளில் இடம்பெறுவதை தவிருங்கள்.**

inayam

**www.inayam.net**

info@inayam.net

**416.400.6.406**

# மொய்யெழுதல்



கே. எஸ். பாலச்சந்திரன்

மெய்யெழுதல், அதாவது மெய்யானவற்றையே எழுதல் என்று நான் எழுத, “வீடு” பத்திரிகைக்காரர் “மொய்யெழுதல்” என்று தவறாகப் பிரசுரித்து விட்டார்கள் என்று நினைக்காதீர்கள்.

நான் மெய்யாகவே, மொய்யெழுதல் பற்றித்தான் எழுதப் புறப்பட்டேன்.

மொய்யெழுதல் பற்றித் தெரியாத நம்மவர்களே இருக்கமாட்டார்கள். பிறந்த நாள் விழாக்கள், திருமண வைபவங்கள், திருமண ஒப்பந்த வைபவங்கள், பிறகு அதென்ன.. பூப்பு நீராட்டு விழாக்கள் (இதையே பூப்புனித நீராட்டு விழா என்று சற்று புனிதம் சேர்த்து சொல்வதைக் கேட்டிருக்கிறேன். நீங்கள் கேட்கவில்லையென்றால் நான் அதற்கு பொறுப்பில்லை) - இத்யாதி விழாக்கள் “சமர் காலம்” வந்துவிட்டால்(பொருத்தமான பெயர். எல்லாவற்றிற்கும் சமர் செய்யும் காலம்) வரிசையாக வரும். நம்மவர்கள் இவ்விழாக்களுக்கு கட்டிச் செல்வதற்கு பச்சைக்கரை பட்டு வேட்டியையும், கத்தரிப் பூக் கலர் காஞ்சிபுரம் சாறியையும் தேடி எடுப்பதற்கு முதல், வெள்ளை என்வலப்பை தேட முற்பட்டு விடுவார்கள்.

வாழ்த்து செய்தி எழுதி கடிதம் அனுப்பவல்ல. “மொய்” வைத்து மடித்துக் கொடுக்கத்தான். நாங்கள் வாழ்ந்த நாட்டில் அந்தக்காலத்தில் “பணச்சடங்குகள்” வைப்பார்கள். அதாவது கெட்டு நொந்து போனவர்கள் தங்கள் தேவையை உற்றார், ஊராருக்கு சொல்லி அவர்களிடம் உதவி பெறுவதற்காகவே சடங்கு வைப்பார்கள். நிலை தெரிந்து மற்றவர்களும் கை கொடுப்பார்கள். இந்தச் “சடங்கு” பற்றி ஒரு பத்திரிகையில் நான் எழுதவும் சில வாசகர்கள் அப்படியும் நடப்பதுண்டா என்று கடிதம் எழுதியிருந்தார்கள். அது வேறு ஒரு ரூபத்தில் முன்னர் குறித்த சடங்குகளில், விழாக்களில் கைகளில் “என்வலப்”போடு வரிசையாக காத்திருக்கும் வடிவம் பெற்றிருக்கிறது. அவ்வளவுதான்.

போதாதற்கு அரங்கேற்றங்களிலும் இந்த வரிசை அண்மைக்காலமாக தொடங்கியிருக்கிறது. திருமணம், பிறந்தநாள் விழா, பூப்பு நீராட்டு விழா, அரங்கேற்றங்கள் எல்லாமே தங்கள் வசதிகளை, பணப்பலத்தைக் காட்டும் விழாக்களாக இருக்கும் போது, அவர்கள் செலவழிக்க,“என்வலப்பு” கள் கொடுப்பது அநீதி, அவர்கள் வாங்குவது அநாகரீகம். பரிசுகள் பொருட்களாக கொடுக்கலாம். அதிலும் அவர்கள் தேவை யறிந்து கொடுக்கலாம்.

எல்லோருமே சுவர் கடிகாரங்களுடன், Rice Cooker களுடன் போய் நின்றால் அவர்கள் பக்கிங்காம் அரண்மனையில் உள்ளது போன்று ஒவ்வொரு அறையில் உள்ள சுவர் கடிகாரங்களுக்கு சாவி கொடுப்பதற்கென்றே சம்பளத்திற்கு ஆளை வைக்க வேண்டும். அல்லது அவ்வளவு Rice Cooker களையும் பாவித்து Catering செய்ய வேண்டிவரும்.

ஒரு நண்பர் ஒருவருக்கு நடந்தது. ஏறக்குறைய மூன்று அண்டுகளுக்கு முன்னர் ஒரு நண்பருக்கு அவர் திருமணத்தின்போது அன்பளிப்பாக ஒரு Rice Cooker வாங்கிக் கொடுத்தார். இப்போது இவர் வீட்டில் ஒரு திருமணம் நடந்தது. பல அன்பளிப்புகள் வந்தன. அவற்றின் இடையே அதே Rice Cooker- பெட்டியில் இருந்த கிழிசல் காட்டிக் கொடுத்தது. தங்தவர் வேறொருவர். பெட்டி உடைக்கப்படாமலே கைமாறி மீண்டும் இவர் கைக்கு தூரத்தில் விட்ட பூனைக் குட்டி வீடு தேடி வந்ததுபோல வந்து விட்டது.

பரிசுப்பத்திரங்களைக் கொடுங்கள். அவர்கள் விரும்பிய பொருட்களை வாங்கிக் கொள்ளட்டும். மற்ற இனங்களிலே நடக்கும் திருமண வைபவங்களிலே தங்களுக்கு




என்ன தேவை என்ற பட்டியலே வைக்கப் படுகிறது. எங்கே வாங்கப்போகிறோம் என்று கூட முன்கூட்டியே தெரியத்தருகிறார்கள். இது திருமணங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

திருமணங்களுக்கு நல்ல நூல்களை, இசைத்தட்டுக்களை வாங்கி பரிசளியுங்கள். அவை உங்களை நினைவு வைத்திருக்க உதவும். (விளங்காத புத்தகம் தந்தவர், சகிக்காத பாட்டு CD தந்தவர் என்றாவது ஞாபகம் வைத்திருப்பார்கள்). பிறந்த நாள் விழாக்களில் குழந்தைகளுக்கு பிரயோசனப்படக்கூடிய பொருட்களை, குழந்தைகளின் வயதைக் கருத்திற்கொண்டு வாங்கிக் கொடுங்கள். அறுபது வயது குழந்தைகளின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு நல்ல கைத்தடி வாங்கிக் கொடுக்கலாம். கொடுத்துவிட்டு சற்று தள்ளியே நிற்கலாம்.


“மொய்” என்பதற்கு பெருமை, வலிமை என்றும் பொருள் உண்டு என்று ஒரு தமிழ்ப் பேராசிரியர் கூறுகின்றார். இருப்பவர்கள் பெருமை, வலிமை காட்டுகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு “கை” கொடுங்கள். அது போதும். உங்கள் கையைச் சொன்னேன்.

■ ■ ■

CANADA DAY WISHES



Kennedy/Ellesmere



100 Dundalk Dr.
3 Bed Room, 2 Wash Room
Low Maintenance Fee
No Down Payment
Only $119,500

Harwood / Tawn



4 Bedroom - 2 Washroom
$ 359,000

3BR / 4BR HOME FOR RENT IN SCARBOROUGH

விரும்பிய இடத்தில் விரும்பிய இல்லத்திற்கு....

www.PowerofSaleHome.com

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
Bus. : 416.290.1200 (24Hr.)
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

Suresh Sellathurai
Sales Representative
Dir. : 416.356.7330



Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.

Apex Creation - 647.439.3310



# For All Your Real Estate Needs..

## Lucky Draw for New Car Will be on August,2007

**Buy or Sell through us before August15, 2007 and win a New Car****




- Gorgeous 4 Bdrm Freehold T/H
- No Condo Fees
- Private Garden Backing Unto A Park
- Close to All Amenities
- Call **Sasi** For Details....




- Beautifully Maintained House
- Only 2 Years Old
- Many Upgrades
- Excellent Neighbourhood
- Call **Sasi** For Details....




- Beautifull & Well Maintained House
- Hardwood On Main Floor
- Tastefully Decorated
- Lots Of Upgrades
- Call **Sasi** For Details....



**Sasi Chelvaratnam**
**Sales Representative**
**416.858.4828**





- Brand New House
- 9' Ceiling On Main Floor
- Hardwood Floors, Fireplace
- Upgraded Kitchen Cabinets
- Call **Sasi** for details....




- Less Than Five Years Old
- Beautiful House
- High Ceilings
- Close To Many Amenities
- Call **Sasi** For Details....




- 2 Bedroom Condominium
- 2 Parking Spots & 2 Full Bath
- Over looking Ravine
- Luxurious Building With Indoor Pool
- Call **Sasi** For Details....




- Renovated Detached Home
- Close To School And Shops
- Huge Master Bedroom
- Unfinished Basement
- Call **Sasi** For Details...

**HomeLife GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**
This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE...............

# One Stop for

## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள் (PROMOTIONAL PRODUCTS) கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும் சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்



**PRO MAR**
**Awards & Promotions Ltd**



**www.promarawards.com 416-291 2344**

**585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5**

**The Big choice**
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்

IN WHOLESALE PRICE FOR RETAIL

**80 Nasdane Rd Unit C-59 416-898 4846**

# இன்பம் எங்கே?

ஏறத்தாழ அரை நூற்றாண்டிற்கு முன் சினிமாவில் வந்த ஒரு பாடல் "இன்பம் எங்கே, இன்பம் எங்கே என்று தேடு" மனிதன் வாழ்நாள் முழுவதும் இன்பத்தைத் தேடி ஓடிஓடிக் களைத்து விடுகின்றான். மனிதன் செய்வது எல்லாமே மகிழ்ச்சிக்காகத்தான். வாழ்க்கையின் குறிக்கோள் மகிழ்ச்சி. எது மகிழ்ச்சி என்பதில் வேண்டுமானால் முரண்பாடு இருக்கலாம். ஆனால் குறிக்கோள் மகிழ்ச்சி அல்லது இன்பம் என்பதில் மறுப்பு இருக்கவே முடியாது.

ஒருவருக்கு உண்பதில் மகிழ்ச்சி; இன்னொருவருக்கு விரதம் இருப்பதில் மகிழ்ச்சி. ஆனால் இருவருக்கும் குறிக்கோள் இன்பம். ஒருவருக்கு பொருள் சேர்ப்பதில் இன்பம் ; இன்னொருவருக்கு பொருட்களைத் துறப்பதில் இன்பம். இருவருமே இன்பத்துக்காகவே சேர்க்கிறார்கள்; துறக்கிறார்கள்.இங்கு இன்பத்தின் இருப்பிடத்தை ஆராய முற்படுகிறேன்.சிலர் இயல் பாகவே மகிழ்ச்சியாக இருப்பார்கள். இப்படியானவர்கள் மரபணுக் காரணமாக அமைந்துள்ளனர் எனக்கொள்வர். இப்படி மரபணுவால் இன்பமானவர்களை விடுத்து, வேறு எக் காரணிகளால் மகிழ்ச்சி ஏற்படும் எனப் பார்போம்.

செல்வம் ஓரளவு இன்பத்தைப்பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமேஇல்லை.ஆனால் உணவு, உடை வசிக்க வீடு ஆகியன அமைந்தவிடத்து இதனால் ஏற்படும் இன்பம் கொஞ்சம் சிக்கலானதே. செல்வத்திற்கும் இன்பத்திற்கும் உள்ள தொடர்பில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது - இது இல்லாதவர்க்கு உலகமே இல்லை என்ற வள்ளுவர் வாக்கு.

அருள்இல்லார்க்கு அவ்வுலகம்இல்லை
 பொருள்இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு (247)

ஆனால் பொருள் அதிகம் இருந்தால் இன்பம் இல்லத்தைத் தேடிவரும் என்றால் அது தான் இல்லை. கடந்த நூற்றாண்டில் கைத்தொழில் நாடுகளில் அபரீதமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் அந்நாடுகளில் மக்கள் மனதில் மகிழ்ச்சி குழம்பம் அடைந்துள்ளது என அறியக் கூடியதாயுள்ளது.

## 2. ஆசை

எதிர்பார்ப்பு:- மனிதனின் மனதில் ஏற்படும் ஆசைகள் அதனால் ஏற்படும் எதிர்பார்ப்புகள் ஒருவருடைய மகிழ்ச்சியை, இன்ப நிலையை நிர்ணயிக்கிறது எனக் கண்டுள்ளார்கள். ஆசை அல்லது எதிர்பார்ப்பு பணத்திற்கு மட்டுமல்ல; வேறு பலவற்றில் அது இருக்கலாம். சிலர் நண்பர்களை, குடும்பத்தை, தொழிலை, ஆரோக்கியத்தை இப்படிப் பலவற்றை நோக்கி இருக்கலாம். ஒருவருடைய எதிர்பார்ப்பும் அவர் அடைந்துள்ள இலக்குகளுக்கும் இடைவெளி குறையக் குறைய மகிழ்ச்சியான வாழ்வு அமையும். இலக்குகளுக்கும் எதிர்பார்ப்புக்கும் இடைவெளி அதிகரிக்காமல் இருப்பது அவசியம். பணக்காரருக்கு எதிர்பார்ப்பு அதிகரிக்க அதிகரிக்க வாழ்வில் வேதனையும் அதிகரிக்கும். மனிதனின் சுபாவம், பொருள் சேரச்சேர ஆசையும் எதிர்பார்ப்பும் துரத்திக்கொண்டே போகும். இதனைப் புரிந்துதான் வள்ளுவரும்

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (341)

எதில்எதில் ஆசைவைக்கின்றோமோ அதில் அதில் துன்பம்தான் இருக்கும். எனவே மகிழ்ச்சிக்கு எதிர்பார்ப்பிடைவெளியை குறைப்பதுதான் சிறப்பு.

## 3. அறிவு,

பொதுவாக அறிவாளிகள் கூடியமகிழ்ச்சியுடன் இருப்பார்கள் என்று எண்ணச் சந்தர்ப்பமுண்டு. அதுவும் அறிவுள்ளவர்கள் சராசரி மக்களிலும் கூடியஊதியம் பெறுபவராக இருப்பார்கள் என எண்ணுவதற்கு இடம் உண்டு. ஆனால் வல்லவர்களுக்கு எதிர்பார்ப்பும் அதிகமாய் இருக்கும். மற்றவர்களுடன் ஒத்துவாழ்வதற்கு அறிவு ஒரு அளவுகோலாக இருக்க முடியாது. உதாரணத்திற்கு புத்திசாலியான பையன் 90 புள்ளிகள் பெற்றுவிட்டு 100 புள்ளி கிடைக்கவில்லையே என வருந்துவதை எல்லோருமே கண்டுள்ளோம். இதனாற் தான் சினிமாவில்"புத்திஉள்ள மனிதர்எல்லாம் வெற்றி காண்பதில்லை வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலி இல்லை" எனும் பாடல்

குமார் புனிதவேல் பக்கம்

தனக்குவமை இல்லாதான்
 தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது 7)
 என்று குறிப்பிட்டார்.



தோன்றியதாக ஞாபகத்திற்கு வருகிறது.

## 4. அழகு:

நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும் அழகியவர்கள் கூடியமகிழ்ச்சியாய் இருப்பதாய்க் கணிக்கப்பட்டுள்ளது. உலகம் அழகானவரிடம் சற்று கருணையுடன் நடப்பதாகக் கொள்ளவேண்டும். அழகு தரும் கவர்ச்சி எல்லாரும் அவரை விரும்ப அவர் சுயம் வரம் வைத்து விரும்பியவரை அடையமுடியுமல்லவா? அழகானவர் முகங்கள் இரு பக்கமும் ஒத்ததாக அமைந்துள்ளது. அவர்கள் மரபணுவும் நன்றாக இருப்பது காரணமாகலாம். எனவே அழகு மகிழ்ச்சிக்கு ஒரு காரணி.

## 5. சினேகிதம்:

ஒரு பெரிய நகரில் வறுமையின் கோரப் பிடியில் வாழ்பவர்கள் அடிப்படைத் தேவைகள் ஓரளவு நிறையும் பட்சத்தில் நடுத்தர, பணக்கார வர்க்கத்தாரிலும் கூடியமகிழ்ச்சியுடன் வாழ்வதாக கணிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் அவர்கள் வாழ்க்கையின் அடித்தளத்தில் ஒருவருக்கொருவர் உதவுவதுடன் சினேகபூர்வமாக வாழ்வது தான் மகிழ்ச்சியாக உள்ளார்கள், எனவே நீங்களும் இன்பமாக வாழ்வதற்கு அதிகம் சினேகிதத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

## 6. திருமணம்:

இங்கு ஒரு சுவையான கேள்வி உண்டு. மகிழ்ச்சியானவர்கள் திருமணம் செய்கிறார்களா? அல்லது திருமணம் செய்தவர்கள் அதிகம் இன்பமாக உள்ளார்களா? எது எப்படி இருப்பினும் திருமணம் ஆனவர்கள் கூடியமகிழ்வுடன் உள்ளதாக 30,000 ஜெர்மனியர்களிடம் நடந்த ஆய்வில் கணிக்கப்பட்டுள்ளது. அதே ஆய்வில் மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் கூடியஅளவு திருமணம் செய்வதாகவும் காணப்பட்டுள்ளது.

## 7. இறை நம்பிக்கை:

இங்கு நான் மதநம்பிக்கை எனும் சொல்லைப் பாவிக்கவில்லை. இறைநம்பிக்கையையே பாவித்துள்ளேன். காரணம், மதம் இறை நம்பிக்கையைச் சந்தைப்படுத்தும் அங்காடி.அதில் போட்டி,பொறாமை போன்ற வற்றுடன் கொலை, கொள்ளை கூட உள்ளது. சிலர் நான் மதத்திற்கு எதிரானவன் என்று கூடச் சொல்வார்கள். உண்மை யாதெனில் மதம் மக்களை மதம்பிடிக்கச் செய்து பல தீமைகளைச் செய்கிறது. இறை நம்பிக்கை அப்படி அல்ல. துன்பம் வரும் வேளையில் இறை நம்பிக்கையுள்ளவர்கள் மனதில் கூடியநிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படுகிறது. ஆய்வுகளின்படி இறைநம்பிக்கையுள்ளவர்கள் கூடியகாலம் வாழ்வதாகவும் கண்டுள்ளார்கள். மனக்கவலைக்கு மருந்து இறைநம்பிக்கை. இதையே வள்ளுவரும்

## 8. கொடை:

கொடை வருவதற்கு காரணம் தயை. பல ஆய்வுகளில் நன்கொடை தருபவர்கள் அதிகம் மகிழ்ச்சியாக இருப்பதாக கண்டுள்ளார்கள். இங்கும் ஒரு கேள்வி வருகிறது. அவர்கள் கொடுப்பதால் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா அல்லது மகிழ்ச்சியாக உள்ளவர்கள் அதிகம் கொடுக்கிறார்களா? என்பது. பொதுவாக தமது செல்வத்தை உறவுகளுடன் நண்பர்களுடன் பகிர்கிற வர்கள் கூடியமகிழ்ச்சியாகக் காணப்பட்டார்கள். அது பெற்றுக்கொண்டவர் புகழ்ச்சி காரணமாகவும் இருக்கலாம். எப்படியாயினும் ஈகையில் மகிழ்ச்சி உண்டு என்பதில் சந்தேகமில்லை.பொருள் ஒருபோதும் நிலையானதல்ல அதை ஈவதால்வரும்இன்பத்தை, இழந்தவர் கொடுக்காததால் பொருளை இழந்தவராவார் என்று வள்ளுவரும் பொருள்படக் கூறியுள்ளார்.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் 228)

எனவே கொண்டு செல்லமுடியாத செல்வத்தில் கொஞ்சத்தையாவது கொடுத்து மகிழ்ந்திடுங்கள்.

## 9. வயது:

இன்பமாயிருப்பதற்கும் வயதிற்கும் தொடர்பு உண்டா என ஆய்வு செய்தவேளையில் முதியோர் கூடியமகிழ்ச்சியாயிருப்பதைக் கண்டுள்ளார்கள். வியப்பாயிருக்கிறதல்லாவா? முக்கிய காரணம், எதனில் முட்டினால் தலைவலிக்கும், எதனில் முட்டினால் இனிமையாயிருக்கும் என்பதை அனுபவத்தால் அறிந்துள்ளமையால் அவர்கள் மனத் திருப்தியுடன் இருக்கிறார்கள். அதனால் கூடியமகிழ்ச்சியாயும் இருக்கிறார்கள். இந்த முடிவு ஒத்த நிலையில் உள்ள இளையவருக்கும் முதியவருக்கும் இடையில் நடத்தியதில் பெற்றமுடிவு.

முதியவர்கள் குறைய எதிர்பார்ப்புடனிருப்பதனால் இரண்டாவதாகக் குறிப்பிட்ட எதிர்பார்ப்பு இடைவெளி குறைவாக இருக்கும். மேலும் 85 வயதில் ஒருவர் தன் மனைவியைக் கட்டி அணைத்து விடைபெற்று எங்காவது சென்றால் ஏற்படும் உணர்வுகள் 25 வயதில் ஏற்படுவதிலும் எவ்வளவோ மாறுபட்டதாயிருக்கும். இதுவே மன அமைதிக்குக் காரணம். மேலுள்ளவற்றைப் பார்க்கையில் வாழ்க்கையில் இன்பம் மிகுவாக இருப்பதற்கு ஓரளவு செல்வமும் குறைந்த எதிர்பார்ப்பும் கூடியஉறவுகளுமே காரணம் என்று தீர்மானிக்கலாம். மற்றவர்களைப் பார்த்து சிரிக்காமல் மற்றவர்களுடன் சேர்ந்து சிரிப்பவர் இன்பம் கூடி நிலைத்து நிற்கும் என்பதை மறக்கலாகாது.

■ ■ ■


KESAVAN LAW OFFICE



- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்.

THANGAVEL M. KESAVAN
Barrister & Solicitor

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
TEL: (416) 754-9843
Fax: (416) 754-2362




## பணத்தை மீளப்பெறுவதற்கான புதிய ஆயுட்காப்புறுதித் திட்டம்

New “Guaranteed Return” whole Life Insurance

ஆயுட்காப்புறுதித் தொகையின் அரைவாசித் தொகை 65ஆவது வயதில் மீளப் பெறமுடியும். மரணம் ஏற்பட்டால் கட்டிய பணம் முழுவதும் ஆயுட்காப்புறுதித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்.

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி**
(Universal Life Insurance)

**வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி**
(Non Medical Life Insurance)

**கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
(Critical Illness Insurance)

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்**
(RESP)

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LILAND INSURANCE INC.

RBC Insurance



# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

digi Media Creations

## உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு...

# காப்புறுதி உள்ளும் புறமும்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

கனடாவைப் பொறுத்தவரை மக்கள், பல்வேறு வகையான காப்புறுதித் திட்டங்களை எளிதாகப் பெறக்கூடிய நிலையில் உள்ளனர். ஆனால், அவர்கள் இந்தப் பணத்தைத் தகுந்த வழியில் சரியான திட்டங்களுக்குச் செலவு செய்கின்றார்களா என்பது தெரியாது.

கனடாவின் காப்புறுதி நிறுவனங்கள் பெருமளவில் பணம் சம்பாதிக்கின்றன. வெளிநாடுகளில் உள்ள காப்புறுதி நிறுவனங்களை வாங்கும் அளவிற்கு பணவசதியுடன் இருக்கின்றன. 2004ம் ஆண்டு Manulife Financial Corp. நிறுவனம் அமெரிக்காவில் உள்ள John Hancock Financial Services எனும் நிறுவனத்தை வாங்கியுள்ளது.

கனடாவின் சில பெரிய காப்புறுதி நிறுவனங்கள் வேறு நிறுவனமாக மாறியுள்ளன. அண்மையில் Clarica நிறுவனத்தை Sun life Financial வாங்கியுள்ளது. Canada Life நிறுவனத்தை Great West Life நிறுவனம் வாங்கியுள்ளது.

குடும்பத்தின் பாதுகாப்பை விரும்பும் மக்கள் அதாவது பழமைபேணும் மக்கள் மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் காப்புறுதித் திட்டங்களை வாங்குவதில் தயங்குவதில்லை. எனவே காப்புறுதித் திட்டங்களுக்குச் செலவிடும் பணத்தை விரயமாக்காமல் உகந்த திட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.உங்களுக்குத் தேவைப்படும்போது பயனளிக்காத திட்டங்களுக்குப் பணத்தைச் செலவு செய்யாதீர்கள்.

பெரும்பாலான மக்கள் காப்புறுதி முகவர்களின் வியாபார யுக்திக்காகப் பாவிக்கப்படும் அறிவுரைகளைக் கேட்டு தேவையற்ற திட்டங்களை வாங்குவதுண்டு. ஆனால்



எந்தத் திட்டத்தைப் பற்றியும் உண்மையான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதில்லை.

பல காப்புறுதித் திட்டங்களை காப்புறுதி நிறுவனங்கள் அற்ற வேறு நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன. அதாவது காப்புறுதித் திட்டங்களைக் கடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள், வங்கிகள், கார்வாடகைக்கு விடும் நிறுவனங்கள், பிரயாண முகவர்கள் போன்ற எல்லோரும் விற்பனை செய்கிறார்கள். அதாவது கார் வாடகைக்குப் பெறும்போது அத்துடன் காப்புறுதியும் வாங்கிக்கொள்ள முடியும். அல்லது பிரயாணச்சீட்டு வாங்கும்போது மருத்துவக் காப்புறுதி,ஆயுட்காப்புறுதி போன்றவற்றை வாங்க முடியும்.

ஆனால் இந்தத் திட்டங்களை விற்பனை செய்பவர்கள் காப்புறுதி சம்பந்தமான எதுவும் தெரியாதவர்கள். நீங்கள் வீட்டுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கும்போதுகூட உங்களுக்கு விற்பனை செய்யப்படும் உத்தரவாதங்கள் (Extended Warranties) ஒரு வகையில் காப்புறுதித் திட்டங்கள்தான். எந்த வியாபாரத்தைப் பார்த்தாலும் அங்கே ஒரு காப்புறுதித் திட்டத்தை விற்பனை செய்வதன் மூலம் வியாபாரத்தை வழப்படுத்திக் கொள்கின்றனர். காப்புறுதி முகவர் அல்லாத மற்றைய விற்பனை முகவர்கள் காப்புறுதி பற்றிய விளக்கங்களை மக்களுக்குப் புகட்டுவதால் மக்கள் குழப்பமடைகின்றார்கள்.

‘Insurance is a game of language’

காப்புறுதி என்பது வார்த்தைகளுக்கு முக்கியமளிக்கும் ஒரு திட்டம். எனவே, காப்புறுதியின் இழப்பீடு ஒன்றைப் பெறும்போது காப்புறுதியிற் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளின் மதிப்பையும் நீங்கள் உணர்வீர்கள். காப்புறுதித் திட்டங்களில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள் காப்புறுதி முகவர்களுக்குக் கூட நன்றாகத் தெரிந்திருப்பதில்லை. ஒரு காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, அந்தக் காப்புறுதித் திட்டப் பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் எல்லா விடயங்களும் கவனித்துக் கொள்ளப்பட வேண்டியவை.

உதாரணமாக ஒரு ஆயுட் காப்புறுதித் திட்டத்தைப் பெறும்போது அதில் உங்கள் பெயர் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா? உங்கள் பிறந்த திகதி சரியாக உள்ளதா? என்பன போன்ற அடிப்படையான விடயங்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். காப்புறுதி முகவர் ஒருவர் ஒரு திட்டத்தை உங்களுக்குத் தந்து எல்லாம் சரியாக உள்ளதா என்பதைப் பரிசீலனை செய்த பின்னரே நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டதாகக் கையொப்பம் இடவேண்டும். எந்த ஒரு காப்புறுதித் திட்டமும் நீங்கள் சரியென்று ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் திருத்தம் செய்து தருவார்கள். அல்லது கட்டிய பணத்தைத் திரும்பித் தருவார்கள்.

தற்போது மிகவும் பிரபல்யமாக விற்பனை செய்யப்படும் கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டத்தைப் (Critical Illness Insurance) பெற்றுக் கொள்ளும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டத்தில் எந்த எந்த நோய்கள் ஏற்பட்டால் காப்புறுதித் தொகை பெறமுடியும், அல்லது சில நோய்களுக்குக் காப்புறுதி செய்யமுடியாது என்று இருக்கும். அதாவது எந்த நோய் ஏற்பட்டால் காப்புறுதி பெறமுடியும். எத்தனை நாட்களின் பின்பு காப்புறுதி பெறமுடியும் போன்ற விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

■ ■ ■



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



புகைப்பிடிக்காத 30 வயதுடைய
ஆணுக்கு $200 000 காப்புறுதி
$17.28 மட்டுமே! (T10. R.C.)

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

## Life Insurance

### Critical Illness Insurance



## Disability Insurance
## Mortgage Insurance

**RRSP - Start from $25**
Loan approval within 24hrs - Bad credit no problem
**RESP - Start from $25**
(20%-40% Government Grant + 15% Company Bonus)

INSURANCE SERVICE INC.
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200



# AtoZ SOLUTIONS

FOR EVERY HUMAN PROBLEM THERE IS ONE SOLUTION

- Real estate
  Mortgage
- Bankruptcy
- ODSP
- Pension:
  CPP Disability
  Old Age pension
  CPP
  Widowed Spouses
  Alloowance
  Welfare
- Accident Benefit
  Traffic Tickets
  Physiotherapy
- Immigration
  sponsorship
  Appeal
- Physiotherapy

885 Progress Ave, Suite 216
Scarborough (Markham & 401)

**Tel: 416-431-7171**



Tam Sivathasan
Broker of Record
416 7596000
w w w . v e e d u . c o m
VEEDU REALTY INC. BROKERAGE
$359,900
Taunton/ Baycliffe
Gorgeous 2-Year New, Luxury Master Ensuite, Custom Centre Island and Pantry in Kitchen, Sundeck, Gazebo, French Doors And Much More.. You Have To See To Appreciate.
$399,900
Markham/16th Ave.
Gorgeous, Spacious And Perfect Home. Stainless Steel Appliances (Fridge, Stove, B/I D.W.), Ceramic B/Splash, Strip H/Wood Floors
SOLD
SOLD
We have SOLD all our LISTINGS!! and now looking for MORE....
Call us if you want your house SOLD... this fast!!
Upgrades, Roof Reshingled (2001). New Sun Deck (2006), Brdlm (2006), Driveway (2006)
Karunahkaran Manickanadarasa*
Gop Kalaeswaran*
Bayview & Wellington
A Stunning Brand New Townhouse In A Great Neighborhood, Close To All Amenities, Cherry Hardwood Throughout Main Floor & Master's Bedroom, Spent Thousands On Upgrades, Property Shows A+++
Suba Aynkharan*
$329,000
Weston Rd/Rogers
'Neat & Clean', Renovated With Neutral Decor, Hardwood Floors Through-Out, Finished Basement With Walk-Out, Cold Cellar W/ Cantina, Large Kitchen, Close To Schools, Ttc, Malls & Parks. 'Pride Of Ownership', Bright Home
Merlyn D'Costa*
$309,900
Bayview/Wellington
Brand New Town House, Less Than 3 Months Old. Tastefully Decorated & Spacious. Kit.W/Breakfast Rm. Close To All Amenities. Shows Very Well A+++. Just Move In And Enjoy!!!!!
Suba Aynkharan*
Real Estate Classes to Begin soon...
Guidance provided by experienced professionals
Enquire at CALL:
416-759-6000
* Sales Representative
** Broker
... REALTORS without BORDERS! ™

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborough, ON

BUY AND SELL HOMES AND BUSINESS
0 dwn mortgage avail.
ALMOST NEWLY REFINISHED Ax 1200 sf
3 bdrm/2 wsrm new wsrm newly refinished wood floor, freshly newly painted upgraded kithen ensuite laundry backsplash and many more
MARKHAM
3Bdrm
CL TO SCHOOL SHOPING
ALL AMENITIES
$324 900
Commercial ...
land...
..100 + Acres
Farm land
.build your
dream home
HIRING NEW / EXP REAL ESTATE
AGENT JOIN THE
WINNING TEAM AND BECOME
TOP PRODUCERS
Century 21
Brokerage*
Professional Choice REALTY INC.
200 Consumers Rd Suite 410. TORONTO, ONT. M2J 4R4
PAT PUSHPAKANTHAN
Broker of Record/Owner
OFF: 416 493 2100
Dir: 416 894 1187
Or 416 490 SOLD
TOP PRODUCER
5 YEARS*
EXPERIENCE!
TOTAL COMMISSION SOLUTION 2.5%**
^Based on your yearly sales
* BY INDIVIDUAL PERFORMANCE from also Previous century21 company
* EACH OFFICE OWNED & OPERATE SEPERATELY

# மக்களின் சேமிப்புப் பழக்கம் குறைகின்றது

மக்களின் சேமிப்புப் பழக்கம் கடந்த 50 ஆண்டுகளில் மிக மோசமான அளவுக்கு வீழ்ந்துள்ளது.

இதற்கு வருமானத்தின் வளர்ச்சி குறைவாக இருப்பதும் அதிகரிப்பாகஉள்ள வட்டி வீதங் களும் மக்களின் கடன் சுமை அதிகரிப்பு கடந்த காலங்களில் மிக அதிகமாக இருப் பதும் காரணம் எனப்படுகிறது.

மக்களின் சேமிப்பு வெறும் 2 வீதம் என்ற அளவுக்கு குறைந்துள்ளது. இது 1960களில் இருந்த பொருளாதார வீழ்ச்சியுடன் ஒப்பிட் டுப் பார்க்கும் அளவிற்கு உள்ளது என்று வங்கியியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

1997 இலிருந்து மக்களின் வருமானம் தற் போது உள்ள அளவிற்கு ஒருபோதும் பாதிக்கப்பட்டதில்லை. இதைப்போன்றதொரு நிலை இங்கிலாந்திலும் நோக்கப்பட்டுள் ளது.

இதே போல அவுஸ்திரேலியாவில் மக்கள் கடன்படும் அளவு அதிகரித்திருப்பதும் நோக்கப்பட்டுள்ளது. அதுவும் 2 வீதமாயி ருந்த தனியார் கடன் வழங்கல் 15 வீதமாக மாறியுள்ளது.

உலகத்தில் சற்று முந்தைய காலப் பகுதியில் ஏமாளி நாடென்று கருதப்பட்ட ரசியாவில் நிலை மாறியுள்ளதும் நோக்கத் தக்கது. ரசியாவில் வீடுசார் வாங்கும் திறன் 12 விழுக்காடாக உள்ளது.

ரசியாவின் பொருாளதரம் மிகவும் திடமாக வளர்ந்து வருகதாக நோக்கப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் இந்த ஆண்டு மட் டும் 7.2வீத பொருளாதார வளர்ச்சியை ரசியா கண்டுள்ளது.

கடந்த பொருளாதார ஆண்டில் ரசிய மக் கள் 11.6 வீதமளவிற்கு வீட்டுப்பாவனைப் பொருட்களை வாங்கியிருக்கிறார்கள். இது அவர்களின் தொழில் முதலீட்டைவிட அதிக மாக பொருாளாதார வளர்ச்சிக்க உதவி யுள்ளது எனப்படுகிறது.

இப்படி ரசிய பொரளாதார திட நிலையில் இருப்பதை தொடர்ந்தும் மேற்கு நாடுகள் சும்மா பாரத்துக்கொண்டு இருக்குமா? மீண் டம் ஒரு குளிர் யுத்தம் தொடங்குமா என்றும் பொருளயில் வல்லுனர்கள் அஞ்சு கிறார்கள்.

■ ■ ■



• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi